T.i.12.c. 102

R.R. No. 34.1.3.1906.

[illegible]

[illegible]

[illegible]

DIGITIZED

R66
N06
116957

ஓம்

தத்ஸத்

பரப்ரஹ்மணே நம:

மதுஸூதன ஸரஸ்வதீ ஸ்வாமிகளருளிச்செய்த

# ஸித்தாந்தபிந்து.

இது

சன்னிலக்ஷணக்கா, வக்ஷஜபுரம்

பிரம்மஸ்ரீ. வி. வா. இராமசந்திர சாஸ்திரியார்

அவர்களால்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு,

சென்னை, ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர்

கோ. வடிவேலு செட்டியாரவர்களாலும்,

ம. சண்முக முதலியாரவர்களாலும்,

செவ்வியநடையிலெழுதப்பட்டு,

சென்னை, வேப்பேரி

கமலநாயகி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1906.

All Rights Reserved.

இதன் விலை, அணா 10.

Rbb
N06
116975

To

*M. R. Ry.*

**P. Rajarathna Moodr. Avl. B.A.,**

a Presidency Magistrate in the

CITY OF MADRAS.

A man of towering intellect who combines in himself, the virtues of the East and the culture of the West, a gentleman every inch and who is the pride of our Hindu community.

**THIS SMALL WORK**

is dedicated

on account of his profound knowledge of the Adwaita Vedanta Philosophy of the Hindus and as a humble token of affection and esteem.

BY THE PUBLISHERS.

ஓம்

தத்ஸத்

பரப்ரஹ்மணே நம:

# முகவுரை.

---

எக்காலத்தில் தருமத்திற்குக் குறைவும் அதர்மத்திற்கு அபிவிருத்தியு முண்டாகின்றனவோ அக்காலத்திற் பரமேசுவரன் காலதேசநிமித்தங்களுக் கேற்றவாறு வந்தவதரித்து அதருமத்தைக் குறைத்துத் தருமத்தை யபிவிர்த்தி செய்கின்றா ரென்று பெருநூற்கள் கூறியவாறு, பரமேசுவரன் சங்கரபகவத் பாதாசாரிய சுவாமிகளாகவும் அவதாரஞ் செய்தனரென்பதும் மிகுபிரசித்தம். அவர் இற்றைக்கு ஏறக்குறைய 2000 வருடங்கட்கு முன்னர்க் கேரளதேசத்தில், திருவாஞ்சிக்களத்திற் கடுத்துள்ள காலடி யென்னுங் கிராமத்திலவதரித்து இளமையிலேயே துறவறத்தை மேற்கொண்டு கோவிந்த பகவத் பாதாசாரியர் வாயிலாகப் பிரஹ்மோபதேசம் பெற்று அவைதிகங்களான சார்வாகம், இருவகைச் சமணம், நால்வகைப் பௌத்தம், காபாலிகம், பைரவம் முதலிய மதங்களை நிராகரணஞ் செய்து அத்வைத சித்தாந்தத்தைப் பிரசித்தப்படுத்தியதோடு அதனைப் பின்னுள்ளாரு மறிந்து சர்வதுக்க நிவிர்த்தியும் பரமானந்தப் பிராப்தியும் அடைதற் பொருட்டு

* பிரஸ்தானத்திரய பாஷியம், சகஸ்திரநாம பாஷியம், அஸ்தாமலக பாஷியம், விவேக சூடாமணி, ஆத்மானாத்ம விவேகம், ஆத்மபோதம், வாக்கியவிருத்தி, சிவானந்த லகிரி, சௌந்தரிய லகிரி, சிவபுஜங்கம், ஹரிமீடை, விஞ்ஞான நௌகா, மநீஷாபஞ்சகம், விவேகசட்கம், தட்சிணாமூர்த்தி யஷ்டகம், தசகம் முதலிய நூற்களையும் அருளிச் செய்தன ரென்பதூஉம் பிரசித்தம்.

இப்பாஷிய முதலியவைகளுள் சில வறிதற்கரியன வாயும், சில வறிதற்கெளியனவாயு மிருக்கின்றன. அறிதற் கெளியனவாயிருக்கும் நூற்களுள் தசகமென்பதூஉம் ஒன்று. அஃது இந்நூலின்கண் "நபூமி: நதோயம்" என்னும் சுலோக முதல் "நசைகம் ததந்யத்" என்றவையீறுள்ள பத்துச் சுலோகங்களாம். அந்தத் தசகத்தின் வியாக்கியானந்தான் சித்தாந்தபிந்து வென்னு மிந்நூல். அச்சுலோகம் பத்துனுள் முதல் மூன்று சுலோகங்களால் வாதிவிவாத நிராகரண பூருவகமாகத் த்வம்பதார்த்த நிருபணஞ் செய்யப்பட்டிருக்கின்றது. ஏனைய சுலோகங்களால் தத்பதார்த்த விஷயமான வாதங்கள் நிராகரணஞ் செய்யப்பட்டு அதனார்த்த நிர்த்தாரணமும், வாக்கியார்த்த நிர்ணயமும், அதன் பிரயோசனமுஞ் சங்கிரகமாகச் செய்யப்பட்டிருக்கின்றன.

சங்கரபகவத் பாதாசாரிய சுவாமிகளது சிஷ்யப்பிர சிஷ்யபரம்பரையில் வந்த மதுசூதன சரஸ்வதி யென்னும்

* பிரஸ்தானம்—வழி; திரயம்—மூன்று. இவை உபநிஷத்து, கீதை, வேதாந்தசூத்திரங்களென்று மூன்றாமாம்.



பெரியார்தாம், சித்தாந்த பிந்து வென்னும் இந்நூலை இயற்றியவர். இதன்கண் அத்வைதத்தின் விஷயம் யாவும் எளிதி லறியுமாறு சங்கிரகமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இவர் இற்றைக்கு ஏறக்குறைய இருநூறு வருடங்கட்கு முன்னர் உத்தரதேசத்தி லிருந்தனரென்று வித்வான்களது வியவகாரத்தினாற் றெரியவருகின்றது. இவருக்கு விசுவேசுவர சரசுவதி குருவென்றும், இராமசரசுவதி பரமகுருவென்றும், மாதவசரசுவதி வித்தியா குருவென்றும் தெரியவருகின்றன. இவரது வரலாற்றைக் கிரமமாக அறிதற்குரிய ஏதுக்கள் ஒன்றுங்கிடைத்தில.

இம்மதுசூதன சரசுவதியாரா லியற்றப்பட்டவைகள் அத்வைதசித்தி, சம்க்ஷேபசாரீரக வியாக்கியானம், கீதையின் கூடார்த்ததீபிகை யென்னும் வியாக்கியானம், சிவமகிம்நஸ் தோத்திரத்தின் சிவவிஷ்ணுபரமா [illegible], ஆனந்த மந்தாகினி யென்னும் கிருஷ்ண பரமான ஸ்தோத்திரம், பிரஸ்தான பேதமென்னும் அத்வைதப் பிரகரணம், பக்திரசாயன மென்னும் பக்தி சாஸ்திரம், சித்தாந்தபிந்து வென்னும் தசசுலோகியின் வியாக்கியான முதலியவைகளாம்.

தசகமென்னுந் தசசுலோகியின் வியாக்கியானமாகிய சித்தாந்தபிந்துவிற்குப் பிரம்மானந்த சரஸ்வதி யென்பவர் டீகாசெய்திருக்கின்றனர். அந்த டீகாவி (விளக்கவுரையி) னின்றுஞ் சிலவிஷயம் அத்தியாவசியகமாய் வேண்டியெடுத்து இப்புத்தகத்தின் குறிப்புரையி லெழுதப் பட்டிருக்கின்றன.

சித்தாந்தபிந்து வென்னும் இந்நூல், நன்னிலத் தாலுக்கா, விஷ்ணுபுரம் வியாசசூத்திர சங்கரபாஷியத் தமிழ்மொழிபெயர்ப்பாசிரியரும், தார்க்கிக சிரோமணி அப்பா சாஸ்திரியவர்கள் சிஷ்யரும், தௌஹித்திரருமாகிய பிரஹ்மஸ்ரீ இராமசந்திரசாஸ்திரியாரவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

யாங்கள் இதனை செவ்வியகடையிலெழுதி யச்சவாகனமேற்றி வெளியிட்டனம். இதன்கண் அத்தியாவசியமாய் வேண்டுமிடங்களில் இருதலைப்பிறைக்குள் அருத்தமும் விளக்கவேண்டிய விடங்களில் வேண்டிய வளவு சுருக்கமாகக் குறிப்புரையு மெழுதப்பட்டிருக்கின்றன.

இந்நூலிலுள்ள விஷயம் மனவுணர்வுடைய வொவ்வொருவரு மறிந்துய்வதற்குப் பரமசாதனமா யுள்ளதென்பது இதனது அநுக்கிரமணிகையினு லினிது விளங்கும். இந்நூலிலுள்ள விஷயம் விசாரசாகரம் முதலிய நூல்களில் மேற்கோளாக வெடுத்துக்காட்டி யிருப்பதனாலேயே இதனுயர்வும் நன்கு விளங்கும். இந்நூல் ஆத்மாநாத்ம விசாரஞ் செய்து அநாத்மாகார விருத்தி நீங்கி இடையீடின்றி ஆத்மாகார விருத்தியினால் தமதுநிஜசொரூபத்தை யுணர்ந்து ஆனந்தாகாரமாயிருக்க விரும்பும் ஒவ்வொருவர் கையிலும் இன்றியமையாதிருக்கத்தக்கதென்பது இந்நூலின் இரண்டொரு பக்கத்தைப் படிப்பதினால் செவ்வனே விளங்கும்.



இந்நூலின்கண் எங்களது பிரம (பிராந்தி)ப் பிரமாதங்களாற் பிழைகள் நேரிட்டிருப்பின் அவற்றை அத்வைத சிரோமணிகள் அன்புகூர்ந்து தெரிவிப்பாராயின் அப்பிழைகளை மறுபதிப்பிற்றிருத்தியச்சிடுவதுடன் அவர்களுக்கு வந்தனமு மளிக்கப்படும்.

எங்கள் கருத்திற் கிசைந்தவண்ணம் தேக சிரமத்தை யொருபொருளாகக் கருதாது வடமொழியிலுள்ள இந்நூலைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்த ஸ்ரீ இராமசந்திர சாஸ்திரியாரவர்களது நன்றி யெந்நாளும் மறக்கத்தக்க தன்றாம்.

தமிழுலகம் அத்வைதசித்தாந்த தாத்பரியத்தைச் சுருக்கமாக வெளிதிலுணர்ந்துய்யுமாறு இந்நூலைச் சம்ஸ்கிருதத்தினின்று தமிழில் மொழிபெயர்த்தச்சிட்டுய்யுமாறு பிரேரேபித்த பரமேசுவரனே இஃதெந்நாளும் நிலவுமாறும் அருள்புரிவாராக.

இதிற் பிழையுளதாயின் உலகம் பொறுக்க.

சென்னை, 3-7-05. } வே-வ.
ம-ச.

உ

சிவமயம்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 9 | 5 | யில்லை | முடையனவன்று |
| 14 | 12 | ஆத்மாவானது | ஆத்மாவினது |
| 27 | 6 | பிருத்தி | பிருத்திவி |
| 29 | 13 | நிர்தர்மம் | நிர்த்தர்மம் |
| 41 | 17 | சைதன்னிய | சைதன்னியம் |
| 45 | 18 | டாதலால் | டானதால் |
| 49 | 21 | நியம | நியமத் |
| 73 | 2 | (ஆ) பிரஹ்மத்துடன் | பிரஹ்மத்துடன் |
| 87 | 1 | பீனம் | பீனம்— |
| 91 | 12 | பிரகாசமானந்த | பிரகாசமானஆனந்த |
| 96 | 5 | இரண்ணியகற்பரோ | இரண்ணியகர்ப்பரோ |
| 103 | 12 | தத்தம்மால் | தத்தமால் |
| 108 | 21 | றம் | றம்) |
| 117 | 23 | ஆவ | ஆவா |

ஓம்

தத்சத்

பரப்ரஹ்மணே நம:

# சித்தாந்த பிந்துவின்

## அநுக்கிரமணிகை.


பக்கம்.

துவய்பதார்த்த நிரூபணப் பிரகரணம். (1-72.)

மங்கள பூர்வகமான பிரதிஞ்ஞா சுலோகம். 1

அவதாரிகை. 2

ஆத்மதத்வப் பிரதிபாதனத்தின் ஆட்சேப சமாதானங்கள். 2-6

பரவாதிகள் சம்மதி. 6

மகா வாக்கியார்த்தஞான முண்டாகும்போது பிரமிதி முதலிய திரிபுடியில்லை யென்பதன் காரணம். 6-7

பேதப்பிராந்தி அவாந்தரவாக்கியத்தால் நிவிர்த்தியாகாது மகா வாக்கியத்தால் நிவிர்த்தியாகின்றதெனல். 7-8

விசாரத்தின் ஆட்சேப சமாதானங்கள். 8,9

துவம்பதார்த்த லக்ஷணபேதம். (9-13.)


அகம்பிரத்தியத்தினால் சுத்தமான சிதாத்மாவின்கண் வாதிகளின் விவாதத்தால் சந்தேக முண்டாகும்போது

அகம் பிரத்தியத்தின் விஷய விசேஷ நிர்ணயஞ்செய்தற் பொருட்டுப் பகவானான ஸ்ரீசங்கராசாரியார் "நபூமி: நதோயம்" என்னுஞ் சுலோகத்தை யருளிச்செய்து அதன் வாயிலாகத்தேகமுதல் கேவலபோக்தாவீருக அவ்வவ்வாதிகளினு லங்கீகரிக்கப்பட்டுள்ள வஸ்துக்கள் அநாத்மாக்களென நிரூபிக்கின்றார். 9-13

ஆத்மா தேசகாலங்களால் அபரிச்சின்னமாயிருக்கின்றதெனல். 14

த்வம்சப் பிராகபாவங்கள் ஆத்மாவிற்கில்லை; அத்தியந்தாபாவமுஞ் சம்பவிக்கமாட்டாதெனல். 14-15

ஆத்மா அபாவப்பிரதியோகியன்றெனல். 15

ஆத்மாவின்கண் அவித்தையினுற் கற்பிக்கப்பட்ட தேகாதிப் பிரபஞ்சம் அநிர்வசனீயமாமெனல். ஷை

ஆத்மா சுழுப்தியில் விநாசியன்றெனல். 16

கூடஸ்தனே சர்வசாக்ஷியென்றல். 16-17

பிரமாத்ருத் தன்மை பிரமாதாவிற்குச் சித்திக்குமன்றிச் சாக்ஷிக்குச் சித்திக்கமாட்டாதெனல். 17

ரூப அவயவமற்ற சைதன்னியத்திற்குப் பிரதிபிம்பித்தல் பொருந்துமெனல். 18

இந்திரிய கிராஹியத்திற்கே பிரதிபிம்பங் கூடுமென்னும் நியமமின்றெனல். 18-19

பிம்பம் சாக்ஷாத்சம்பந்தியிருப்பின் ரூபத்தை யபேக்ஷிக்கமாட்டாதெனல். 19

ஆத்மாவிற்குப் பிரதிபிம்பித்தல் கூடுமென்பதற்குப் பிரமாணங்கள். 19-21





பிரதிபிம்பம் சத்தியமென்று பிரதிபிம்பவாதிகளும் மித்தையென்று ஆபாசவாதிகளுங் கூறுகின்றனரெனல். 21

அந்தக்கரணத்திற்கு ஆத்மாவின் பிரதிபிம்ப வாயிலாகப் பிரமாத்ருத்தன்மை சித்திக்கின்றதெனல். ஷை

அத்தியாசம் பொருந்தாதெனப் பூர்வபக்ஷி ஆசங்கித்தல். 21-26

நான் மனிதன், கர்த்தா, போக்தா என்னும் ஞானம் ஸ்மிருதியுமன்று, பிரமையுமன்றெனல். 26

ஆத்மா அகர்த்தா, அபோக்தா, பரமானந்த போத சொரூபமெனல். 26-27

ஞானபேதம் உபாதியினுற் றோன்றுகின்றதெனல். 28-29

கர்த்திருத்வாதி வாஸ்தவமன்றெனல். 29

நான் மனிதன் என்றற்றொடக்கத்து ஞானம் பிராந்திவடிவமெனல். ஷை

பிராந்திக்கு யோக்கியமான காரணம் அஞ்ஞானமெனல். 29-30

அஞ்ஞானம் அபாவவடிவமன்றெனல். 30

அஞ்ஞானம் பிராந்தி, சம்சயம் இவற்றின் சம்ஸ்காரபரம்பரை வடிவமன்றெனல். 31

தனதத்தியாசத்திற்கும் மற்றவற்றின் அத்தியாசத்திற்குங் காரணம் அஞ்ஞானமே யெனல். 32

ஆத்மாவில் அத்தியாசம் சம்பவிக்குமெனல். 33-34

அத்தியாசமறைப்பின் ஞாதாத்மியத்தினுற் பிரிவின் ஞானம் மிகுமேற்படுகின்றதெனல். 35

சர்வபாத ஞானத்திற்குஞ் சைதன்னியம் அவதியாயிருப்பதால் சூனியவாதம் சம்பவிக்கமாட்டாதெனல். 36

அவித்தியாத்தியாசம் ஒன்றும் அநாதியுமாமெனல். ஷை

36
காரியாத்தியாசமும் பீஜாங்குரம்போல் அநாதி. 37
அத்தியாசத்தின் சாமானிய லட்சணம்.


வார்த்திககாரர்மதம்.


அஞ்ஞானவுபஹிதஆத்மா அந்தர்யாமி சாக்ஷி ஜகத்காரணமென்றும், புத்தியுபஹிதஆத்மா ஜீவன் கர்த்தா போக்தா பிரமாதா வென்றும் சொல்லப் படுகின்றனவெனல். 38
உண்மையில் சிதாபாசனுக்குச் சாட்சியுடன் பேதமின்றெனல். 38-39
வார்த்திககாரர் மதத்தில் விட்டலட்சணையே அங்கீகரிக்கப் பட்டதெனல். 39
வார்த்திககாரர் மதம்—ஆபாசவாதம். 40-41
விவரணகாரர்மதம்—பிரதிபிம்பவாதம். 41
சம்க்ஷேபசாரீரககாரர்மதம்— ஷை 41-42
வாசஸ்பதிமிசிரர்மதம்—அவச்சேதகவாதம். 42-43
திருஷ்டி சிருஷ்டிவாதம் (ஏகஜீவவாதம்). 43-44-45
வஸ்துவின்கண் மதபேதத்தால் விகற்பம் பொருந்துமெனல். 45-46-47
ஜீவேசுவராதி வியவஸ்தை பொருந்துமெனல். 48
அவித்தையின் சொரூபம். 49
அவித்தை ஜகதாகாரமாய்ப் பரிணமித்தற்கேது. ஷை
ஜகத்திற்குபாதானமாயுள்ள சைதன்யம் வேறுபிரமாணத்தை விரும்பாது சர்வஞ்ஞமா யிருக்கிறதெனல். 49-50
மானமேயாதிவியவஸ்தை ஜீவனுக்குப் பொருந்துமெனல். 50
விர்த்தியின் நிர்க்கமனப் பிரகாரம். 50-51-52.





அந்தக்கரணலட்சணம். 50-51
அந்தக்கரணம் வியாவகாரிக பேதத்தால் கர்த்தா, கிரியை, ஞானகர்மத்துவ சம்பாதகமென மூவகைத்தாமெனல். 51-52
ஷை மூன்றுமதங்களின் பேதம். 53
விர்த்தியின் பிரயோஜனம். 53-54-55.
சொப்பிரகாச பிரஹ்மத்திற்கு ஆவரணங் கூடுமெனல். 55
விர்த்தியுண்டாதற்குக் காரணம். ஷை
சிலவிடத்து விர்த்திஞானத்தினால் அஞ்ஞானத்திற் கபிபவ (அடக்க) முண்டாகின்றதே யன்றி நிவிர்த்தி யுண்டாவதின்றெனல். 56-57
தத்துவமசியாதி வாக்கியார்த்த ஞானத்தினால் அவித்தை நிவிர்த்தியாகின்றதெனல். 57-58
கடாதிஞானத்தினால் கடாதிவிஷய ஆவரணம் நாசமடைகின்றதெனல். 58
ஆவரணலட்சணமும் ஆவரணத்தின் நிவிர்த்தியும். 59-62.
ஆத்மாவிற்கு அந்தக்கரணத்தின் தர்மாத்தியாசம் பொருந்துமெனல். 63
ஆத்மாவிற்கு உபாதிபேதத்தினால் பிரமாதா முதலிய வேறுபாடு பொருந்துகின்றதெனல். ஷை
சுழுப்தியில் ஆத்மா வியபிசாரமடையா திருத்தலாலும், ஏனையவை திருசியமாய் வியபிசார மடைதலாலும் வேதாந்த மதமே பிராமாணிகமா மெனல். 64
தத்துவஞான முண்டான பிறகு வேதத்திற் கப்பிராமாண்யம் நேரிடுமென்பது இரண்டாவது சுலோகத்தில் நிரூபிக்கப் படுகின்றது. 64-67

வர்ணாசிரமாதிகள் மித்தியாஞான மாத்திர ஜன்னிய மாயிருத்தலின் மித்தையா மென்பதைச் சுழுப்தி வாயிலா கத் திடப்படுத்துவ தற்காக மூன்றாவது சுலோகம் கூறப் படுகின்றது. 67-68

ஆத்மாவிற்குச் சுபாவத்திற் சம்பந்த மின்றெனல். 68

அபிமானமிராதபோது அனர்த்தங்களில்லை யெனல். 69

ஆத்மாவிற்குச் சகல வியவகாரங்களு மில்லை யென்று கூறுவ தாற் சூனியவாத மேற்படமாட்டா தெனல். 70-71

ஜீவன் சுழுப்தியில் அசம்சாரியா மெனல். 72

## தத்பதார்த்த நிருபணப் பிரகரணம். (72-92.)

வாதிகள் கூறும் தத்பதார்த்த பேதலட்சணத்தில் தோன்றும் ஆசங்கையை நிவிர்த்திக்கும் பொருட்டு நான் காவது சுலோகம் கூறப்படுகின்றது. 72-76

அசேதனமான பிரதானம் ஜகத்திற்கு உபாதானகாரணமாக மாட்டாமையின் சாங்கியமதம் அங்கீகரிக்கத்தக்க தன் றெனல். 77-78

சுருதி யுக்தி பாதிதமாயிருத்தலால் பாசுபதமதமும், பாஞ்ச ராத்திரமதமும், ஜைனமதமும் அங்கீகரிக்கத் தக்கன வன்றெனல். 78

சுருதி விருத்தங்கமா யிருப்பதால் பிரஹ்மத்தைப் பிரதி பாதிக்கமாட்டா தென்னும் மீமாம்சமதமும் யுக்திக் கொத்ததன்றெனல். 78-81

தார்க்கிகர் முதலியோரது மதங்களும் மகாவாக்கியங்களாலும், ஏனைய சுருதிவாக்கியங்களாலும் மறுப்புண்டனவெனல். 81



பிரபஞ்சத்திற்கும் பிரஹ்மத்திற்கும் பேதாபேதமும் பிரபஞ்சத் திற்கு க்ஷணிகத்துவமும் பொருந்தாவெனல். 81-8

பிரஹ்மம் நிர்விசேஷ மென்று சுருதி கூறுவதால் நான்காவது சுலோகத்திற் கூறிய அர்த்தமே ஐந்தாவது சுலோகத்தி லுறுதிப்படுத்திக் கூறப்படுகின்றது. 82-84

சூட்சுமமென்னு மபிப்பிராயத்தினால் பிரஹ்மம் அணுவென வியவகரிக்கப்படுகின்ற தெனல். 85

அதிஷ்டானவடிவப் பிரஹ்மத்திற்கு அத்தியாச வடிவப்பிரபஞ்சத்தின் சம்பந்தமின்மையின் அதன்கண் அனர்த் தம் சிறிது மின்றென்று ஆறாவது சுலோகத்திற் கூறப்படு கின்றது. 85-88

பிரஹ்மம் அணுமுதலிய பரிமாணமற்ற தெனல். 87

பிரஹ்மம் அப்பிரமேயமா யிருத்தலின் திரவிய, குண, கர்ம மன்றெனல். 87-88

பிரஹ்மபாவம் யாருக்குபதேசிக்கப்படுகின்றதென்னு மாட்சேபத்திற்குத் தோற்றத்திலன்றி யுண்மையி லின் றென்று ஏழாவது சுலோகத்திற் கூறப்படுகின்றது. 88-92

தேகாதிப்பிரபஞ்சம் பாரமார்த்திகத்தி லில்லையெனல். 91

சுருதிகள் முன்னரும் பிரஹ்மசொரூபமா யிருக்கிற ஜீவனுக்கே ஞானத்தினால் பிரஹ்மபாவத்தைக் காட்டிச் சகலத்துவைதத்தையும் நிவிர்த்திசெய்கின்றனவெனல். 92

## திருக்பதார்த்த நிருபணப் பிரகரணம் (93-97)


அவித்தையினாற் கற்பிக்கப்பட்ட ஜாக்கிராதி வியவஸ்தை ஆன்மாவிற் குண்மையிலின்றென்று எட்டாவது சுலோகத்திற் கூறப்படுகின்றது. 93-97

திருக்வடிவ ஆத்மா உபாதிபேதத்தினால் மூவகைத்தாய்விளங்குகின்றதெனல். 94

ஜீவேசுவரசாக்ஷி லட்சணம். 95

வார்த்திககாரர் மதத்தில் ஈசுவரனே சாக்ஷியாகையால் திருக்பதார்த்தம் ஜீவேசுவரரென்றிருவகைத்தா மெனல் ஷை

ஈசுவரன் அவித்தையோபாதியினால் மூவகையாக விளங்குகிறானெனல். 95-96

இரணியகர்ப்பர் சிலவிடத்துப் பிரமாவென உபசாரமாகச் சொல்லப் படுகிறாரெனல். 96

பிரமத்திற்கு ரூபகற்பனை உபாசகனது அநுக்கிரகத்தின் பொருட்டாமெனல். ஷை

ஜீவன் தனதுபாதியின் அவாந்தரபேதத்தால் மூவகைத்தாக வியவகரிக்கப் படுகின்றானெனல். 97

சாக்ஷி யாண்டு மொன்றே யெனல். ஷை


## திருசியபதார்த்த நிருபணப் பிரகரணம் (98-107.)


திரிசியபதார்த்தம் மூவகைத்தா மெனல். 98

அவ்வியாகிருத லட்சணம். 98-99

இருள் பாவபதார்த்த மெனல். 99

திக்கும் காலமும் உண்டெனற்குப் பிரமாணமின்றெனல். 100





திக்கு ஆகாசத்தி லந்தர்க்கதமாம்; காலம் அவித்தையி லந்தர்க்கதமாம். 10

அமூர்த்த திரவிய லட்சணம். 100-10

அந்தக்கரணாதிகளி னுற்பத்தி கூறல். 100-101

வாக்கிந்திரியம் தேஜஸிலிருந்துண்டான தென்றும் பாதேந்திரியம் ஆகாயத்திலிருந்துண்டான தென்றும் சிலர் கூறுவது உபசாரமா மெனல். 101-102

லிங்கசரீர லட்சணம். 103

அமூர்த்தபதார்த்தம் ஜீவவுபாதியே யெனல். 104

அபஞ்சீகிருதபஞ்சபூதங்கள் ஸ்தூலசரீரமும் விஷயமுமின்றிப் போகத்தையுண்டுபண்ண அசமர்த்தங்களா மெனல். ஷை

ஜீவனுடைய கர்மானுசாரமாகப் பஞ்சீகரணம் பண்ணப்பட்டதெனல்; பஞ்சீகரணக் கிரமம்; திரிவிர்த்கரணம். 105-106

மூர்த்தபதார்த்த மிதுவெனல். 107

ஸ்தூல சரீரலக்ஷணமும் அதன் வியவஸ்தையும். ஷை

சிருஷ்டிக்கிரமம். ஷை

லயக்கிரமம். 108

நித்யப்பிரளயம். ஷை

பிராகிருதப்பிரளயம். ஷை

ஆத்தியந்திகப்பிரளயம். 108-109

ஜாக்கிராவஸ்தை. 109-110


## சொப்பனாவஸ்தை. 111-120


சொப்பனத்திற் றோன்றும் பதார்த்தம் மனதின் பரிணாமமென்று கூறுவதன் காரணம். 111-112

இந்திரியத்தின் சகாயமின்றியபோது மனதிற்கு விஷயங்களைக் கிரகிக்குந் தன்மையின்றெனல். 112

சொப்பனத்தியாசத்திற்கு அதிஷ்டானங் கூறல். 113-115

சுழுப்திக்கும் ஜாக்கிரத்திற்கு முள்ள வேற்றுமை கூறல். 115

சொப்பனத்தியாசம் மீண்டுமுண்டாவதன் காரணம். 116-117

சொப்பனத்தியாசத்திற்கு மனோவச்சின்ன சைதன்னியம் அதிஷ்டானமென்றுரைப்பதிலும், பிரஹ்மசைதன்னிய மதிஷ்டானமென் றுரைப்பதிலு முண்டாகு மாசங்கையைப் பரிகரித்தல். 117-120

சுழுப்தியவஸ்தை. 120

சுழுப்தியில் மூவகை விருத்திகளுளவெனல். 120-122

சுழுப்தியின் சுகமுதலியவற்றின் ஸ்மரணை முண்டெனல். 122

சுழுப்தியில் ஞானமின்றென்று தார்க்கிகர் கூறும் அநுமானம் பொருந்தா தெனல். ௸

சுழுப்தியில் அகங்காரஸ்மரணை யின்றெனல். 123

சுழுப்தியில் பிரமாத்தன்மையின் பாவப்பிரத்தியக்ஷ மிருப்பதால் அந்தக்கரண விருத்தி யின்றெனல். 123-124

சமாதிகளில் பிரஹ்மாத்தியாச முண்டாதல் மனோநிக்கிரகமேயன்றி ஞானமன்றெனல். 124

தர்க்கமும் மனோவிருத்தியெனல். அநுபிரத்திப்பிரமைகளிலும் வேறாயிருப்பதாற்றான் சிரவணாதிகள் பொருந்துகின்றனவெனல். 124-125

சிரவணம் நால்வகைத்தாய அன்வயவியதிரேக முதலிய தர்க்க வடிவமாயிருக்கின்றதெனல். 125-127

சுழுப்தியில் ஆனந்தாநுபவ முண்டெனல். 126



சுழுப்தியில் ஜீவாபாவம் நேரிடமாட்டாதெனல். 128

சுழுப்தியிற் சாக்ஷிபேதத்தைக்கற்பித்தல் மோகத்தாலெனல். 129

சுகமாய்த் தூங்கினேனெனல் உபசாரமாமெனல். 130

ஜாக்கிர ஜாக்கிர முதலியவை. 130-132

அத்தியாத்மமுதலியவை. 132-133

பிரணவோபாசனை. 133-134

மோக்ஷத்தின் சாட்சாத்ஹேது. 134

அவஸ்தாத்திரயசகிதர் திருசியமாகவிருத்தலால் மித்தையாவர். ௸

அவஸ்தாத்திரய அபிமானிகள் மித்தையாதலால் அவர்களின் சாக்ஷியும் மித்தையாதல் வேண்டுமென்னு மாசங்கையை நிவிர்த்திக்கச் சாக்ஷி சத்தியமென்று ஒன்பதாவது சுலோகத்திற் கூறப்படுகின்றது. 135

சாட்சியங்களெல்லாம் நாசம், சாட்சி நாசமன்றெனல். 136

பிரஹ்மம் தேசகால அபரிச்சின்ன மெனல். 137

ஆகாசாதிகள் ஆபேட்சிக மகத்துவ முடையனவெனல். ௸

ஆத்மசொரூபமான மோக்ஷம் புருஷார்த்த மென்பதற்கேது கூறல். 138-139

ஆத்மா சொப்பிரகாசமாயிருத்தலால் அதற்குப் பிரகாசாபேட்சையின்றெனல். 140

உற்பத்திவிநாசம் அந்தக்கரண விருத்திக்கேயன்றி ஞானத்திற்கில்லையெனல். 141-142

ஜகத் அசத்தியமன்றென்னும் ஆட்சேபத்திற் குத்தரம் பத்தாவது சுலோகத்திற் சொல்லப்படுகின்றது. 142

இரண்டுமுதலிய எண்கள் அபேட்சாபுத்தி ஜன்னியமெனல். 143
ஆத்மாவொன்றென்பதும்அவித்தையின்காரியமாமெனல். 143-144
ஆத்மா சூன்யமன்றெனல். 144-145
த்வைதமின்றியதா அத்வைதமெனல். 145
த்வைதத்தின்மித்யாத்வம் பொருந்துமெனல். 146
ஆத்மா மனோவாக்குகளுக்கு அவிஷயமாயிருப்பினும் அதாகாரமான விர்த்திமாத்திரத்தினால் அதன் அவித்தியாநிவிர்த்தியுண்டாவதால் வேதாந்தங்கள் பிரமாணமாமெனல். 147
அப்பியாசிக்கு அவித்தை அதன்காரியம் ஆகிய இவை வேதாந்த வாக்கிய ஜன்னிய அகண்டாகார விர்த்தியினால் நிவிர்த்தியாவதால் அவன் பரமானந்த ரூபனாய்க் கிருதார்த்திய னாகின்றானெனல். 148
வியாசர்முதலியோர் வணக்கம். ஷை
நூலின்பயனும் நூலாசிரியர் பெயரும். ஷை
சித்தாந்தபிந்துவென்னும் இந்நூலியற்றியதன் காரணங்கூறல். 149

சித்தாந்தபிந்துவின் அநுக்கிரமணிகை.

முற்றிற்று.

உ

# அறிக்கை.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| வேதாந்த சாரம் (வினாவிடை) ... ... | பேபர் | 0 | 10 |
| | காலிகோ | 0 | 12 |
| நவநீதசாரம் (வினாவிடை) ... ... | ,, | 0 | 8 |
| நாநாஜீவவாதக்கட்டளை, குறிப்புரையுடன் ... | பேபர் | 0 | 4 |
| வாக்கியசுதையென்னும் திருக்குருத்திருசிய விவேகம் மூலமும் உரையும் | ,, | 0 | 2 |
| மோக்ஷசாதன விளக்கம் (வினாவிடை) | காலிகோ | 2 | 0 |
| வேதாந்த பரிபாஷை (சம்ஸ்கிருத மொழிபெயர்ப்பு, வசனம் | ஷை | 0 | 12 |
| தாயுமானசுவாமிகள்பாடல் மூலம் பதப்பிரிவுடன் | ஷை | 0 | 8 |
| திருவாசகம் மூலம் (பாக்கெட்சைஸ்) புதிய பதிப்பு | ஷை | 0 | 10 |
| திருக்குறள் பரிமேலழகருரை, தெளிபொருள் விளக்கம், கருத்துரை, குறிப்புரை, 2-வாலியம் | ஷை | 6 | 0 |
| பாலபோதம் ... ... ... | ஷை | 1 | 0 |
| விருத்திரத்னவளி ... ... ... | ஷை | 0 | 12 |
| அடயோகப்பிரதீபிகை ... ... ... | ஷை | 1 | 8 |
| வேதாந்த பரிச்சேதம் ... ... ... | பேபர் | 0 | 6 |
| ஸ்ரீவிருத்திப்பிரபாகரம் ... | காலிகோ | 4 | 0 |
| பஞ்சதசப்பிரகரணம் ... ... | ஷை | 1 | 0 |
| பிரபுலிங்கலீலை வசனம் ... ... | ஷை | 0 | 12 |

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீகுமாரதேவர் சாஸ்திரக்கோவை | காலிகோ | 0 | 10 |
| சூதசங்கிதை (செய்யுள்) | ஷை | 1 | 8 |
| ஸ்ரீபக்தலீலாம்ருத வசனம் | ஷை | 3 | 0 |
| நாலடியார் மூலமும், உரையும், இங்கிலீஷ்மொழி பெயர்ப்புடன் | ஷை | 1 | 2 |
| துவைதசைவகண்டனம் ஷை — முதற்பாகம் | ஷை | 2 | 0 |
| — இரண்டாம்பாகம் | ஷை | 1 | 8 |
| ஆசாரத்திரட்டு | ராபர் | 0 | 4 |
| ஔவைக்குறள் | | 0 | 2 |
| ரிபுகீதைத்திரட்டு, குறிப்புரையுடன் (அச்சில்) | | | |

வி-பி. சார்ஜ் பிரத்தியேகம்.

கோ. வடிவேலு செட்டியார்,

தமிழ்ப்பண்டிதர்,

15, வெங்கடாசல ஆசாரிவீதி,

சோமனேசுவரன் பேட்டை, சென்னை.


ஓம்

தத்ஸத்.

பரமாத்மனேநம:

# * சித்தாந்த பிந்து.

## த்வம்பதார்த்த நிரூபணப் பிரகரணம்.

மங்கள பூர்வகமான *1. பிரதிஞ்ஞா ச்லோகம்.

ஸ்ரீசங்கராசார்ய நவாவதாரம்
விஸ்வேஸ்வரம் விஸ்வகுரும் பிரணம்ய
வேதாந்த சாஸ்திர ச்ரவணாலஸாநாம்
போதாய குர்வே கமபிப்ரயத்நம்.

(இதன் பொருள்.) சங்கராசாரிய ரூபமாகப் புதிதாக அவதரித்தும் உலகங்களுக்குக் குருவாகயுமிருக்கிற விசுவேசனை நமஸ்காரம் செய்து வேதாந்த சாஸ்திரத்தைச் சங்கிரகமாகக் கேட்க இச்சையுள்ளவர்கட்குப் போதமாம்பொருட்டு ஒரு கிரந்தமியற்றுகிறேன்.

---

* வேதாந்த சித்தாந்தமாகிய சமுத்திரத்தின் பிந்து எனப் படும். சித்தாந்தம்-பிரமாணமுடையதென வுடன்பட்டது; பிந்து-துளி; எனவே, சித்தாந்தபிந்தென்பதன் திரண்டபொருள். சித்தாந்தமுடையதென வுடன்பட்ட விஷயத்தில் மக்களுக்கு மிகவுமின்றியமையாததான பகுதியை யுணர்த்தும் சிறுநூலென் பதாம்.

*1. பிரதிஞ்ஞை—தன்துணிபுரைத்தல்.

# அவதாரிகை.

இந்தச் சம்சாரத்திலிருக்கிற சகல ஜீவர்களையும் நேராகவும் பரம்பரையாகவும் கரையேற்ற வேண்டுமென்று இச்சையுள்ள பூச்சியபாதரான ஸ்ரீ சங்கராசாரியர் அநாத்மாக்களாகிய சரீராதிகளிலும் விலட்சணமான நித்திய சுத்த புத்த முக்த சுபாவமான ஆத்மசொருபத்தைப் போதிக்கும் பொருட்டு அடியில் வரும் பத்துச் சுலோகங்களை யருளிச்செய்தனர்.

## 1. ஆத்மதத்துவப் பிரதிபாதனத்தின் ஆட்சேப சமாதானங்கள்.

(ஆட்சேபம்.) *2. இதமாகார விர்த்திக்கு விஷயமான அநாத்மாக்களிலும் வேறான *3. அஹமாகாரவிர்த்திக்கு விஷயமான ஆத்மாவைச் சகலப் பிராணிகளும் நானிருக்கிறேனென்றறிகின்றன; துக்கத்தையு மநுபவிக்கின்றன. ஆகையால், தெரிந்த அர்த்தத்தை (சாஸ்திரோக்தமாகவேண்டும்) தெரிவிப்பதாலும், பிரயோசன மற்றதா யிருப்பதாலும் ஆத்மதத்துவப் பிரதிபாதனம் வியர்த்தமாம்.

(சமாதானம்.) சித்தாசியத்துவ [சிரவணாதிகளால் பரிபாகத்தையடைந்த மனோவிர்த்தியில் அபிவியக்தமான சித்தினால்விளங்கும் தன்மையாகின்ற] ஏதுவினால்தேகேந்

*2. இதமாகாரவிர்த்தி-இதுவெனும் வடிவஞானம்.

*3. அஹமாகாரவிர்த்தி-நானெனும் வடிவஞானம்.



திரியமனங்கள் இதமாகார விர்த்திக்கு விஷயமா யிருந்தாலும் அகண்டாகாரமனோவிர்த்தி யுண்டாகின்றதற்கு முன்னர் அஹமாகாரவிர்த்திக்கு விஷயமாகத் தோன்றுகின்றன. தோன்றுவதால், அவைகளுக்கும் ஆத்மாவுக்கும் *4. தாதாத்மியாத்தியாஸம் சம்பவிக்கின்றது. சம்பவிப்பதால் சுத்தமான ஆத்மாவிலும் துக்கம் முதலிய அத்தியாஸங்களேற்படுகின்றன. ஏற்படுவதால், *5. சமூலமான அந்த அத்தியாசங்கட்குச் சாஸ்திரீயமான ஜீவப்பிரஹ்ம ஐக்கிய ஞானத்தால் நிவிர்த்தியுண்டாகிறது. ஆகையால் தெரியாத அர்த்தத்தைத் தெரியப்படுத்துவதாலும், பிரயோசனத்துடன்கூடி யிருப்பதாலும் ஆத்மதத்துவப் பிரதிபாதனம் வியர்த்தமன்று.

அந்த ஆத்மதத்துவத்திற்குத் "தத்துவமஸி" "அஹம் பிரமாஸ்மி" முதலிய வேதாந்த வாக்கியங்களே பிரமாணம். அந்தவேதாந்த வாக்கியங்களும் பதார்த்த ஞானமூலமாகவே பிரமாணம். ஆகையால், பிரகிருத வாக்கியார்த்தங்கட்கு அநுகூலமான தத்துவம்பதார்த்தங்கள் இதரப் பிரமாணங்களால் சித்திக்காமையால் அவற்றையும் சாஸ்திரவாயிலாகவே அறிந்து கொள்ளல்வேண்டும்; *6. யூபம் ஆக

*4. தாதாத்மியாத்தியாசம்-ஒன்றென்னும் பிராந்தி.

*5. சமூலமான-காரணமான அஞ்ஞானத்தோடு கூடிய.

*6. "யூபத்தில் பசுவைக்கட்டு, ஆகவனீயத்தில் ஓமம் பண்ணு" என்னும் வாக்கியார்த்தங்களி லடங்கிய யூபமென்பது யாது? ஆகவனீயமென்பது யாது? என்று ஆராய்வுழி, எட்டிப் பட்

வஹ்நி முதலிய பதார்த்தங்களைப்போலும்.

"யதோவா இமானி பூதானி ஜாயந்தே
யேந ஜாதானி ஜீவந்தி"

(இ-ள்.) எதினின்றும் இந்தப்பூதங்கள் உண்டாகின்றனவோ உண்டான பூதங்கள் எதனால் ஜீவித்திருக்கின்றனவோ.

என்றற்றொடக்கத்துச் சிருஷ்டியாதிகளைப் பற்றிக் கூறும் சுருதிகள் தடஸ்தவாச்சியார்த்தத்தைக் கூறுகின்றன.

"சத்தியம் ஞானம் அநந்தம்"

என்றற்றொடக்கத்துச் சுருதிகளோ தடஸ்த லக்ஷியார்த்தத்தைக் கூறுகின்றன.

"தத்யதா மஹாமத்ஸ்ய: உபேகூலே
அநுசஞ்சரதி பூர்வஞ்ச அபரஞ்ச ஏவமேவ
அயம்புருஷ: ஏதாவுபௌ அந்தௌ
அநுசஞ்சரதி ஸ்வப்நாந்தஞ்ச புத்தாந்தஞ்ச"

(இ-ள்.) ஒரு பெரிய மச்சமானது இருகரைக்குள் அங்குமிங்கும் சஞ்சரிப்பதுபோல் இந்தப் புருஷனும் ஜாக்கிர சொப்பன சுஷுப்தி அவஸ்தைகளில் மாறிமாறிச்செல்கிறான்.

---

டையாய்ச் செதுக்கியுள்ளதோர் ஸ்தம்பம் யூபபதத்தின் அர்த்தமாகவும், ஆதானம் முதலிய சம்ஸ்காரத்தாலேற்பட்ட அக்னி ஆகவநீயபதத்தின் அர்த்தமாகவும் சாஸ்திரவாயிலாகவே அறியப் படுவனவா யிருக்கின்றன.



என்றற்றொடக்கத்துச் சுருதிகள் துவம்பத வாச்சியார்த்தத்தைக் கூறுகின்றன.

"யோயம் விஞ்ஞானமய:
பிராணேஷு ஹ்ருதியந்தர்
ஜோதி: புருஷ: நதிருஷ்டே:
திருஷ்டாரம் பஸ்யே:."

(இ-ள்.) எவன் விஞ்ஞான மயனோ அவன் பிராணாதிகளினும் பின்னன்; இருதயத்திற்குள்ளே ஜோதிசொரூபனான புருஷன் (விருத்தி) ஞானத்தைப் பிரகாசம் பண்ணுகிறவனைப் பார்த்தல் முடியாது.

என்றற்றொடக்கத்துச் சுருதிகள் துவம்பத லக்ஷியார்த்தத்தைக் கூறுகின்றன.

ஆகையால், முதலில் அவாந்தர வாக்கியத்தினால் சுத்தமான ஜீவப்பிரஹ்மங்களின் அநுபவம் உண்டாகித் தத்துவமஸியாதி வாக்கியங்களில் அநுபவிக்கப்பட்ட முக்கியார்த்தங்களான ஜீவப்பிரஹ்மங்களின் அபேதான்வயம் பொருந்தாதாகையால் இலக்கணையால் சுத்தர்களான ஜீவப்பிரஹ்மத்தின் *7. ஸ்மரணம் பொருந்தும்; ஏனெனின்,

---

*7. இந்த ஸ்மரணமுண்டாதற்கு முன்னர்ச் சுத்த (சைதன்னிய)த்தின் அநுபவமுண்டாகாமையின் அதன் ஸ்மரணம் (நினைப்பு) எங்ஙனம் பொருந்துமென ஆக்ஷேபித்தல் கூடாது; ஏனெனின், சுஷுப்தியில் நிர்விகற்பமான சுத்த சைதன்னியத்தின் அநுபவத்தை ஒப்புக்கொண்டிருக்கின்றமையின் அதன் ஸ்மிருதி பொருந்து மென்பதில் யாதோர் ஆசங்கையுமின்றாம்.

i. சுஷுப்தியில் நிர்விகல்பமான சாக்ஷி சைதன்னியத்தின் அநுபவம் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாலும்,

ii. அத்விதீயமான பிரஹ்மத்தைத் தெரிவிக்கும் பொருட்டுப் பிரவிர்த்தித்த சத்தியஞானாதி பதங்கட்கு உபாதி விசிஷ்டமான சைதன்னியத்தின்கண் சக்தியிருந்தாலும் சைதன்னியத்தின்மாத்திரம் தாத்பரியமாதலால் அச் சைதன்னியமாத்திரத்திலேயே சம்ஸ்காரம் பிரகாசத்தை அடைவதாலுமென்க.

## 2. பரவாதிகள் *8 சம்மதி.

ஆகாசாதி பதத்தாலும் நிர்விகல்பமான ஸ்மரணமுண்டாகின்றதென்று தத்துவசிந்தாமணிக்காரர் முதலியோர் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர்; சப்தத்தின் சத்திஞானம் தாத்பரியாதீனமா யிருப்பதால்.

இதனால் மகாவாக்கியார்த்த ஞானமுண்டாகும்போது பிரமிதி பிரமாதா இவைகளின் பானம் (தோற்றம்) வேண்டியதென்னும் சிலர் பக்ஷமும் தள்ளப்பட்டது; *9. அசம்

*8. பரவாதி என்றது தர்க்கநூ லொன்றாகிய தத்துவசிந்தாமணி நூலாசிரியரை.

*9. சமாதி-சம்பிரஞ்ஞாதம், அசம்பிரஞ்ஞாதமென இருவகைத்தாம். அவற்றுள் விஜாதிய பிரத்தியய விர்த்திகளின் அந்தராயமின்றிய (அனாத்மாகார விர்த்தியின் மறைப்பின்றிய) தயிலதாரைபோன்று இடையீடில்லாத சஜாதிய (தன்னினமான) பிர



பிரஞ்ஞாத சமாதி சுருதிஸ்மிருதிகளில் பிரசித்தமாயிருப்பதால்.

(மகாவாக்கியார்த்த போதத்தில் சுத்தப் பிரஹ்மமே விஷயமென்று சொல்லப்பட்டிருக்கின்றதென்பதுகூடாது; அவாந்தர வாக்கியார்த்தமும் சுத்த சித்ரூபமாகையால் மகாவாக்கியம் *10. அநுவாதமாகுமெனின், விடை வருமாறு:—)

பிரஹ்மம் பரோக்ஷமாயிருக்கிறது, சத்விதீயமா (இரண்டாவதோடு கூடியதா)யிருக்கின்றதென்னும்பிராந்தியிருப்பதால் அவாந்தர வாக்கியார்த்தமாகிய தத்துவம் பதார்த்தமாத்திர அநுபவத்தாலேயே பிராந்தி நிவிர்த்தியுண்டாகிறதில்லை. வாச்சியார்த்தங்கட்கு அபேதம் தோன்றுவதால் புனருக்தி (கூறியது கூறல்)யில்லை.

இலக்ஷியார்த்தமும் ஒன்றாயிருப்பதால் அகண்டார்த்தமா யிருக்கிறது; பதத்தினு லுண்டான ஸ்மரணமும்

ஹ்மாகார விர்த்திப் பிரவாகம் சம்பிரஞ்ஞாத சமாதியாம். இது சவிகற்பசமாதி யென்றும் சொல்லப்படும்.

சகல விர்த்திகளின் நிரோதத்தோடு சித்தம் நிர்விகற்பப் பிரஹ்மாகாரமாக நிலைத்தல் அசம்பிரஞ்ஞாத சமாதியாம். இது நிர்விகற்ப சமாதியென்றுஞ் சொல்லப்படும்.

*10. அநுவாத மெனினும் வழிமொழிதலெனினும் ஒக்கும். ஒருபொருளை முன்னொருவன் கூறலது புரோவாதம். அதனை யொருவன் மொழிந்தாற் பின்னருமெடுத்துக் கூறுவது அநுவாதமாம்.

நிர்விகற்பமான வாக்கியார்த்தத்திற்கு அநுகூலமாயிருப்பதால்; நிர்விகல்ப அநுபவம்போலும். இதில் விரோதமின்று. ஸவிகற்பமான வாக்கியார்த்த போதத்தில் ஸவிகற்பமான பதார்த்த ஸ்மரணம் காரணம். பிரகிருதத்திலோ வாக்கியார்த்த போதம் நிர்விகல்பகமா யிருக்கின்றது. அது *11. பிரமையா யிருப்பதால் அதற்கே அஞ்ஞான நிவர்த்தக சாமர்த்தியமிருக்கின்றது. ஆகையால் *12. லக்ஷியதாவச் சேதகமன்றி லக்ஷணை பொருந்தாமையில்லை. பிரகிருத வாக்கியார்த்தத்திற்கு அநுகூலமான பதார்த்த ஸ்மரணமே சக்தி லக்ஷணை சாத்தியமாயிருக்கிறது.

### 3. விசாரத்தின் ஆக்ஷேப சமாதானங்கள்.

(ஆ) அங்ஙனமாயின் வேதாந்த வாக்கியங்களாலேயே பதார்த்த ஸ்மரணமும் வாக்கியார்த்த ஞானமும் உண்டாயிருக்க அவ்வேதாந்த வாக்கியங்கள் சுயமாகவே பிரமாணமாயிருப்பதால் அவற்றால் அஞ்ஞானத்திற்கும் அதன்காரியத்திற்கும் நிவிர்த்தி யுண்டாகும்போது விசாரத்தால் பிரயோசனம் யாது?

(ச) நீ சொன்னது வாஸ்தவந்தான். வேதாந்த வாக்கியங்கள் ஸ்வயமே பிரமாணமாயிருப்பதால் நிர்விகல்பகமான

*11. ஸ்மிருதியின் வேறாய் அபாதிதப் பொருளை விஷயமாகவுடைய ஞானம் பிரமையெனப்படும்.

*12. லக்ஷியதாவச் சேதகம்-லக்ஷணையாலறியப்பட்ட பொருளை வரைந்துகொண்டிருப்பது.



ஆத்மசாக்ஷாத்காரத்தை யுண்டுபண்ணுகின்றன; ஆயினும் அந்த வேதாந்த வாக்கியங்கள் மந்தபுத்தி யுள்ளவர்கட்கு வாதிகளின் விவாதத்தாலுண்டான சம்சயமாகிய பிரதிபந்தமிருப்பதால் அஞ்ஞானத்தை நிவிர்த்தி பண்ணும் சாமர்த்தியமில்லை. விசாரத்தாலோ சம்சயம் நிவிர்த்தியாகிறது. அப்போது நிர் பயமாக (சம்சயமின்றி) அஞ்ஞானநிவிர்த்தி யுண்டாகின்றது. ஆகையால், சம்சயத்திற்குக் காரணமான வாதிகளின் விவாதத்தை யொழிக்கும் பொருட்டு விசாரம் ஆரம்பித்தல் தகுதியாம்.

அதற்குள் முன்னர்த் துவம்பதார்த்தத்திலுள்ள விவாதங்கள் காட்டப்படுகின்றன:—தத்பதார்த்தம் சாஸ்திர தாத்பரியத்திற்கு விஷயமா யிருப்பதால் சிரேஷ்டமாயிருப்பினும் துவம்பதார்த்தம் (ஜீவன்) ஸ்திரபலமாகிய மோக்ஷத்தை யடைவதால் தத்பதார்த்தத்தைவிட சிரேஷ்டமாம்.

### 4. துவம்பதார்த்த (ஜீவ) லட்சணபேதம்.

துவம்பதார்த்தத்தில் விவாதமானது சொல்லப்படுகின்றது:—

தேகாகாரமாகப் பரிணமித்த நான்கு பூதங்களே துவம்பதார்த்தமென்பர் சார்வாகர்கள்; சக்ஷுராதி முதலிய இந்திரியங்கள் தனித்தனியே துவம்பதார்த்தமென்பர் சார்வாகர்களுள் ஏகதேசிகள்; சக்ஷுராதிகளின் சமுதாயமே துவம்பதார்த்தமென்பர் சிலர்; மனமென்பர் சிலர்; பிராணனென்பர் சிலர்; க்ஷணிக விஞ்ஞானமென்பர் சௌகதர்கள் (யோகாசாரர்); சூனியமென்பர் மாத்தியமிகர்கள்; தேகேந்

திரியங்களைக் காட்டிலும் வேறாகத் தேகபரிமாணமுள்ளவனென்பர் திகம்பரர் (சமணர்); கர்த்தா போக்தா ஜடன் விபுவென்பர் வைசேஷிகர், தார்க்கிகர் (நையாயிகர்), பிரபாகரர்; ஜடன் போதசொரூபனென்பர் பாட்டர்கள்; போக்தாவும் (கர்த்தாவல்ல) கேவல போதசொரூபனுமாமென்பர் சாங்கியர், யோகியர்; அவித்தையினால் கர்த்த்ருத்வமுதலிய தர்மங்களுடன் கூடினவனும் பரமார்த்தத்தில் தர்மமற்றவனும் பரமானந்த போதசொரூபனுமாமென்பர் வேதாந்திகள். இப்படிச் சாமானியமாய் அஹம் பிரத்தியயத்தினால் (நான் என்னுமுணர்ச்சியினால்) சுத்தமான சிதாத்மாவினிடத்தில் வாதிகளின் விவாதத்தால் சந்தேகமுண்டாகும்போது அஹம்பிரத்தியயத்தின் விஷய விசேஷ நிர்ணயம் பண்ணுவதற்காகப் பகவானான ஸ்ரீ சங்கராசாரியர் சொல்லுகிறார்.

நபூமிர் நதோயம் நதேஜோ நவாயுர்
நகம்நேந்திரியம்வா நதேஷாம் ஸமூஹ:
அநேகாந்திகத்வாத் ஸுஷுப்த்யேக ஸித்த:
ததேகோவசிஷ்ட: சிவ: கேவலோஹம். (1)

## பதவுரை.

ஸுஷுப்த்யேகஸித்த:—ஸுஷுப்தியில்சித்தித்திருக்கிறவனாகவும்,
ஏக:-அத்விதீயனாகவும்,
அவசிஷ்ட:-சர்வத்வைதத்திற்கும் பாதமிருப்பினும் பாதமற்றவனாயும்,
சிவ:-பரமானந்தபோதரூபனாயும்,
கேவல:-தர்மமற்றவனாயுமிருக்கிற,



அஹம்-அஹமாகாரவிர்த்திக்கு விஷயமான நான்
பூமி:ந-பூமியன்று,
தோயம்ந-ஜலமன்று,
தேஜ:ந-தேஜஸன்று,
கம்ந-ஆகாசமன்று,
இந்திரியம்ந-இந்திரியங்களன்று,
வா-அல்லது,
தேஷாம்-இந்திரியங்களுடைய,
ஸமூஹ:ந-கூட்டமன்று,
அநேகாந்திகத்வாத்-வியபிசாரியாயிருப்பதால்.

## விசேஷவுரை.

அஹம்பிரத்தியயத்திற்கு ஆலம்பனம் (அஹமாகாரவிர்த்திக்கு விஷயம்) அத்விதீயம்: சர்வத்வைதப் பிரபஞ்சமும் பாதிக்கப்பட்டும், பாதிக்கப்படாமலுமிருக்கிறது; பரமானந்தபோத ரூபமாயிருக்கிறது; அதுவே மங்களரூபமானதையால். தர்மமற்றதாயிருக்கிறது. இதனால் அத்விதீயமென்றும், சர்வப் பிரமாணங்களாலும் பாதிக்கப்படாததென்றும், பரமானந்த போதமே அஹம்பிரத்தியயத்திற்கு விஷயமென்றும் கூறும் வேதாந்திகளின் பக்ஷமேமேன்மையுடைத்து. இதனை நன்றாக உபபாதனம் பண்ணும்பொருட்டு (எடுத்துச் சொல்லும்பொருட்டு) பரவாதிகளின் மதங்களை நிராகரிக்க வேண்டி, முதலில்

'நபூமிர் நதோயம் நதேஜோ
நவாயுர் நகம்' என்னும் வாக்கியத்தினால்

தேகாத்மவாதத்தை நிராகரிக்கின்றார். "எது பூமியோ அது நானல்ல, எது நானோ அது பூமியல்ல; ஆகலால் ஒன்றற்கொன்று தாதாத்மியமில்லையென்றறியவேண்டும்,

வாதி (சார்வாகன்) தனித்தனியே பூமியாதிகளை ஆத்மாவென்று ஒப்புக்கொள்ளவில்லை. அவைகளின் சேர்க்கையே ஆத்மாவென்று ஒப்புக்கொண் டிருக்கின்றானாயினும் அவன் மதத்தில் அவயவியை ஒப்புக்கொள்ளாமையாலும், (அவயவியை யொப்புக்கொண்டால்) ஐந்தாவது தத்துவத்தை யொப்புக்கொண்டதாக முடியுமாகையாலும், சம்யோகமுதலிய சம்பந்தங்களை யொப்புக்கொள்ளாமையின் சேர்க்கையென்றவஸ்தாமையாலும் சங்காதம் பொருந்ாதென்னும் அபிப்பிராயத்தினால் தனித்தனியே பூதங்களை நிராகரித்ததனால் பௌதிகமான தேகாத்மவாதம் நிராகரிக்கப்பட்டது.

பூத சதுஷ்டயத்தான் தத்துவமென்று சொல்லுகின்றவன் மதத்தில் ஆவரணமின்றி (மறைவின்றி) இருப்பதே ஆகாசம்; அஃது அசத்து; அந்த ஆகாசம் தேகத்தைக் குறித்து உபாதானமன்று. (அவன் ஆகாசத்தை யொப்புக் கொள்ளாமையால் அதனை நிராகரிக்க வேண்டுவதேதற்கு?) ஆயினும் அத்வைத சித்தாந்தத்தில் ஆகாசம் பாவபதார்த்தமே; அது தேகத்திற்கு உபாதானமென்றொப்புக் கொண்டிருப்பதால் ஆகாசமும் ஆத்மாவென்னும் பிரசக்தி (சங்கை) வருமாகையால் அஃது ஆத்மாவல்லவென்று நிராகரிக்கப்பட்டது.

அல்லது 'நவாயு:' (வாயுவல்ல) என்று சொல்லப்பட்டிருக்கையில் தேகாத்மவாதத்தின் நிராகரணம் செய்யப்பட்டது. "நகம்" என்பதனால் சூனியவாதத்தின் நிராகரணம் செய்யப்பட்டது; 'க' சப்தமானது சூனியத்



தைக் கூறுகிறபடியால். இந்திரியமன்றென்பதனால் இந்திரியங்கள் ஒவ்வொன்றும் ஆத்மாவல்லவென்று நிராகரணம் செய்யப்பட்டது. அவைகளின் சமூகங்களல்லவென்பதனால் தேகாகாரமாய்ப் பரிணமித்த அவயவியான பூதங்களின் சேர்க்கையும் இந்திரியங்களின் சேர்க்கையும் நிராகரிக்கப்பட்டன.

முன்னர்ச் சங்காதத்தை யொப்புக் கொள்ளாமல் தனித்தனியாய்ப் பூதங்கள் நிராகரிக்கப்பட்டன. பின்னர்ச் சங்காதத்தை ஒப்புக்கொண்டும் பூதங்கள் நிராகரிக்கப்பட்டன. இதுதான் (இரண்டு கக்ஷிக்குமுள்ள) பேதம்.

பூதங்களை நிராகரித்ததனால் பௌதிகமான பிராணனங்களும் நிராகரிக்கப்பட்டன.

மனத்தை நிராகரித்ததனால் கர்த்திருத்வ போக்திருத்வ முதலிய தர்மங்களுடன் கூடியும் தேகத்தைவிட வேறாகவும் மனோவிர்த்தியுமான க்ஷணிக விஞ்ஞானமும் ஆத்மாவன்றென்று நிராகரிக்கப்பட்டது; எனெனின்,

(1) சித்தாந்தத்தில் ஞானம், இச்சை, சுக முதலியவைகள் அந்தக்கரணத்தை யாசிரயித்துக் கொண்டிருக்கின்றன வென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருப்பதாலும்,

(2) காம சங்கல்பாதிகளைச் சொல்லத் தொடங்கிய "ஸர்வம் மந: ஏவ—எல்லாம் மனமே" என்னும் சுருதிப் பிரமாண முண்மையாலு மென்க.

இப்படி வியாக்கியானஞ் செய்வதால் தேகமுதல் கேவல போக்தா வரையிலுள்ள அவ்வவ்வாதிகளினால் ஒப்புக் கொள்ளப்பட்ட வஸ்துக்கள் அநாத்மாவென்று பிரதிஜ்ஞை பண்ணப்பட்டன. அதன் காரணத்தைக் கூறுகின்றார்.

(மேற்கூறிய பூதாதிகள்) 'அநேகாந்திகத் வாத்' (வியபிசாரியாயிருப்பதால் அஃதாவது நாசமுடையனவாயிருப்பதால் அநாத்மாக்கள்). ஆத்மாவோ தேசகாலங்களினால் அபரிச்சின்னமாயிருக்கிறது. தேசகாலங்களினால் பரிச்சின்னமான வஸ்துக்கள் அநாத்மாக்கள்; கடாதிபோல்.

(ஆத்மாவானது) துவம்சப்பிராகபாவங்களைக் கிரஹிக்க முடியாததாலும், அநாத்மாக்களெல்லாம் ஜடமாகையாலும், தன்னைவிட இதரமானவைகளில் ஆத்மத்தன்மையிராமையாலும், ஆத்மாவொன்றாயிருந்தாலும் சுகதுக்காதிகளுக்கு ஆசிரயமான அந்தக்கரணங்களுக்குப் பேதம் ஒப்புக்கொண்டிருப்பதாலும் (சைத்திரன் சுகியாயிருக்கிறான், மைத்திரன் துக்கியாயிருக்கிறான் என்னும்) வியவஸ்தை பொருந்துகின்றது.

(தன்னாலேயே தன்னுடைய துவம்சப்பிராகபாவங்கள் கிரஹிக்கப்படட்டுமே யென்றால்) தன்னாலேயே தன்னுடைய அபாவத்தைக் கிரஹிப்பதில் விரோதமுண்மையால் கிராஹ்ய (அறியப்படும்) காலத்தில் கிராஹக (அறிபவன்)



மின்று. கிராஹகமிருக்கும்போது கிராஹ்யமின்று. பண்ணினகர்மத்தின் ஹானியும், பண்ணாதகர்மத்தின் வரவும் நேரிடுமாகையால் துவம்சப்பிராகபாவங்கள் ஆத்மாவிற்கில்லை. சத்ரூபமான ஆத்மா எங்கும்சம்பந்தித்திருப்பதால் அத்தியந்தாபாவமும் சம்பவிக்கமாட்டாது. துவைதம் மித்தையாகையால் அதிஷ்டான சத்தையுடன் தாதாத்மியத்தை யடைந்திருப்பதால் சுக்தி ரஜதாதிகள்போல் (ஆத்மாவின் கண்) அத்தியஸ்தமாயிருப்பதால் சத் தாதாத்மியத்தோடு கூடித்தோன்றுந் திரிசியத்தில் சத்பேதம் பொருந்தாது.

இதனால் (ஆத்மாவின் அப்பிரதியோகித் தன்மையைக் கிரஹிக்கும் பிரமாணமிருப்பதால்) ஆத்மா அபாவப்பிரதியோகி யன்றாம். தேகேந்திரியாதிகளோ அபாவப் பிரதியோகிகள். ஆதலால் அவைகள் ஆத்மாவன்று. ஆனால் சுவப்பிரகாச வடிவ அத்வைத ஆத்மாவினிடத்தில் அநாதி அநிர்வசநீய அவித்தையினால் கற்பிக்கப்பட்ட தேகாதிப் பிரபஞ்சமும் அநிர்வசநீயமாமென்பது வேதாந்தத்தின் இரஹஸியமாம்.

(ஆ) ஆத்மா போதரூபமென்பதே உன்னுடைய கொள்கை. சுஷுப்தியில் போதமில்லை; தூங்கி விழித்தவனுக்கு மிகவும் மூடனாயிருந்தே னென்கிற ஸ்மரணமுண்டாகின்றபடியால். அப்படியிருக்க ஆத்மா எங்ஙனம் அவிநாசியென்று சொல்லக்கூடும்?

(ச) "சுஷுப்தியேகசித்தஃ"—ஆத்மா சுஷுப்திக்குச் சாக்ஷிரூபமாயிருப்பதால் சுஷுப்தி காலத்தில் இல்லை

யென்று சொல்லக்கூடாது. சுஷுப்தியில் ஆத்மா இல்லையென்று ஒப்புக்கொண்டால் நித்திரையில் நான் சுகமாயிருந்தேனென்று விழித்துக்கொண்ட காலத்தில் உண்டாகிற ஸ்மரணம் பொருந்தாமற் போய்விடும்.

மாதா, மானம், மிதி, மேயம் இவைகள் சுஷுப்திகாலத்தில் வியபிசாரியா (நாசமுள்ளனவா) யிருந்தாலும் அவற்றின் பாவாபாவங்கட்குச் சாக்ஷியான ஆத்மாவிற்கு மூன்று காலத்திலும் நாசமின்றாம்.

(ஆ) பிரமைக்கு ஆசிரியம் பிரமாதா; அவனே கர்த்தா போக்தா; பிரதீபம் (விளக்கு) போல் தன்னையும் அன்னியத்தையும் பிரகாசிப்பிக்கின்றான். ஆகையால் அவன் கடாதிகள் சாக்ஷியை அபேக்ஷிக்கின்ற வாறுபோன் றபேக்ஷிக்கிறதில்லை.

(ச) பிரமாதா *13. விகாரியாகையால் தன்னுடைய விகாரத்தைக் குறித்துச் சாக்ஷித்துவ மதற்குப் பொருந்தாது; திரிசியத்திற்குத் திருஷ்டாத்தன்மை பொருந்தாது. பிரமாதாவும் பரிணாமியாகையால் திரிசியமாயிருக்கிறான். ஆகையால் ஏகமான கூடஸ்தன் சர்வசாக்ஷி. (ஆகவே மேற்கூறிய தோஷமின்று.)

(ஆ) ஏகனாயும் பிரமை முதலிய தர்மங்கள் அற்றவனாயுமுள்ள கூடஸ்தனைச் சாக்ஷியாக ஒப்புக்கொள்ளுதல் கூடாது; பிரமாண மின்மையால்.

*13. பிரமாதா—(அந்தக்கரண வாபாச) ஜீவன்.



(ச) "தமேவபாந்தம் அநுபாதிசர்வம் தஸ்யபாஸாஸர்வமிதம் விபாதி".

(இ-ள்.) பிரகாசிக்கின்ற அவனை அநுசரித்தே சர்வமும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. அவனுடைய பிரகாசத்தால் சர்வமும் பிரகாசிக்கின்றன.

"நதிர்ஷ்டே: திருஷ்டாரம் பஸ்யே:"

(இ-ள்.) சக்ஷுசு முதலிய இந்திரியங்களா லுண்டான ஞானத்தைப் பிரகாசிப்பிக்கின்றவனைப் பார்த்தல் முடியாது.

"அதிர்ஷ்டோ திருஷ்டா நான்னியோதோஸ்தி திருஷ்டா"

(இ-ள்.) அவன் எல்லாவற்றையும் பார்க்கிறவன்; மற்றவைகளால் பார்க்கமுடியாதவன்; இவனைவிட வேறான திருஷ்டாவில்லை.

இவ்வாறுகூறும் வேதாந்தப் பிரமாண ராஜாவினால் அவனே (கூடஸ்தனே) சர்வசாக்ஷியென்று பட்டாபிஷேகம் பண்ணப்பட்டிருக்கின்றான். (ஆதலால் நீ கூறியது பொருந்தாது.)

(ஆ) பிரமைகளுக் காசிரயமான அகூடஸ்தரான பிரமாதாக்களை விட்டுப் பிரமைக்காசிரயமன்றி யிருக்கிற கூடஸ்தனைப் பிரமாண ராஜாவானவன் (வேதாந்தமானது) சர்வசாக்ஷியென்று சொல்வது இந்திரஜாலமே (மிக்க விந்தையே)!

(ச) இங்ஙனம் நீ இந்திரஜாலமாமென்று சொன்னது சரியே; (ஏனெனின்) சொப்பனம்போல் பிரமாதா அவித்தியா காரியமாயிருப்பதால்.

(ஆ) ஆயினும், திரிசிய (மன) மானது கடாதிகளைப் போல் ஜடமாகையால் எவ்வாறு பிரமைக்காசிரயமாகும்?

(ச) தர்ப்பணாதி (கண்ணாடி முதலியவை) போல் சொச்சமாயிருப்பதால் சித்தினுடைய பிரதிபிம்பத்தைக் கிரஹிப்பதனாலாவது சித்தோடு தாதாத்மியாத்தியாசத்தினாலாவது [பிரமாசிரயத்தன்மை திருசிய (மன) த்திற்குச் சம்பவிக்கும்].

(ஆ) ரூபமற்றதும் அவயவமற்றதுமான சைதன்யத்திற்கு எப்படி பிரதிபிம்பங்கூடும்?

(ச) இவ்விடத்தில் என்ன பொருந்தாமையிருக்கிறது? பிரம (மயக்க) காரணங்கள் அநேகமாயிருக்கின்றன. செவ்வரத்தம் புஷ்பத்தின் ரூபம் ரூபமற்றதாயிருந்தாலும் ஸ்படிகாதிகளில் பிரதிபிம்பித்ததாகக் காணப்பட்டிருக்கின்றது. சப்தத்திற்கும் பிரதி சப்தமென்னும் பேருள்ள பிரதிபிம்பம் காணப்பட்டிருக்கின்றது. இவ்விரண்டு பிரதிபிம்பங்களும் யாவராலும் அங்கீகாரம் பண்ணப்பட்டிருக்கின்றன. ஆத்மப்பிரதிபிம்பம் இவ்விரண்டற்கும் வேறுபட்டதென்று நிரூபிக்க முடியாது.

(ஆ) ஆயினும், இந்திரியகிராஹியத்திற்கே பிரதிபிம்பமுண்டாம்.

(ச) நீ சொன்னது சரியன்று; வியபிசாரதோஷம் வருகின்றபடியால். இந்திரியத்தினால் கிரஹிக்கப்படாததும்



சாக்ஷிப்பிரத்தியக்ஷத்தினால் விளங்குவதுமான ஆகாசத்திற்கும் ஜலாதிகளில் பிரதிபிம்பங் காணப்பட்டிருக்கின்றது. வேறாயின், முழங்கால்வரைக்குமுள்ள ஜலம் அதிக ஆழமுள்ளதென்னும் ஞானம் உண்டாகாமற் போய்விடும்.

ஆகாசத்தின் பிரதிபிம்பம் சாக்ஷிபாஸியமாயிருந்தாலும் அதிஷ்டானத்தைக் கிரஹிக்கும்பொருட்டுச் சக்ஷுசு அபேக்ஷிக்கப்படுகிறது. இதனால், ஆகாயம் நீலவர்ண முடையதென்னும் பிராந்தியிலும் சக்ஷுசுவின் *14. *அந்வய வியதிரேகங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தப் பிராந்தியில் பிரகாசத்தோடுகூடிய ஆகாசம் அதிஷ்டானமாயிருக்கின்றது. ஆகையால் பிம்பம் சாக்ஷுஷமா (சக்ஷுசுக்கு விஷயமா) யிருந்தாற்றான் (பிரதிபிம்பிப்பதில்) ரூபத்தை அபேக்ஷிக்கும்; பிம்பம் சாக்ஷுஷமன்றியிருப்பின் ரூபத்தை அபேக்ஷிக்கமாட்டாது.

(ஆ) ஆயினும், ஆத்மா பிரதிபிம்பிப்பதில் யாது பிரமாணம்?

(ச) கேட்பாயாக. இதற்கு

---

*14. அது (காரணம்) இருந்தால் அது (காரியம்) இருத்தல் அந்வயமாம். அது இல்லாவிட்டால் அது இல்லாதிருத்தல் வியதிரேகமாம்.

"ரூபம் ரூபம் பிரதிரூபோ பபூவ தஸ்யரூபம் பிரதிசட்சாணாய"

(இ-ள்.) ரூபந்தோறும் பிரதிபிம்பமாக ஆய்விடுகிறான். நானென்னும் வியவகாரத்தின் பொருட்டு இவனுக்கிதுரூபம்.

"மாயாபாஸேந ஜீவேசௌ கரோதி"

(இ-ள்.) மாயையானது பிரதிபிம்பத்தினால் ஜீவேசுரர்களாகச் செய்கிறது.

இவை முதலிய சுருதிகளும்,

"ஏகதாபகுதாசைவ திரிஸ்யதே ஜலசந்திரவத்"

(இ-ள்.) ஒன்றாகவும் அனேகமாகவும் ஜலசந்திரன்போல் காணப்படுகின்றான். (வாஸ்தவத்தில் ஆத்மாவொன்றாயிருப்பினும் உபாதிவசத்தால் பலவாகக் காணப்படுகின்றது.)

என்னும் ஸ்மிருதியும்,

"ஸஏஷஇஹ பிரவிஷ்டஃ"

(இ-ள்.) அவனே இந்தச் சரீரத்தில் பிரவேசித்தான்.

"ஸஏதமேவஸீமாநம் விதார்ய ஏதயாத்வாராபிரபத்தியத"

(இ-ள்.) அவன் இந்த எல்லையை (பிரம்மரந்திரத்தை)ப் பிளந்து கொண்டு இதன் வழியாய் உள்ளே (ஜீவரூபமாய்) பிரவேசிக்கிறான்.

"தத்ஸிருஷ்ட்வா ததேவாநு பிராவிசத்,"



(இ-ள்.) அந்தப் பிரஹ்மமானது அதைச் சிருஷ்டித்து அதில் பிரவேசித்தது.

இவை முதலிய சுருதி (கேள்வி) அர்த்தாபத்தியும் பிரமாணமாம்.

"ஆபாஸஏவச—ஜீவன் பரமாத்மாவின் பிரதிபிம்பம்" என்னும் (2-வது அத்தியாயம், 3-வது பாதம்) பிரஹ்ம சூத்திரமும், "அத ஏவச உபமா சூர்யகாதிவத்—ஆகையினாற்றான் சூரியப் பிரதிபிம்பம்போலிருக்கின்றதென்னு முபமானமிருக்கின்றது" என்னும் (3-வது அத்தியாயம் 2-வது பாதம்) பிரஹ்மசூத்திரமும் பிரமாணமாம்.

அந்தப் பிரதிபிம்பத்தைச் சத்தியமென்று பிரதிபிம்பவாதிகளும், மித்தையென்று ஆபாசவாதிகளும் சொல்லுகின்றனர்.

சொரூபத்திலோ இருவருக்கும் விவாதமி (கட்சியி)ன்று. ஆகையால் அந்தவிசாரம் வேறாம். (பிரகிருதத்தில் உபயோகமின்றாம்.)

அந்தப்பிரதிபிம்பம் அசேதனத்தைப் பார்க்கினும் விலக்ஷணமா (வேறு)மென்பது சுருதி சித்தமாயும் அநுபவசித்தமாயுமிருக்கின்றது. ஆகையால், அந்தக்கரணத்திற்கு ஆத்மாவின் பிரதிபிம்பாத்தியாசத்தின் வாயிலாகப் பிரமாத்ருத்தன்மை சித்திக்கிறது.

(ஆ) அத்தியாசமும்பொருந்தாது; அங்ஙனமன்றோ, ஆத்மாவில் அநாத்மாவின் அத்தியாசம் பண்ணப்படுகிறது?

அல்லது, அநாத்மாவில் ஆத்மாவின் அத்தியாசம்பண்ணப் படுகிறதா? என்னுமிரண்டு பக்ஷத்துள்

முதலாவது பக்ஷம்பொருந்தாது; ஏனெனின்,

ஆத்மா சாமானியவிசேஷ தர்மங்களின்றி யெப்போதும் பிரகாசித்துக் கொண்டிருப்பதாலும் சாதிருசிய (ஒப்புமை) *15. முதலியவை யிராமையாலும் அதற்கு அதிஷ்டானத்தன்மை சம்பவியாது.

இரண்டாவது பக்ஷமும் பொருந்தாது; ஏனெனின்,

(1) அநாத்மாவை மித்தையென்றங்கீகரித்திருப்பதாலும்,

(2) மித்தியாவஸ்துவை அதிஷ்டானமாகக் கூறின் சூனியவாதமதத்தை அநுசரிப்பதாக முடிவதாலும்,

(3) அநாத்மா சத்தியமென்று சொல்லுமிடத்து அதற்கு நிவிர்த்தியுண்டாகாமையாலும் மோட்சம் சித்திக்காது.

சத்தியவஸ்து ஒரு அதிகரண (இட)த்திலும் நிவிர்த்தி யடைவதின்று. ஞானத்தால் நிவிர்த்தி யடைகிறவஸ்து சத்தியமாகமாட்டாது.

---

*15. முதலியவை என்றதால் இந்திரியத்திற்கு விஷயமாதல் முதலியவைகளுங் கொள்க.



"பித்யதே ஹ்ருதயக் கிரந்தி: சித்யந்தே ஸர்வஸம்சயா: க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மின் திருஷ்டே பராவரே"

(இ-ள்.) பிரஹ்ம சாக்ஷாத்காரத்தை யடைந்திருக்கும்போது ஞானியின்கர்மங்கள் நாசத்தை யடைகின்றன; சர்வ சம்சயங்களும் நிவிர்த்தியாகின்றன; காமாதிகளும் நாசத்தையடைகின்றன.

"தமேவவிதித்வா அதிமிருத்யுமேதி நான்ய: பந்தா வித்யதே அயநாய"

(இ-ள்.) அந்தப் பிரஹ்மத்தையே யறிந்து அவித்தையை நாசம் பண்ணுகிறான்; மோக்ஷத்தையடைய வேறு மார்க்கமின்று.

"தரதிசோகமாத்மவித்—ஆத்மஞானி துக்கத்தைக் கடக்கின்றான்."

என்றற்றொடக்கத்துச் சுருதிகள் ஞானத்தால் சகல சம்சாரமும் நிவிர்த்தியாகின்றனவென்று பிரதிபாதித்துக்கொண்டு அந்தச்சம்சாரம் மித்தையென்று சூசிப்பிக்கின்றன (குறிப்பிக்கின்றன).

"ஏகமேவாத்விதீயம்—ஒன்றே இரண்டாவதின்று."

"அதோந்யத் ஆர்த்தம்—இதை (பிரஹ்மத்தை) விட மற்றவை யெல்லாம் நாசமுள்ளவை."

"நேஹநாநாஸ்தி கிஞ்சந—இந்தப் பிரஹ்மத்தின்கண் பின்னமான யாதொன்றுமில்லை."

"அதாத ஆதேசோ நேதிநேதி-இதுவுமன்று இதுவுமன்று என்றும் உபதேசம் ஏற்பட்டிருக்கிறது."

என்றத்தொடக்கத்துச் சுருதிகள் அநாத்மாவைச் சாக்ஷாத்தாகவே மித்தையென்று பிரதிபாதிக்கின்றன.

## அநுமானம்.

அநாத்மா மித்தை; திரிசியத் தன்மையால்; சுத்தி ரஜதாதிபோல் என்னும் அநுமானத்தாலும் (அநாத்மா மித்தையாம்).

ஆத்மாவில் அத்தியஸ்தமா யிருப்பதினாலேயே அநாத்மா சித்தித்திருக்கின்றது. அவ்வநாத்மாவில் ஆத்மாத்தியாசம் (ஆத்மாவின் சம்சர்க்காத்தியாசம்) உண்டாகின்றது; (எங்ஙனமெனின்) அநாத்மாவின் அத்தியாசத்தால் ஆத்மாவிற்குத் தோஷசாதிரிசிய முதலிய அத்தியாச காரணங்கள் சம்பவிப்பதால். ஆத்மாவினிடத்து அநாத்மாத்தியாச மிருக்கிறதென்பதில் ஆத்மாசிர *16. யாதி தோஷம் வருவதால் (அத்தியாசம் பொருந்தாது,) இதனாலே ஆத்மாநாத்ம

*16. ஆதியென்பதனால் அன்னியோன்னியாசிரயம், சக்கிரி, அநவஸ்தையாகிய விவைகளையுங் கொள்க.

ஆத்மாசிரய தோஷம்—தன்னைப்பற்றுத லென்னுங் குற்றம். அஃதாவது ஒன்று தானே தனதுற்பத்தியில் காரணமாதல். இங்கு அஞ்ஞானம் தனது அத்தியாசத்திற்குத் தானே காரணமென்று கூறுதல் ஆத்மாசிரய தோஷமாம்.



அத்தியாசம் அவித்தியா வடிவ மாகையால் விகற்பத்திற் (வேறுபாட்டிற்) கிடமில்லை யென்பதும் நிராகரிக்கப்பட்டது. சுவப்பிரகாசமான ஆத்மாவில் அவித்தையும் பொருந்தாது. அங்ஙனமன்றே;

அவித்தையானது அத்தியஸ்தமா? அல்லது அநத்தியஸ்தமா? அவற்றுள்

(1) முதலாவது பக்ஷத்தில் ஆத்மாசிரய முதலிய தோஷப்பிரசங்கம் எங்ஙனம் வாராமற்போம்?

(2) இரண்டாவது பக்ஷத்தில் அதற்கு (அவித்தைக்கு) நாசமில்லாமையின் மோக்ஷம் வாராமற்போம். சகலவியவகாரமும் அத்தியாசத்தினாலுண்டாகின்றன வென்று சொல்லுமிடத்து இது பிரமை இது பிராந்தி யென்னும் வியவஸ்தையி (வேறுபாடி) ன்றிப்போம்.

ஒரே ஆத்மாவிற்குப் *17. பிரமாணத்தன்மை, பிரமேயத்தன்மை, பிரமிதித்தன்மை, பிரமாதிருத்தன்மைகள் சம்பவித்தல் விருத்தமாகும். விரோதமில்லா தங்கீகரிக்கின்

*17. பிரமாணத்தன்மை முதலியவை ஒரே ஆத்மாவிற்கு விரோதமின்றிச் சம்பவிக்குமென்றுரைக்குமிடத்து அது சுகதமதத்திற்குச் சமானமாகும்; எனெனின், சுகதர் (பௌத்தர்கள்) க்ஷணிக (கணப்போதிருப்பதான) விஞ்ஞானமொன்றே பிரமாணத்தன்மை முதலியனவாகப் பரிணமிக்கின்றதென்று கூறுகின்றமையினென்க.

றன மென்று சொல்லுமிடத்துச் சௌகத (விஞ்ஞான வாதியின்) மதப்பிரவேசம் சம்பவிக்கும்.

(ச) நான் மனிதன், கர்த்தா, போக்தா என்றற்றொடக்கத்து ஞானம் சர்வஜனப் பிரசித்தம். அந்த ஞானம்

i. ஸ்மிருதியுமன்று;

(1) பிரத்தியக்ஷமாய் விளங்குவதால்,

(2) பேதஞான அபாவத்தினலுண்டான விசிட்ட புத்தித்தன்மையால்.

ii. பிரமையுமன்று; சுருதி யுக்திகளினல் பாதிக்கப் படுவதால்.

“யோயம் விஞ்ஞாநமய: பிராணேஷு ஹிருத்தியந்த: ஜோதி: புருஷ:”

(இ-ள்.) எவன் விஞ்ஞானமயனே அவன்பிராணனிலும் விலட்சணமாய் இருதயத்தி லிருக்கிறஜோதி ரூப புருஷன்.

“அயமாத்மா பிர்ம்மா”

(இ-ள்.) இந்த ஆத்மாப் பிரஹ்மம்.

“ஸத்தியம் ஞாநம் அநந்தம் பிர்ம்ம”

(இ-ள்) சத்தியமாயும், ஞானசொரூபமாயும், அநந்தமாயுமிருக்கின்றது பிரஹ்மம்.

“விஞ்ஞாந மாநந்தம் பிரும்ம”

(இ-ள்.) விக்கியானமாயும் ஆனந்தமாயு மிருக்கிறது பிரஹ்மம்.

“ய: ஆத்மா அபஹதபாப்மாயத் ஸாக்ஷாத் அபரோக்ஷாத்பிர்ம்மய: ஆத்மாஸர்வாஸந்தர: யோசநாயாபிபாஸே



சோகம்மோஹம் ஜராம் மிர்த்தியும் அத்தியேதி ஸயத்த: திரகிந் சித்பஸ்யதி அநந்வாகத: தேநபவதி அஸங்கோஹ அயம் புருஷ:”

(இ-ள்.) எந்த ஆத்மாவானவன் பாபமற்றவனே, எந்தப்பிரஹ்மம் பிரத்தியக்ஷமாயிருக்கிறதோ, எந்த ஆத்மா சர்வாந்தரியாமியோ எந்த ஆத்மா பசிதாகங்களையும் சோகம், மோகம், ஜரை, மிருத்திமாய இவைகளையும் தாண்டுகிறானே, எவன் சொப்பனகாலத்தி எதைப் பார்க்கிறானே அவன் அதனுடன் சம்பந்தப் படாதவன், இந்தப் புருஷன் சம்பந்தமற்றவன்.

என்றற்றொடக்கத்துச் சுருதிகள் அகர்த்தா அபோக்தா பரமாநந்த பிரஹ்மரூபமென்று ஆத்மாவைக் காட்டுகின்றன.

விகாரமுடையது பரிச்சின்னமாகும். பரிச்சின்னமுடையது அநாத்மாவாம். (ஆத்மா) தன்னலேயே தன்னைக் கிரஹிக்கும் பக்ஷத்தில் (அதற்குக்) கர்மகர்த்துருத்துவமாகப் பொருந்துந் தன்மை சம்பவிக்க மாட்டாது.

திருக்குவிற்கும் கிரியத்திற்கும் சம்பந்தம் பொருந்தாமையாலும், *18. பேத சம்பந்தத்தினலாவது அபேத சம்பந்தத்தினலாவது *19. தர்ம *20. தர்மிபாவம் பொருந்

*18. சையோக சமவாய சம்பந்த மிரண்டும் பேத சம்பந்தமாம்; தாதாத்மிய சம்பந்தம் அபேத சம்பந்தமாம்.

*19. தர்மம்-கர்த்திருத்துவ முதலியவை.

*20. தர்மி-அவற்றை யுடையது.

ஞானமையாலும், ஞானமநித்திய (அநேக) மென்று சொல்லுமிடத்து அந்தந்த (ஞான) வியக்திகளுக்குப் பேதம், அவற்றின் த்வம்சம், பிராகபாவம், சமவாயம், ஞானத்துவ மென்னும் ஜாதிமுதலியவற்றை ஒப்புக்கொள்ளின் *21. கௌரவமாம்.

ஞானம் ஏக (நித்திய) மென் றொப்புக்கொள்ளுவது மிகவும் லாகவமாம் (எளிதின் முடிதலாம்). கடஞான மென்றும் படஞான மென்றும் தோன்றும் ஞானபேதம் கட முதலிய உபாதியினாற்றான் தோன்றுகின்றது. சுபீவத்திலோ ஞானம் ஞானம் என்றே ஏகரூபமாகவே அறியப்படுகின்றது. ஞானங்களின் உற்பத்தி நாச ஞானமோ அவசியம் கற்பிக்கவேண்டிய விஷய சம்பந்தத்தையே (அந்தஞானம்) விஷயமாகவுடைமையால் பொருந்தும்.

*22. உபாதிபராமரிச (சம்பந்த) மின்றிக் கடத்திற்கும் கடாந்தரத் (வேறுகடத்) திற்கும் பேதம் தோன்றுமையாலும், பிரதிபந்தக (தடையின்) ஞானமிராமையாலும் கடாதிகளுக்கு ஏகத்துவம் (ஒன்றுந்தன்மை) இருக்கட்டும்; இருப்பினும் ஒவ்வொரு புருஷனுக்கும் ஞானம் வெவ்வேறாக அங்கீகரித்தல் வேண்டும்; ஏனெனின், சைத்திரனறி

*21. ஒருவஸ்துவினாலேயே ஒருகாரியஞ் சித்திக்கக்கூடியதாயிருக்க, அதற்குப் பலவஸ்துக்களை ஹேதுவாகக்கற்பித்தல் மிகைபடக் கூறலென்னும் கௌரவதோஷமாம்.

*22. இவ்விஷயம் வியாக்கியானத்தையொட்டி விரித்தெழுதப்பட்டது.



ஞானம் மைத்திரனிடத்தின்மையால். இவ்வாறு கூறின் ஆகாசம், காலம், திக்காகிய இவைத்திற்கும் கடாகாசம் படத்தின்கணின்று; அந்தக்கடகாலத்தில் இந்தக்கடகாலமின்று; கிழக்குத்திக்கு மேற்குத்திக்கன்று என்றத் தொடக்கத்து ஞானத்தால் பேதம் வரல்வேண்டும். அந்தப் பேத ஞானமோ உபாதியாலாகியதாம். ஞானமொன் றென்பதினும் அங்ஙனமாம்.

கர்த்திருத்துவாதி வாஸ்தவமென்று சொல்லுமிடத்து மோக்ஷத்தை சித்திக்காமற்போம்.

ஆத்மா சுவப்பிரகாச வடிவமென் றங்கீகரிக்காவிடத்து ஜகத்திற்கு ஆந்தியம் (குருட்டுத்தன்மை) சம்பவிக்கும். ஆத்மா அதிகப் பிரீதிக்கு ஆச்ரயமாயிருப்பதால் ஆநந்த ரூபமாம். ஆகையால் ஆத்மா நிர்தர்மம், நித்தியம், சுவப்பிரகாசம், சுகசொரூபமாம். இவை முதலிய யுக்திகள் ஆத்மாவை நித்திய மென்றும், சுவப்பிரகாச மென்றும், பரமானந்த மென்றுந் தெரிவிக்கின்றன. ஆகையால் நான் மனிதன், நான் கர்த்தா என்றத்தொடக்கத்து ஞானம் *23. பரிசேஷத்தால் பிராந்தி யென்று பெறப்பட்டது. பெறப்பட்டமையின், பிராந்திக்கு யோக்கியமான காரணமும் கற்பித்தல் வேண்டும். கற்பிக்கின்றகாரண.

*23. பலபொருள்கள் நிகழ்ந்தவிடத்து மற்றவை நிஷேதிக்கப்பட எஞ்சிநிற்கும் ஒருபொருளினுண்டாகும் நிச்சயமெதுவோ அது பரிசேஷமெனப்படும்.

மும் அந்விதியமான ஆத்மாவின்கண் அந்நியஸ்தமாக என்னை நானறியவில்லை யென்னும் ஞானத்தால் சித்திக்கின்றது. ஆகையால் நான் அறியேனென்னும் சாக்ஷி ஞானத்தால் சித்தமான அநிர்வசநீய அஞ்ஞானமே காரணமாம். இது (அஞ்ஞானம்) அபாவரூபமன்று.

ஞானம் நித்திய மாகையால் அதற்கு அபாவம் சம்பவியாதென்று முன்னமே சொல்லப்பட்டது. *24. தர்மி ஞானம், பிரதியோகிஞானம், *25. தர்மிஞானுபாவம், பிரதியோகி ஞானுபாவம் இவைகளால் *26. வியாகாததோஷம் சித்திக்கும்.

---

*24. வேறொன்றை யாசிரயித்ததாய்ச் சுதந்தரமின்றி யிருப்பது தர்மமெனப்படும். அதனையுடையது தர்மியெனப்படும்.

*25. அபாவ ஞான முண்டாவதற்குத் தர்மிஞானமும் பிரதியோகி ஞானமும் காரணமாம். அஞ்ஞானத்தை ஞானுபாவமென்று சொல்லு மிடத்து ஞானுபாவஞானத்தைக் குறித்து ஞானமாகிய பிரதியோகியின் ஞானமும் தர்மியாகிய அதிகரண (இட)த்தின் ஞானமும் காரணமாம். பிரதியோகிஞானமும் தர்மி ஞானமு மிருக்கும்போது அவற்றின் அபாவ ஞானம் வரமாட்டாது. எஞ்ஞான்றும் பிரதியோகியாகிய ஞானமும் தர்மியாகிய ஆத்மாவின் ஞானமுமிருத்தலால் அவற்றின் அபாவம் ஒருபோதும் வருதற்கிடமின்று. ஞானமுள்ளபோது அதன் அபாவமு மிருக்குமென்பது எனக்குநாக்கில்லை யென்பது போன்ற தோஷமாம்.

*26. ஒன்றற்கொன்று விரோதமுள்ள இரண்டு தர்மங்கள் ஒரு அதிகரணத்திற் (தர்மியிற்) கூடியிருப்பது வியாகாததோஷ



இந்த அஞ்ஞானம் பிராந்தி, சம்சயம், இவற்றின் சம்ஸ்காரபரம்பரை வடிவமு மன்றாம்; (நானஞ்ஞானி யென்று) பிரத்தியக்ஷமாயிருப்பதால். இறந்தகால எதிர்காலத்திய பிராந்தி சம்சயங்கள் இவற்றின் சம்ஸ்காரம் ஆகியவிவற்றைப் பிரத்தியக்ஷமாக அறிதல்முடியாது; ஆவரணமாயிருப்பதாலும், பிராந்திக்கு உபாதான காரணமாயிருப்பதாலும், ஆத்மா நிர்விகாரமாகையாலும், அந்தக்கரணாதிகள் அஞ்ஞான ஜன்னியமாகையாலும்,

"தேவாத்ம சக்திம் ஸ்வகுணைர் நிகூடாம்"

(இ-ள்.) சிருஷ்டியாதிலீலையோடு கூடிய பிரம்மத்தின் சக்தி (பிரம்மத்தை யாசிரயித்துக் கொண்டும் விஷயமாக்கிக் கொண்டு மிருக்கின்ற சக்தி) சத்துவரஜஸ்தமோ குணங்களுடன் கூடியிருக்கின்றது.

"மாயாந்து பிரகிருதிம் வித்தியாத் மாயினந்துமஹேச்வரம்"

(இ-ள்.) மாயையை (உலகத்திற்கு) உபாதானகாரண மென்றறியவேண்டும். மகேசுவரனை மாயையோடு கூடினவனென்றறிதல் வேண்டும்.

"இந்திரோமாயாபி: புருரூப ஈயதே"

(இ-ள்.) பரமேசுவரன் மாயைகளினாலே அநேகரூபமாயறியப்படுகிறான்.

---

மெனப்படும். அது என்றாய்மலடி எனக்குநாக்கில்லை என்றாற் போல்வனவாம்.

" அநிருதேநஹி பிரத்தியூடா: "

(இ-ள்.) மித்தியாவடிவ அஞ்ஞானத்தால் மறைக்கப்பட்டவர்கள்.

" நீஹாரேண பிராவிருதா: "

(இ-ள்.) பனிக்குச் சமானமான அஞ்ஞானத்தால் சூழப்பட்டவர்கள்.

" பூயச்சாந்தே விசுவமாயா நிவிர்த்தி: "

(இ-ள்.) முடிவில் மறுபடியும் தேகாதிகாரியமாகிய விசுவமாயா நிவிர்த்தி யுண்டாகின்றது.

என்றற்றொடக்கத்துச் சுருதிகளாலும் (அஞ்ஞானமொன்றிருக்கின்றதென்று தெரியவருகின்றது.)

மாயை, அவித்தை, அநிர்வாச்சியம், அநாதம், தத்துவஞான நிவிர்த்தியம் (நிவிர்த்தியாதல்) என்றிவ்வாறு சொல்லப்படும் அஞ்ஞானமே *27. தனதத்தியாசத்திற்கும் மற்றவற்றின் அத்தியாசத்திற்குங் காரணம்,



(இவ்வாறு சொல்வதில்) ஆத்மாசிரயாதி தோஷமுண்டாகாது.

அவ்வஞ்ஞானம் அநாதியா (உற்பத்தியில்லாததா) யிருப்பதால் அத்தோஷங்கள் தள்ளப்பட்டன.

சுவப்பிரகாசமான ஆத்மாவே ஞப்தி (ஞான) ரூபமாகையால் ஆத்மாவிலே அத்தியாசம் சம்பவிக்கலாம்

---

*27. தனது பிரகாசத்தின் பொருட்டு வேறுபிரகாசத்தின் அபேக்ஷையின்றியதா யிருத்தலின், தன்னையும் பிறவற்றையும் நிர்வகிக்குந் தீபத்தைப்போலவும், சாங்கியர் முதலியோர் கொண்டுள்ள தன்னையும் பிறவற்றையும் நிர்வகிக்கும் சொப்பிரகாச ஆத்மாவைப்போலவும், நையாயிகர் கொண்டுள்ள தன்னையும் பிறவற்றையும் நிர்வகிக்கும் கடபடங்களின் அந்நியோந்நியா பாவவடிவப் பேதத்தைப் பேதிப்பது தானேயாகின்ற பேதத்தினைப்போலவும் முற்கூறிய காரியாத்தியாசத்தின் காரணமாகிய மூலாவித்தை யெனுவேல அது தன்னையும் பிறவற்றையும் நிர்வாகஞ்செய்வதாயிருத்தலின் சுத்த சேதனவடிவ அதிஷ்டானத்தில் தனது கற்பனைக்குக்காரணம் "தானேயாம்".

"எங்ஙனம் கடபடங்களைப் பேதிப்பது (பேதஞ்செய்வது) அவ்விரண்டின் பேதமோ அங்ஙனமே அப்பேதத்திற்குங் கடமுதலியவற்றோடுள்ள பேதமெதுவோ அந்தத் தனது பேதத்தையும் கட முதலியவற்றையும் பேதிப்பதும் தாதுவிய ஒருபேதமேயாமென்று கொண்டிருக்கின்றனர். ஈண்டுந் தானே கிரியையின் கர்த்தாவும் தானே கிரியையின் கர்ம (விஷய) முமாயிருத்தலின் ஆத்மாசிரய வடிவதோஷமுண்டாகின்றது. அவ்வாத்மாசிரயம் அவர்களுக்குத் தூஷணரூபமன்றாய் ஆனல், பூஷணவடிவமாம். இவ்வாறே எமது சித்தாந்தத்திலும் தனது அத்தியாசத்தில் அவித்தை தானே காரணமாமெனக்கொள்ளப்பட்டிருக்கின்றது. ஈண்டும் ஆத்மாசிரய வடிவ தோஷமுளது. அதுவும் தூஷணரூபமன்று; ஆனல் பூஷண ரூபமாம்" என்று பாலபோதத்தின் மூலத்திலும் உரையிலும் முறையே சொல்லப்பட்டிருக்கின்றது.

மாயாகாரிய ஆவரணவிக்ஷேப சக்திகள் ஆற்றொழுக்குப்போல் பிரவாகவடிவ அநாதியாகையின் அவற்றின் காரணத்திற்கும் அநாதித்துவமும் பொருந்தும்.

என்று மேற்கூறிய காரணங்களால் அத்தியாசத்துடன் கூடிய சைதன்னியத்தில் அகங்காராத்தியாசம், அந்த அகங்காராத்தியாசத்துடன் கூடிய சைதன்னியத்தில் காமசங்கற்ப முதலிய அகங்கார தர்மங்களின் அத்தியாசம், குருட்டுத்தன்மை செவிட்டுத்தன்மை நபும்சகத்தன்மை முதலிய இந்திரிய தர்மங்களின் அத்தியாச முண்டாகின்றன.

இந்திரியங்களோ பரோக்ஷமாகையால் அவைகளுக்கு அபரோக்ஷமான தர்மியின் அத்தியாசம் சம்பவிக்கமாட்டாதென்பது சித்தாந்தமாம். இந்திரிய தர்மாத்தியாசத்துடன் கூடிய ஆத்மாவில் "நான் மனிதன்" என்றறுபடக்கத்து ஸ்தூலதேகாத்தியாசம் மனிதத்தன்மை முதலிய தர்மங்களுடன் கூடியே யுண்டாகின்றதேயன்றி நான் தேகமென்று தர்மிசொரூபமாக வுண்டாகிறதில்லை; (ஏனெனின்) அவ்வாறு ஞானமுண்டாகாமையின்.

அந்த (ஸ்தூலதேக) அத்தியாசத்துடன் கூடிய ஆத்மாவில் ஸ்தூலத்தன்மை முதலிய தர்மங்களின் அத்தியாசமும், அந்த (ஸ்தூலத்தன்மை முதலிய தர்மங்களின்) அத்தியாசத்துடன் கூடிய ஆத்மாவில் பாஹியமான புத்திர பாரியாதிகளுடைய சாகல்ய (நிறைவு) வைகல்ய (குறைவு) முதலிய தர்மங்களின் அத்தியாசமு முண்டாகின்றன. இவ்வாறு சைதன்னியத்திற்கும் அகங்காரமுதல் தேகபரியந்தமான அநாத்மாக்களில் சம்சர்க்க (பிரதிபிம்ப வடிவ)



த்தினால் அத்தியாசம் சம்பவிக்கின்றது. அத்தியாசத்தின் விஷயதான (மறைப்பின்) தாரதம்மியத்தினால் பிரீதியின் தாரதம்மிய மேற்படுகின்றது.

"வித்தாத்புத்திரஃ பிரியம் புத்திராத்பிண்டஃ
பிண்டாத் ததேந்திரியம் இந்திரியேப்யஃ
பிரியஃ பிராணஃ பிராணாத்ஆத்மாபரஃ பிரியஃ"

(இ-ள்.) தனத்தைவிடப் புத்திரன் பிரியன்; புத்திரனைவிட ஸ்தூல சரீரம் பிரியம்; ஸ்தூல சரீரத்தை விட இந்திரியம் பிரியம்; இந்திரியங்களைவிட அந்தக்கரணம் பிரியம்; அந்தக்கரணத்தை விடப் பரமாத்மா பிரியமாம்.

என்று வார்த்திகாமிர்தத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

தேகத்தைவிட இந்திரியாதிகள் பிரியமாம்; ஆயுதம், மழை முதலியவற்றால் உபத்திரவ முண்டாகும்போது கண் முதலிய இந்திரியங்களை மூடுவது அநுபவசித்தமா யிருக்கின்றமையின்.

"நான் அஞ்ஞானி" யென்றல் முதலிய விடங்களில் பரஸ்பர அத்தியாசம் ஒப்புக்கொண்டபடியால், அத்தியாசமுழுமையும் பரஸ்பர (அன்னியோன்னிய) அத்தியாசத்தினால் சித் அசித் கிரந்தி (முடிச்சு) ரூபமாயிருக்கின்றது. இரண்டிலொன்றற்கு அத்தியாசம் ஒப்புக்கொள்ளுமிடத்து இரண்டிலொன்றற்கே பானம் (தோற்றம்) நேரிடும்; (ஏனென்னின்) அத்தியஸ்தமே பிராந்தியில் தோன்றுகின்றதென்னும் நியமமிருப்பதால்.

இவை ரங்க (சயம்) இரஜதங்கள் என்று சமூகாலம்பன பிரமம் (கூட்டத்தை விஷயமாகவுடைய பிராந்தி) போல்

இதரேதர (அன்னியோன்னிய) அத்தியாசம் அவசியம் ஒப்புக்கொள்ளல் வேண்டும். சர்வபாதா ஞானத்திற்கும் சைதன்னியம் அவதி (எல்லை) யாயிருப்பதால், அபாதவது பாத்திய (பொய்யென்று நிச்சயிக்கப்படுகின்ற) ஞானத்தில் விஷயமன்றியிருப்பதால் சைதன்னியம் மிச்சப்படுகின்றது. அங்ஙனமாவதால் சூனியவாதம் சம்பவிக்காது.

அத்தியாசத்தில் சத்தியாநிருத (பொய்) வஸ்துக்கள் தோன்றுகின்றன. ஆகையால், உத்தரோத்தரமான (பின் பின்னான) அசஸ்காராத்தியாசத்தைக் குறித்துப் பூர்வ பூர்வ (முன் முன்னான) அத்தியாசம் காரணமே. அது பீஜாங்குரம்போல் அநாதியாம். அவித்தியாத்தியாசமும் ஒன்றே; அதுவும் அநாதியாம்.

(ஆ) அத்தியாசம் அநாதியென்று சொல்லுமிடத்து

"ஸ்மிருதிரூப: பரத்ரபூர்வதிருஷ்டாவ
பாஸ: அத்தியாச:"

(இ-ள்.) ஸ்மிருதிரூபமாக வேறோரிடத்தில் முன்பார்த்த வஸ்துவின் தோற்றம் அத்தியாசம்.

என்று பாஷியக்காரர் அத்தியாசம் ஸ்மிருதிரூபமென்று சொன்னதால் அது சம்ஸ்கார ஜன்னியமென்று பெறப்பட்டது. அதற்கு விரோதம் வருகின்றது.



(ச) பாஷியக்காரர்வசனம் காரியாத்தியாச அபிப்பிராய மாகையால் மேற்சொன்ன தோஷமின்றாம்.

"பரத்ர பராவபாஸ:—ஒன்றில் வேறொன்றின் தோற்றம் அத்தியாசமாம்"

இதுவே ஸாதி (உற்பத்தியுடையது) அநாதியா (உற்பத்தியில்லாதது)ன அத்தியாசத்திற்குப் பொதுவான லக்ஷணமாம்.

அல்லது "ஸத்தியாந்ருதே மிதுநீக்ருத்யா—சத்திய வஸ்துவையும், மித்தியாவஸ்துவையும் ஒன்றாகக்கலந்து" என்னும் பாஷியவசனத்தினால் சத்திய மித்தியாவஸ்துக்கள் சேர்ந்துதோன்றுவது அத்தியாசமா மென்பது சித்தாந்த லக்ஷணம்.

இவ்வாறு லக்ஷணம் சொல்லுவதால் காரணாத்தியாசத்திலும் *28. அவ்வியாப்தியில்லை.

*29. பீஜாங்குரம்போல் காரியாத்தியாசமும் பிரவாகரூப அநாதியென்று சொன்னதினால் யாதொரு தோஷமு

---

*28. லக்ஷியத்தின் ஏகதேசத்தில் லக்ஷணமிருத்தல் அவ்வியாப்தி யெனப்படும்.

*29. பீஜத்தி (வித்தி) னின்று அங்குரமு (முளையு) ம் அங்குரத்தினின்று பீஜமுமுண்டாவதுபோல்.

யின்றும். இவ்வாறு அத்தியாசம் சித்தித்திருக்க ஒரு ஆத்மாவிற்கு ஜீவேசுவராதி வியவஸ்தையும் பிரமாண பிரமேயாதி வியவஸ்தையும் பொருந்தும்.

—o:o—

## ரு. வார்த்திககாரர் மதம்.

அங்ஙனமன்றே அஞ்ஞான *30. உபஹிதமான ஆத்மா (ஈசுவரன்) அஞ்ஞானத்துடன் தாதாத்மியத்தை யடைந்தவனாகக்கொண்டு தனக்கும் தன் பிரதிபிம்பத்திற்கும் பேதமிராமையால் அந்தர்யாமி யென்றும் சாக்ஷியென்றும் ஜகத்காரண மென்றும் சொல்லப்படுகின்றான்.

புத்தியுபஹிதமான ஆத்மாவும் புத்தியோடு தாதாத்மியத்தையடைந்து தனக்கும் தன்பிரதிபிம்பத்திற்கும் பேதமிராமையால் ஜீவனென்றும், கர்த்தாவென்றும், போக்தாவென்றும், பிரமாதாவென்றும் சொல்லப்படுகின்றான்.

இவ்வாறு வார்த்திககாரர் சொல்லுகின்றனர்.

தேகந்தோறும் புத்தி பின்னபின்னமா யிருப்பதால் அதனையடைந்த சிதாபாச (சித்பிரதிபிம்ப) பேதத்தால் அதனுடன் ஒன்றான சைதன்னியமும் பின்னம்போல்

*30. உபஹிதம்—உபாதியுடன் கூடியது.



தோன்றுகின்றது. அஞ்ஞானத்திற்கோ சர்வகாலத்திலும் பேதமிராமையால் அதனையடைந்த சிதாபாசனுக்கும் பேதமின்று. பேதமிராமையால், அதனுடன் ஒன்றான (பிரிவற்ற) சாக்ஷி சைதன்னியத்திற்கும் ஒருகாலும் பேதம் தோன்றுகின்றதில்லை.

இந்தப்பக்ஷத்தில் தத்துவமுதலிய பதங்களில் ஜஹத் (விட்ட) லக்ஷணையே ஒப்புக்கொள்ளப்படுகின்றது; ஏனெனின், ஆபாசனுக்கு உபாதியாகிய வாச்சியார்த்தத்தை விட்டபடியால்.

ஆபாசனும் ஜடாஜட விலட்சணமா யிருப்பதால் அநிர்வசநீயமாயிருக்கின்றான். ஆகையால்,

"ஸாபாஸாஞாந வாசீ யதி பவதி புந: பிர்ம்மசப்த:
ததா அஹம்சப்தோ அஹங்கார வாசீ பவதிது ஜஹதி
லக்ஷணா தத்பதேஷு."

(இ-ள்.) பிரஹ்மசப்தமானது ஆபாசத்துடன் கூடின அஞ்ஞானத்தைச் சக்தியால் பிரதிபாதித்ததே யாயின் அப்போது அஹம் சப்தம் அகங்காரத்தைச் சக்தியால் பிரதி பாதிக்கும். இந்தப் பக்ஷத்தில் (தத்துவமாதி பதங்கட்கு) ஜஹத் லக்ஷணையாம்.

என்று சங்க்ஷேப சாரீரகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

(ஆ) 1. ஆபாசனுக்கே பந்தம்; கேவல சைதன்னியமோ முக்தம். ஆகையால் பந்த மோக்ஷங்கள் ஓர் அதிகரணத்திலின்றாம்.

2. (மேலும்) தன்னுடைய நாசத்தின் பொருட்டும் பிரவிர்த்தி பொருந்தாது.

---

## 6. வார்த்திககாரர் மதம்.

### ஆபாசவாதம்.

(ச) கேவல சைதன்னியத்திற்கே ஆபாசத்துவாரா (வாயிலாக) பந்தம் ஒப்புக்கொண்டிருப்பதால் (மேற்சொன்ன தோஷம் பொருந்தாது).

"அயமேவஹிநோ நர்த்தோயத் ஸம்ஸாரியாத்ம தரிசநம்."

(இ-ள்.) ஆத்மாவைச் சம்சாரியாய்ப் பார்ப்பது எதுவோ அதுவே அநர்த்தம்.

என்று வார்த்திககாரரால் சொல்லப்படுகின்றது.

(1) சுத்த சைதன்னியத்திற்கு ஆபாசமே பந்தம். அதன் நிவிர்த்தியே மோக்ஷம். ஆகலின் ஒரு தோஷமுமின்றாம்.

(2) அல்லது, ஆபாசனுடன் கூடிய சைதன்னியமும் தத்துவமசிபதவாச்சியம்; அதனால் வாச்சியத்தின் ஏக



தேசத்தைப் பரித்தியாகம் பண்ணுவதால் ஜஹதஜஹத் (விட்டுவிடாத) லக்ஷணையாம். ஆகையால் ஒரு தோஷமுமின்றாம்.

இந்தப் பக்ஷந்தான் ஆபாசவாதமென்று சொல்லப்படுகின்றது.

---

## 7. விவரணகாரர் மதம்.

### பிரதிபிம்ப வாதம்.

i. அஞ்ஞான உபஹிதமான பிம்பசைதன்னியம் ஈசுவரன்.

ii. அந்தக்கரணம் அதன் சம்ஸ்காரம், இவைகளோடு கூடிய அஞ்ஞானத்தில் பிரதிபிம்பித்த சைதன்னியம் ஜீவனென்று விவரணகாரர் சொல்லுகின்றனர்.

---

## 8. சம்க்ஷேபசாரீரகாரர் மதம்.

i. அஞ்ஞானத்தில் பிரதிபிம்பித்த சைதன்னியம் ஈசுவரன்.

ii. புத்தியில் பிரதிபிம்பித்த சைதன்னியம் ஜீவன்.

iii. அஞ்ஞான உபஹிதமான பிம்ப சைதன்னியம் சுத்தமென்று சம்க்ஷேபசாரீரகாரர் சொல்லுகின்றனர்.

மேற்சொல்லிய இரண்டு பக்ஷத்திலும் புத்திபேதத்தால் ஜீவபேதம் பெறப்படுகின்றது.

பிரதிபிம்பம் பாரமார்த்திகமாகையால் தத்துவமாதி பதங்களின் ஐக்ய ஐக்ய லக்ஷணையாம்.

இது பிரதிபிம்பவாத மென்று சொல்லப்படும்.

---

## 9. வாசஸ்பதிமிசிரர் மதம்.

### அவச்சேதக வாதம்.

i அஞ்ஞானத்திற்கு விஷயமான சைதன்னியம் ஈசுவரன்.

ii அஞ்ஞானத்திற்கு ஆசிரயமான சைதன்னியம் ஜீவனென்று வாசஸ்பதி மிசிரர் சொல்லுகின்றனர்.

இந்தப்பக்ஷத்திலும் அஞ்ஞானம் பலவாதலால் ஜீவனும் நானாவாம்.

ஜீவன்தோறும் பிரபஞ்சம் வெவ்வேறே.

ஜீவனே தனதஞ்ஞான உபஹிதனாயிருப்பதால் ஜகத்திற்கு உபாதான காரணமாயிருக்கின்றான்.

(ஜீவன்தோறும் பிரபஞ்சம் வெவ்வேறென்று சொல்லும் பக்ஷத்தில் நீ பார்த்த கடத்தை நான் பார்த்தேனென்னும்) *31. பிரத்திய பிஞ்ஞை எங்ஙனங் கூடுமெனின்; சாதிருசியத்தினால் பொருந்தும். ஈசுவரன் சப்பிரபஞ்சமான (பிரபஞ்சத்துடன் கூடியவனான) ஜீவனுடைய அவித்தைக்கு அதிஷ்டான (விஷய)மா யிருப்பதால் காரணமென்று *32. உபசாரமாகச் சொல்லப்படுகின்றான்.



இஃது அவச்சேதகவாத மென்று சொல்லப்படும்.

---

## 10. திருஷ்டி சிருஷ்டி வாதம்.

i அஞ்ஞான உபஹித பிம்பசைதன்னியம் ஈசுவரன்.

ii அஞ்ஞான பிரதிபிம்ப சைதன்னியம் ஜீவன்.

---

*31. பிரத்தியக்ஷஞானம் அபிஞ்ஞாரூபப்பிரத்தியக்ஷம், பிரத்திய பிஞ்ஞாரூபப் பிரத்தியக்ஷமென் றிருவகைத்தாம்.

(1) கேவலம் இந்திரிய சம்பந்தத்தா லுண்டாகும் ஞானம் அபிஞ்ஞாரூபப் பிரத்தியக்ஷமாம். அஃது 'இதுயானை' என்று நேத்திர சம்பந்தத்தாலுண்டாகும் ஞானம் போல்வதாம்.

(2) முந்திய ஞானத்தின் சம்ஸ்காரத்தினோடும் இந்திரிய சம்பந்தத்தினாலு முண்டாகும் ஞானம் பிரத்திய பிஞ்ஞாரூபப் பிரத்தியக்ஷமாம். அது முன் பார்த்தயானை யெதிரே காணப்படும்போது 'அந்த யானையிது' என்றுண்டாகும் ஞானம் போல்வதாம்.

*32. ஒன்றன் தன்மையை மற்றொன்றன் மேலேற்றிக் கூறுதல் உபசாரமெனப்படும்.

அல்லது (1) அஞ்ஞான *33. அநுபஹித சுத்த சைதன்னியம் ஈசுவரன் (2) அஞ்ஞான உபஹித சைதன்னியம் ஜீவன்.

இது ...வேதாந்த சித்தாந்தம் இதுவேயாம்; *34. ஏக ஜீவவாதமென்றும், *35. திருஷ்டி சிருஷ்டி வாதமென்றும் சொல்லப்படும்.

இந்தப் பக்ஷத்திலும் ஜீவனே தன்னுடைய அஞ்ஞான வசத்தால் ஜகத்திற்கு உபாதான காரணமாயும், நிமித்த காரணமாயுமிருக்கின்றான்.

கிரியையெல்லாம் பிராதிபாஸிகமாம். தேகபேதத்தால் ஜீவபேதப் பிராந்தி யுண்டாகின்றது.

ஒருவனே தன்னாற் கற்பிக்கப்பட்ட குரு, சாஸ்திரம், சிஷ்யன் இவைகளால் சித்தியடைந்த சிரவண மனனாதிகளின் திடத்தினால் ஆத்ம சாக்ஷாத்காரம் பெற்று முத்தியடைகின்றான்.

---

*33. அநுபஹிதம்—உபாதியுடன் கூடாமை.

*34. ஏக ஜீவவாதம் விருத்திப்பிரபாகரத்தில் விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது.

*35. திருஷ்டி யென்பது ஞானம்; அதன் சமகாலத்தில் சிருஷ்டியை (பிரபஞ்சத்தின் உற்பத்தியை)க் கூறல் திருஷ்டி சிருஷ்டி வாதமெனப்படும். இப்பக்ஷத்தில் சேதனம் பாரமார்த்திகசத்தும் ஏனையவை பிராதிபாஸிகசத்துமாம்.



சுகவாமதேவாதிகளுக்கு மோக்ஷம் சொன்னது *36. அர்த்தவாதமாகும்.

மஹா வாக்கியத்திலும் தத்பதமானது அனந்த பதம் சத்தியபத முதலியவைபோல் அஞ்ஞானுபஹித சைதன்னியத்தை லக்ஷணையாய்ப் போதிக்கின்றது. இப்பக்ஷத்தில் இவைபோன்ற அவாந்தர பேதங்களைத் தானாகவே ஊஹித்துக் கொள்ளல் வேண்டும்.

(ஆ). வஸ்துவினிடத்தில் விகல்பம் சம்பவிக்காமையால் ஒன்றற்கொன்று விருத்தமான மதங்கட்கு எவ்விதம் பிராமாண்யம் கூடும்? ஆதலின் எம்மதத்தைத் தள்ளுகின்றது? எம்மதத்தைத் தழுவுகின்றது?

(ச) (நீ சொன்னது பொருந்தாது) கட்டையைப் பார்த்து, புருஷனோ, இராக்ஷசனோ என்னும் விகல்பம் (வேறுபாடு) வஸ்துவினிடத்திலும் கண்டிருப்பதால், வஸ்துவினிடத்தில் விகல்பம்சம்பவிக்கமாட்டாதென்று யாவர்கூறினர்?

(ஆ) கட்டையைப்பார்த்துண்டாய புருஷனோ இராக்ஷசனோவென்னும் விகல்பமானது புருஷபுத்தியினாலுண்டாதலால் யதார்த்தமன்று.

ஜீவன், ஈசுவரன் முதலிய விபாகாதிவியவஸ்தை (பிரிவின்வேறுபாடு) சாஸ்திரத்திற் சொல்லப்பட்டிருப்பதால் இவ்விஷயத்தில் எங்ஙனம் விகல்பங்கூடும்?

---

*36. ஸ்துதியை அல்லது நிந்தையை யறிவிக்கும் வாக்கியம் அர்த்தவாத மெனப்படும்.

(ச) நீ அதிகமேதகவி! நிச்சயமே! அத்விதீயமான ஆத்மதத்வம் பிரதானமாய்; பிரயோசனத்தோடு கூடியிருப்பதால்.

இதுவும் பிரமாணங்களால் அறியப்படாமலிருப்பதாலும் அது சாஸ்திரத்திற்கு விஷயமாயிருக்கின்றது. ஜீவேசுவர விபாகாதி கற்பனையோ புருஷபுத்தியினுலுண்டானாலும் சாஸ்திரத்தால் அநுவதிக்கப்படுகின்றது; தத்துவ ஞானத்திற்கு உபயோகமாயிருப்பதால்.

*37. பலவத்சந்நிதியில் அபலமாயிருப்ப தெதுவோ அஃது அதற்கு (பலவத்திற்கு) அங்கமாமென்னும் நியாயத்தால் (தத்துவ ஞானத்திற்கு உபயோகமாயிருக்கின்றது).

பிரம (பிராந்தி) சித்தமான வஸ்துவிற்கு (ஜீவேசுர விபாககற்பனைக்கு) சுருதியினால் அநுவாதம் சம்பவிக்கும். இதனாலே அத்வைத ஞானத்தால் அத்துவித ஞானத்திற்குப் பாதமுண்டாகின்ற தென்னும் கஷ்டி தள்

*37. பலவத்சந்நிதியில்—பிரயோஜனத்துடன் கூடியதன் சமீபத்தில், அபலமாயிருப்ப தெதுவோ—பிரயோஜனமின்றியிருக்கின்ற தெதுவோ.

பலவத்—ஆத்மதத்வம்.

அபலம்—ஜீவேசுவரகற்பனை.

ஆத்மதத்வத்தையறிய ஜீவேசுவரகற்பனை அங்க (சாதன)மாயிருக்கின்ற தென்பதாம்.



ளப்பட்டது. கடாதிகளின் த்வைதஞானத்திற்கும் அஞ்ஞாதமா (அறியப்படாதகா)ன அத்வைத *38. ஸன்மாத்திராம் சத்தில் *39. பிராமாண்யம் ஒப்புக்கொண்டிருப்பதாலும், ஞானஞ்ஞானங்கள் சமானமான ஆசிரயத்தையுடையனவாயும் சமானமான விஷயத்தையுடையனவாயுமிருக்கின்றனவென்பது நியமமாம். ஆதலால் ஜடத்திலோ பிரமாணப் பிரவிர்த்திக்குப் பிரயோசனமிராமையால் அதில் அஞ்ஞானமுண்டென் றொப்புக்கொள்ளுகிறதில்லை. கடாவச்சின்னசைதன்னிய அஞ்ஞானத்தினாலேயே கடாதிகளிலும் அஞ்ஞானமிருக்கின்ற தென்னும் வியவகாரம் பொருந்தும்.

சகலப்பிரமாணங்களும் அஞ்ஞாத ஞாபகத் தன்மை (தெரியாத அர்த்தத்தைத் தெரியப்படுத்துந்தன்மை)யால் பிரமாணங்களாயிருக்கின்றன. இல்லாவிடின் ஸ்மிருதிக்கும் பிராமாண்யம் நேரிடும்.

இவ்வாறே வேதாந்தங்களில் எவ்விடத்திலும் *40. இப்படிப்பட்ட விரோதம் வரும்போது மேற்சொன்னவாறு பரிகரித்தல் வேண்டும்.

*38. ஸன்மாத்திரம்-சத்தாமாத்திரமாயிருத்தல். சத்து-உண்மை.

*39. அறியப்படாத பதார்த்தத்தை யறியப்படுத்துந்தன்மை பிராமாண்ய மெனப்படும்.

*40. இப்படிப்பட்ட விரோதம்—ஜீவேசுராபேத விரோதம்.

"யயாயயா பவேத்பும்ஸோ வியுத்பத்தி:
ப்ரத்ய காத்மநி லாலஸைவ
ப்ரக்ரியா ஞேயாஸாத்வீஸா சாநவஸ்திதா"

(இ-ள்.) புருஷர்களுக்கு எந்த எந்தப் பிரக்கிரியையினால் பிரத்தியகான்மாவினிடத்தில் வியுத்பத்தி (போதம்) உண்டாகின்றதோ அந்தப் பிரக்கிரியையதனை நன்றென்றறிய வேண்டும்.

என்று வார்த்திககாரர் சொல்லியிருக்கின்றார்.

சுருதிதாற்பரிய விஷயமாயிருக்கின்ற அர்த்தத்திற்கு விரோதமான அர்த்தம் தள்ளத் தகுந்த தென்று நம்மைப் போன்ற ஆசாரியர்கள் அனேக விடங்களிற் சொல்லியிருக்கின்றனர். ஆதலால் இது தோஷமாகாது.

இப்படி ஜீவன் உபாதியினால் அபிபூதமாயி (மறைபட்டி)ருப்பதால் அவனுக்குச் சம்சாரம் காணப்படுகின்றது. பரமேசுவரனுக்கோ உபாதி அவர்வசமாயிருப்பதால் சர்வஞ்ஞத்துவ முதலிய தர்மங்கள் அவருக்குப்பொருந்தும். ஆதலால் மேற்சொன்ன ஜீவேசுவராதி வியவஸ்தை நன்றாகப்பொருந்துகின்றது.

(ஆ) அவித்தியாவசத்தினால் ஜீவேசுவர விபாக வியவஸ்தை பெறப்படினும், மான (பிரமாண), மேயாதி (பிரமேயமுதலிய) *41. பிரதிகர்ம வியவஸ்தை எங்ஙனம் பொருந்தும்?

*41. பிரதிகர்ம வியவஸ்தை—ஒருசமயத்திலேயே ஒருபுருஷனாலேயே ஒன்றே அறியப்படுகின்ற தென்னும் காலவிசேஷ



(ச) 1. அவித்தை திரிசியமாகையாலும், ஜடமாகையாலும், விநாசியா (நாசமுடையதா)யிருப்பதாலும், பரிச்சின்ன (கண்ட)மாயிருக்கின்றது;

அநிர்வசநீயமாயிருப்பதால் விசாரணைக்குட்படுவதன்று;

ஆவரண விட்சேபமென்னு மிரண்டு சக்திகளோடு கூடியது;

2. (பரிச்சின்னமாயிருந்தபோதிலும்) சர்வகத (வியாபக)மான சிதாத்மாவைச் சூரியமண்டலத்தை நேத்திரத்திற்குச் சமீபத்திலிருக்கின்ற அங்குலி (விரல்) மறைப்பதுபோலும் மறைத்துக் கொண்டிருக்கின்றது; சட்சுக்கே ஆவரணம் (மறைப்பு) சேரும்போது அங்குலிக்கும் பான (தோற்ற)ம் சேராது.

அதிஷ்டானத்தில் ஆவரணமன்றி விட்சேப (தோற்ற)ம் பொருந்தாது. ஆகையால் அந்த அவித்தையானது பூர்வ பூர்வ சம்ஸ்காரம், ஜீவர்களின் கர்மம் ஆகிய இவற்றோடு கூடிக்கொண்டு சகல ஜகதாகாரமாய்ப் பரிணமிக்கின்றது.

அந்த அவித்தையும் தன்னிடத்திலிருக்கிற சித்பிரதிபிம்பத்துவாரா சித்துடன் தாதாத்மியத்தை யடைந்திருக்-

முதலியவைகளுடன் கூடிய ஞானவிஷயத்தின் வியவஸ்தா நியமத்தைத் தெரிவிப்பதாம்.

கின்றது. ஆகலின் அதன் காரியமெல்லாம் ஆபாச (பிரதிபிம்ப)த் துவாரா சித்துடன் கூடிக்கொண்டே யிருக்கின்றன. ஜகத்திற் குபாதானமாயுள்ள அஜ்ஞானம் பிரமாணபூதத்தை (வேதப்பிரமாணத்தை) யபேக்ஷிக்காமலே தீபம்போல் தன்னோடு சம்பந்தமுள்ள யாவற்றையும் பிரகாசிக்கச்செய்வதால் ஸர்வஜ்ஞமா யிருக்கின்றது.

இதனால், மானமேயாதி வியவஸ்தை அஜ்ஞானத்தில் வேண்டப்படுவ தன்றாம். ஆனால், ஜீவன் புத்தியவச்சின்ன சைதன்யமாகையால் பரிச்சின்னனாயிருக்கிறான்; அங்ஙனமிருப்பதால் ஜீவனுக்கு மானமேயாதி வியவஸ்தை வேண்டப்படுவதாம்.

சித்தின் அபிவியக்திக் (பிரகாசத்திற்)கு யோக்கியமான எந்த அந்தக்கரணத்துடன் எப்போது எந்தச் சித்து சம்பந்தப்படுகின்றதோ அப்போது அந்தச் சித்தையே (ஞானத்தையே) அந்த அந்தக்கரணாவச்சின்ன ஜீவன் அநுபவிக்கிறான். ஆதலின் ஸாங்கரியம் (கலப்பு) நேரிடாது.

---

## 11. விர்த்தியின் நிர்க்கமனப்பிரகாரம் வருமாறு:—

சரீரமத்தியிலிருப்பதும், சரீர முழுமையும் வியாபித்துக் கொண்டும், சத்துவகுணப்பிரதானமாயும், அபஞ்சீகிருதமான பஞ்சபூதத்தினின்றும் உண்டானதாயும், அவித்தையின் விவர்த்தபரிணாமமாயுமிருக்கின்ற அந்தக்கரணம் தர்ப்பணாதி



போல் அதிசொச்சமா (பளபளப்பா) யிருக்கின்றது. அது நேத்திராதி துவாரா வெளிக்கிளம்பி யோக்கியமான கடாதிகளானவிஷயங்களை வியாபித்து அவற்றின் ஆகாரமாகிவிடுகின்றது; *12. உருக்கிவிட்ட தாம்பிராதிகள்போலும்.

அதற்கும் சூரியப் பிரகாசாதிபோல் சீக்கிரமாய்ச் சங்கோச விகாசங் (சுருங்கு விரிவு)கள் பொருந்தும்.

அந்த அந்தக்கரணம் அவயவத்தோடு கூடியிருப்பதால் பரிணாமத்தை யடைகின்றது. அங்ஙனம் பரிணாமத்தை யடைந்த அந்தக்கரணம் தேகத்திலுள்ளும், கடாதிகளிலும், அவற்றின் மத்தியிலும் நன்றாய் வியாபித்து தண்டம்போல் அவச்சின்னமாயிருக்கின்றது.

அவற்றுள்; தேகத்திலுள்ளிருக்கின்ற அகங்காரமென்னும் பேருள்ள அந்தக்கரணபாகமானது கர்த்தாவென்று சொல்லப்படுகின்றது.

ii. தேகத்திற்கும் விஷயத்திற்கும் தண்டம்போல் மத்தியிலிருக்கிற விர்த்திஞானமென்னும் பேருள்ள அந்தக்கரணபாகமானது கிரியை யென்று சொல்லப்படுகின்றது.

---

*12. “உருக்கிய தாமிர நாதா வுருவங்கொளாறுற் போல
விருத்திகள் கடபடாதி விடயமாய்ப் பரிணமிக்கும்”
என்று கைவல்லியநவநீதங் கூறுவது மிங்கறியத்தக்கதாம்.

iii. விஷயத்தை வியாபித்துக் கொண்டிருக்கிற அந்தக்கரணபாகமானது விஷயத்திற்கு *43. ஞானகர்மத்துவ சம்பாதகமாம். இஃது அபிவியக்தி யோக்கியத்துவமே (பிரகாசஞ்செய்வதற்குத் தகுதியாயிருப்பதே) என்று சொல்லப்படும்.

இவ்வாறு மூன்றுபாகமான அந்தக்கரணம் அதி சொச்சமாயிருப்பதால் அதில் சைதன்னியம் பிரகாசத்தை யடைகிறது. அபிவியக்தமா (பிரகாசத்தை யடைந்தா)ன அந்தச் சைதன்னியம் ஒன்றாயிருப்பினும் அபிவியஞ்சகமா (பிரகாசஞ் செய்வதா)ன அந்தக்கரணபாகம் வேறாயிருப்பதால் மூன்றுவித வியவகாரம் வழங்குகின்றன.

i. கர்த்ருபாகாவச்சின்ன சைதன்னியம் பிரமாதா.

ii. கிரியாபாகாவச்சின்ன சைதன்னியம் பிரமாணம்.

iii. அபிவியக்திக்கு யோக்கியமான விஷயபாகாவச்சின்ன சைதன்னியம் பிரமிதி.

பிரமேயமோ விஷயத்திலிருக்கிற பிரஹ்மசைதன்னியமே. அஃது அஞ்ஞாதமாயிருக்கின்றது. அதுவே ஞாதமாயிருந்தால் பலம்.

---

*43. ஞானகர்மத்துவ சம்பாதகம்—ஆவரண நிவிர்த்தியாதி ஞானக்கிரியாஜன்னிய பலத்தைச்சம்பாதித்துத் தருவதாம். ஞானக்கிரியை—விருத்திஞானம்.



## 12. ஜீவ மூன்று மதங்களின் பேதம்.

மேற்கூறிய பிரமாதாமுதலிய மூன்றனுள்

i. எந்தப் பக்ஷத்தில் அந்தக்கரணாவச்சின்னன் ஜீவனோ,

ii. எந்தப்பக்ஷத்தில் சர்வகதன், அசங்கன், அவித்தியாப் பிரதிபிம்பன் ஜீவனோ,

அவ்விரண்டு பக்ஷத்திலும் பிரமாத்ரு சைதன்னியத்திற்கும் விஷயசைதன்னியத்திற்கும் சம்பந்தத்தை யுண்டுபண்ணுவதற்கும் விஷயசைதன்னியத்திலிருக்கிற ஆவரணத்தை நிவிர்த்திக்கும் பொருட்டும் அந்தக்கரணவிர்த்தி யுண்டாகின்றது.

iii. எந்தப்பக்ஷத்தில் அவித்தியாவச்சின்னன், சர்வகதன், ஆவிர்தன் (மறைக்கப்பட்டவன்) ஜீவனோ அந்தப் பக்ஷத்தில் ஜீவனே ஜகத்திற்கு உபாதானகாரணமாயிருப்பதால் சர்வத்துடனும் சம்பந்தித்துக் கொண்டிருக்கிறான். ஆகையால், ஆவரண நிவிர்த்தியின் பொருட்டு விர்த்தியுண்டாகின்றது.

(ஆ) "சிதுபராகார்த்தாவிர்த்தி:—ஜீவசைதன்னியத்திற்கும் விஷயத்திற்கும் சம்பந்தத்தை யுண்டுபண்ணுவதற்காக விர்த்தியுண்டாகின்றது" என்று சொல்லும் பக்ஷத்தில், விர்த்தியன்றி அந்தக்கரணத்துடன் சம்பந்தித்

னாக் கொண்டிருக்கின்ற தர்மாதர்மங்கட்கும், பிரஹ்மத்திற்கும் விர்த்தியில்லாமலே எப்போதும் பானம் உண்டாக வேண்டும்.

(அ). அங்ஙனம் பானம் உண்டாகமாட்டாது; பிரமாத்ரு சைதன்னியம் தர்மாதிகளுடன் சம்பந்தப்படாததால் ஜீவனுக்கும் பிரஹ்மத்திற்கும் சம்பந்தாபாவமுண்டு; சொச்சமான பிரஹ்ம சைதன்னியம் ஆவிர்தமா (மறைபட்டு) யிருப்பதால். (ஆதலால் ஜீவனுக்கும் பிரஹ்மத்திற்கும் சம்பந்த முண்டாக்குவதற்காக விர்த்தி வேண்டப்படுகின்றது.)

ஜீவன் அநாவிர்தனென்று சொல்லிடத்தும் சுக்தி இரஜதாதிகள் அசொச்சமானவையாலும், தர்மாதர்மங்கள் அசொச்சமா யிருப்பதாலாவது ஆவிர்தமா யிருப்பதாலாவது (பிரமாத்ரு சைதன்னியத்திற்கு) விஷயத்துடன் சம்பந்தமின்று. (சம்பந்தப்படுத்துவதற்கு விர்த்தி வேண்டும்).

விஷயம் சொச்சமாயிருந்தாலும் ஆவிர்தமா யிருப்பதால் பிரமாணவிர்த்தியினால் சம்பந்த முண்டாகின்றது. சுக்தி இரஜதாதிகள் அநாவிர்தமாயிருந்தாலும் அசொச்சமாயிருப்பதால் அவற்றுடன் ஜீவசைதன்னியத்திற்குச் சம்பந்த முண்டாதற் பொருட்டு அவித்தியாவிர்த்தி வேண்டப்படும்.



அநாவிர்தமாயும், சொச்சமாயுமிருக்கிற சுகதுக்காதிகளில் சயமாகவே விர்த்தியுண்டாகிறபடியால் அந்தக்கரண சம்பந்தத்தினால்மாத்திரம் பானம் ஏற்படமாட்டாது.

(ஆ) பிரஹ்மம் தோஷமற்றதாயும் சொப்பிரகாசமாயு மிருப்பதால் சர்வஞ்ஞமாயிருக்கிறது; ஆனால் அதற்கு ஆவரணம் எங்ஙனங்கூடும்?

(அ) நீ சொன்னது வாஸ்தவம். பிரஹ்மம் தன்னுடன் சம்பந்தப்பட்ட சகல வஸ்துக்களையும் பிரகாசஞ்செய்வதால் சர்வஞ்ஞமாயிருப்பினும், அந்தக்கரண அவச்சின்ன ஜீவனுடைய அஞ்ஞானத்திற்கு விஷயமாயிருப்பதால் ஆவிர்தமென்று சொல்லப்படுகின்றது.

ஆகையால் பிரஹ்மம் ஜகத்திற்கு உபாதானமென்று சொன்னவிடத்து விர்த்தியானது ஜீவசைதன்னியத்திற்கு விஷயத்துடன் சம்பந்தத்தை யுண்டுபண்ணுவதற்கும் ஆவரண நிவிர்த்தியின் பொருட்டும் உண்டாகின்றது.

ஜீவன் ஜகத்திற்கு உபாதானமென்று சொல்லுமிடத்து ஆவரணநிவிர்த்தியின் பொருட்டே விர்த்தியுண்டாகின்றது.

(ஆ) ஒருகடாதிஞானத்தினாலேயே ஆவரணத்திற்கு நிவிர்த்தியுண்டாகும்போது உடனே மோக்ஷமுண்டாக வேண்டும்; அஞ்ஞானம் ஒன்றாயிருப்பதால்.

அஞ்ஞானம் அநேகமென்று சொல்லும் பக்ஷத்திலும் ஒரு ஜீவனுக்கு ஒரு அஞ்ஞானம் உபாதியாதலின் (அந்த அஞ்ஞானம் கடாதி ஞானத்தால் நிவிர்த்தியாதலால் உடனே மோக்ஷமுண்டாகவேண்டும்).

(ஈ) *44. உத்தேஜகத்தினால் மணிக்கு அபிபவம் (அடக்கம்) உண்டாவதுபோல் விருத்தியினால் ஆவரணத்திற்கு அபிபவமுண்டாகின்றதென்றங்கீகாரஞ்செய்யப்பட்டிருக்கின்றது; அபிபவம் உண்டாதலால் பிரமாணஜன்யமான அந்தக்கரண விருத்தியின் அபாவத்துடன் கூடின அஞ்ஞானம் வஸ்துவானது இருக்கும்போதும் விளங்கும்போதும் நாஸ்திபாதி என்னும் ஞானத்தை யுண்டுபண்ணுவதற்குச் சமர்த்தமான ஆவரணமென்று சொல்லப்படுகின்றது.

விருத்தியுண்டாகும்போது அஞ்ஞான மிருந்தாலும் ஜநகதாவச்சேதகம் பிரதிபந்தகாவச்சேதக மிராமையின், இராததற்குச் சமானமே; ஆகையால் தன்னுடைய காரி-

*44. பிரதிபந்த மிருக்கக் காரியத்திற்குச் சாதகமா யிருப்பது உத்தேஜகமெனப்படும். காரியத்திற்கு விரோதமா யிருப்பது பிரதிபந்த மெனப்படும்.

நெருப்பின் சூட்டைத் தடுப்பது மணியாம். இது பிரதிபந்தமாம். அதற்கு மாற்று (உத்தேஜகம்) மந்திரமாம்.

மணியுள்ள காலத்து நெருப்புச் சுடுகின்றதின்று; ஆனால், மந்திரமுள்ளபோது மணியிருப்பினும் நெருப்புச் சுடுதல் பிரசித்தமாம்.



யத்தை (ஆவரண முதலியவற்றை) யுண்டுபண்ணுவதற்குச் சமர்த்தமின்றாம்; ஆகையால் (அஞ்ஞானம்) அபிபூதமெ (அடங்கியிருக்கிறதெ)ன்று சொல்லப்படுகின்றது.

(ஆ) இங்ஙனமாயின் பிரஹ்ம ஞானத்தாலும் அவித்தைக்கு நிவிர்த்தியுண்டாக மாட்டாது. ஆகையால் மோக்ஷம் வாராமற்போய்விடும்.

(ஈ) தத்துவமஸியாதி வாக்யார்த்த ஞானத்தால் அவித்தை நிவிர்த்தியாமென்று ஒப்புக்கொண்டிருத்தலாலே, அவித்தைக்கு எது (கிளிஞ்சல்) விஷயமோ அதனை (கிளிஞ்சலை)யே விஷயமாக வுடைய பிரமா ஞானத்தினாலேயே அவித்தை நிவிர்த்தியாமென் றொப்புக்கொண்டிருப்பதாலே மஹாவாக்யார்த்தஞானமே அபாதிதத்தை விஷயமாக வுடைத்தா யிருப்பதால் பிரமையா யிருக்கின்றது.

பிரத்தியக்ஷாதிகளோ பாதிதத்தை விஷயமாக வுடைத்தாயிருப்பதால் பிரமமா (பிராந்தியா) யிருந்தாலும், வியவகாரசமர்த்தமாயிருப்பதால் (அவற்றில்) பிராமாண்யமிருப்பதாக அபிமானம் (செய்யப்படுகின்றது). ஆதலின் ஞானத்தால் அஞ்ஞானநிவிர்த்தி வேறிடத்திற் காணப்படவில்லையென்பது தோஷமாகாது;

(ஞானத்தால் அஞ்ஞானநிவிர்த்தியாதல்) அனுபவசித்தமாயிருப்பதாலும், சுருதியில் ஞானத்தினால் அஞ்ஞான நிவிர்த்தியுண்டென்று பிரதிபாதிப்பது வேறுவகையால்

பொருந்தாமை யென்னும் அந்நியதாநுபபத்தி எல்லாப் பிரமாணங்களினும் பிரபலமானதாயாகு மென்க.

அந்நிய தாநுபபத்திச்சேத் அஸ்திவஸ்துப்ரமாதிகா
பிருஷ்டி அதிர்ஷ்டி வைமத்தியம்
ஸைவஸர்வ பலாதிகா.

(இ-ள்.) ஞானத்தால் காமருபப்பிரபஞ்ச நிவிர்த்தியைக் கூறும் சுருதிக்கு அஞ்ஞான நிவிர்த்தியைத்தவிர வேறுவித பொருந்தமின்மையானது வஸ்து வாதகமாயிருக்கின்றது; வேதிடத்தில் காணப்படவில்லை யென்கிற விவாதத்தை நிவிர்த்திபண்ணுகின்றது. அந்த அநுபபத்தியே எல்லாப் பிரமாணங்களினும் பலமுள்ளதாயிருக்கின்றது.

அல்லது மூலாஞ்ஞானத்தின் அவஸ்தைகள் கடாதிவிஷய மான ஆவரணமாம்.

அஞ்ஞானம் ஞானத்தின் பிராகபாவஸ்தானத்திலிருப்பதால் எவ்வளவு ஞானமுண்டோ? அவ்வளவு அஞ்ஞான முண்டென் றொப்புக்கொண் டிருக்கின்றோம். ஆகையால் ஒரு ஞானத்தினால் ஒரு அஞ்ஞானமே நிவிர்த்தியாவதால் கடாதிஞானத்தினால் கடாதிவிஷய ஆவரணம் நாசத்தை யடைவதில் யாதொரு பொருந்தாமையுமின்று.

(ஆ) *45. அநுமானாதிகளினால் ஆவரணம் நிவிர்த்தி யடைகின்றதா? இல்லையா?

i. முதலாவது, பக்ஷத்தில் பிரத்தியக்ஷப் பிரமத்திற் (பிராந்திக்) கும் (அதற்குவிஷயமான) சங்குமஞ்சளா யிருக்

*45. அநுமானமென்றது—அநுமிதி ஞானத்தை.



குந்தன்மைக்கும் *46. திக்குமோகாதிகட்கும், சங்குவெள்ளை யாயிருக்கின்றது முதலிய அநுமானாதிகளால் நிவிர்த்தியுண்டாக வேண்டும். பிரமம் (பிராந்தி) அதிஷ்டான அஞ்ஞானத்தை உபாதானமாக வுடைத்தா யிருப்பதால் அந்த அஞ்ஞானம் நிவிர்த்தியாகும்போது பிரமம் நிவிர்த்தியாகின்றது.

*47. யௌக்திக ஞானத்தினாலும் *48. பிரஹ்மத்தின் அவித்தை நிவிர்த்தியாகின்றமையின் பிரஹ்மசாக்ஷாத் காரத்தின் பொருட்டுச் சிரவணமனனங்களை அபேக்ஷிக்க வேண்டாம்.

ii. (அநுமானாதிகளினால் ஆவரணம் நிவிர்த்தியடைகின்றதில்லை என்னும்) இரண்டாவது பக்ஷத்திலோ வஹ்னி இருக்கின்றதென்னும் வியவகார முண்டாகாமற்போம்; பிரதிபந்தக (ஆவரண) மிருப்பதால்.

(இ) ஆவரணம் இரண்டு வகையாம்:—

1. ஒன்று *49. அஸத்துவாபாதகம்; அஃது அந்தக்கரண அவச்சின்ன சாக்ஷியினிடத்திருக்கின்றது.

*46. திக்குமோகம்—இன்ன திக்கென்றறியாது மயங்குதல்.

*47. யௌக்திகஞானம்—யுக்தியினாலுண்டாய ஞானம், அது பரோக்ஷ ஞானமாம்.

*48. பிரஹ்மத்தின் அவித்தை—பிரஹ்மத்தைக் கற்பிதமாக மறைத்துள்ள அஞ்ஞானம்.

*49. அஸத்துவாபாதகஆவரணம்-இல்லையென்னும் அஸத்துத்

2. மற்றொன்று *50. அபாநுபாதகம்; அது விஷயாவச்சின்ன பிரஹ்ம சைதன்னியத்தினிடத்திருக்கின்றது.

கடத்தை நானறியவில்லை யென்னும் அநுபவம் அபாநுபாதக ஆவரணம் அஸத்துவாபாதக ஆவரணம் என்னும் இவ்விரண்டின் ஆசிரயத்தை அறிவிக்கின்றது.

1. அவற்றுள் அஸத்துவாபாதக ஆவரணம் *51. பரோக்ஷ அபரோக்ஷ சாதாரணமான பிரமாணஞான *52. மாத்திரத்தினால் நிவிர்த்தியடைகின்றது.

அநுமிக்கப்பட்ட வன்னியாதியினிடத்திலும் நாஸ்தி யென்னும் பிரதீதி (தோற்றம்) யுண்டாகின்றதில்லை.

2. அபாநுபாதக ஆவரணமோ சாக்ஷாத்கார (பிரத்தியக்ஷ)த்தினாலேயே நிவிர்த்தியடைகின்றது;

---

தன்மையைச் சம்பாதிக்கும் ஆவரணம். இது நாஸ்தி யெனப்படும்.

*50. அபாநுபாதக ஆவரணம்—அஃது இருந்தால் காணப்படாது என்னும் தோற்றமின்மையைச் சம்பாதிக்கும் ஆவரணம். இது நபாதியெனப்படும்.

*51. கடமிருக்கின்றது என்னும் ஞானம்போல்வது பரோட்ச ஞானமாம். இதுகடம் என்னும் ஞானம்போல்வது அபரோட்ச ஞானமாம்.

*52. மாத்திரமென்பது இங்கு எல்லாம் என்னும் பொருளதாய் நின்றது.



(என்னனின்) ஞானம் எதனை ஆசிரயித்துக்கொண்டு எதன் ஆகாரமாயிருக்கின்றதோ அதனையே ஆசிரயித்துக் கொண்டும் அதன் ஆகாரமாயிருக்கிற அஞ்ஞானத்தை நாசம் பண்ணுகின்றதென்னும் நியமமிருப்பதால்.

பரோக்ஷ ஞானத்திற்கு இந்திரிய விஷய ஸன்னிகர்ஷ (சம்பந்த) மில்லாததால் அந்த ஞானம் அந்தக்கரணத்தை மாத்திரம் ஆசிரயித்துக் கொண்டிருக்கின்றது.

அபரோக்ஷ ஞானமோ விஷய வியாபாரத்தாலுண்டாவதாலும் விஷயம் அந்தக்கரணம் இவ்விரண்டாலுண்டாவதாலும் *53. உபயநிஷ்டமாயிருக்கின்றது.

"பரோக்ஷ ஞாநதோ நச்யேத் அஸத்வா
விருத்திஹேதுதா அபரோக்ஷதியா நச்யேத்
அபாநா விருத்திஹேதுதா"

(இ-ள்.) பரோக்ஷ ஞானத்தினால் அஸத்துவாபாதக ஆவரணம் நாசத்தை யடைகின்றது. அபரோக்ஷ ஞானத்தினால் அபாநுபாதக ஆவரணம் நாசத்தையடைகின்றது என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இங்ஙனஞ் சொல்லப்பட்டிருப்பதால் அநுமானாதிகளில் அசத்துவாவரணம் நாசத்தையடைகின்றது ஆகையால் அவற்றில் ஆவரணம் நிவிர்த்தியாகின்றதென்னும் வியவகாரம் சித்திக்கின்றது.

---

*53. உபயநிஷ்டம்—இரண்டிலுமிருத்தல்; உபயம் விஷயமும் அந்தக்கரணமுமாம்.

அபௌருஷேயமான நிவிர்த்தியாலும் *51. சோபாதிகப்பிராந்

*51. சோபாதிக (உபாதியுடன்கூடிய) பிரத்தியட்சப்பிராந்தி பின்வரும் விஷயத்தால் நன்குவிளங்கும் "நிருபாதிக அஞ்ஞான ஜந்யம் சோபாதிக அஞ்ஞான ஜந்யம் என்னும் பேதத்தால் பிராந்தி இருவகைத்தாம். விலக்ஷண (தனது சமகாலமிருந்தும் காரியத்தை நீக்குமியல்பாகிய) நிமித்தகாரணம் அன்றி உபாதி யெனப்படுகின்றது; அஃதின்றிக் கேவல அஞ்ஞானத்தால் தோன்றும் பிராந்தி நிருபாதிகப் பிராந்தியாம். அஃது இரஜ்ஜுசர்ப்பம் சுக்திரஜத முதலியவற்றின் பிராந்தியாம். விலக்ஷணமான நிமித்த காரணமுடைய உபாதியோடு கூடிய அஞ்ஞானஜந்யப் பிராந்தி சோபாதிப்பிராந்தியாம். எங்ஙனம் பிரகாச அந்தகாரங்களின் சம்பந்தவடிவ உபாதியோடு கூடிய அஞ்ஞானத்தாற் றோன்றும் ஆகாயத்தினது நீலத்தன்மையின் பிராந்தியிருக்கின்றதோ, எங்ஙனம் பிம்பத்தின் சந்நிதிவடிவ உபாதியோடுகூடிய கண்ணாடியின் அஞ்ஞானத்தாற்றோன்றிய பிரதிபிம்பத்தின் பிராந்தி இருக்கின்றதோ, அங்ஙனமே ஜீவர்களது அதிர்ஷ்டவடிவ உபாதியோடுகூடிய மூலாஞ்ஞானத்தாற் றோன்றிய பிரபஞ்சத்தின் பிராந்தியிருக்கின்றது. அது முற்கூறிய உபாதியோடுகூடிய அஞ்ஞானத்தாற் றோன்றியதாயிருத்தலின், சோபாதிகப் பிராந்தியாம். நிருபாதிகப் பிராந்தியின் பாதிதானுவிருத்தி (பாதமாகிய பின்தோற்றுதல்) உண்டாகிறதில்லை, ஏனெனின், உபாதியின்மையால் அதன்நாசமும் பாதமாகிய ஞானமிருத்தலின். சோபாதிகப்பிராந்தியின் பாதிதானுவிருத்தியுண்டாகின்றது. ஏனெனின், "மித்தியாத்தன்மை நிச்சய வடிவபாதம் உண்டாகியும் உபாதியின் இருப்புவரையில் ஸ்வரூபத்தின் அப்பிரதீதி வடிவநாசமின்மையால்" என்று பாஷ்யக் குறிப்புரையி லெழுதப்பட்டிருக்கின்றது.



தியாசப் பிராந்தி நிவிர்த்தியாகின்றது. ஆகலான் நிர்த்தர்மமாக விருக்கும் ஆத்மாவுக்கும் அவித்தை அந்தக்கரணம் இவைகட்கும் தாதாத்மியாத்தியாசமிருப்பதால் அந்தக் கரணங்களின் தர்மங்களாகிய கர்த்திருத்துவ போக்திருத்துவாதிகளின் அத்தியாசம் பொருந்துகின்றது.

(ஆ) உன்மதத்தில் அநிர்வசநீயக்கியாதியை யங்கீகரித்திருப்பதால் கர்த்திருத்துவ முதலிய அந்தக்கரண தர்மங்கள் ஆத்மாவில் அத்தியாசம் பண்ணப்படுகின்றன. அத்தர்மங்கள் அநிர்வசநீயங்களாயுண்டாகின்றனவென்று சொல்லவேண்டும்; ஆதலின், வியாவகாரிகமென்றும் பிராதிபாசிகமென்றும் இருவிதமாகக் கர்த்திருத்துவாதிகளின் தோற்றமுண்டாக வேண்டும்.

(இ) 1. ஆத்மாவிற்கும் மனத்திற்கும் பேதஞான மிராமையால் அவற்றின் தர்மங்களின் பேதஞானமின்று. ஆதலின் மேற்சொன்ன தோஷம் வருதற்கிடமின்றாம்.

2. அல்லது சகல தர்மங்களுடன் கூடின அந்தக் கரணத்திற்கே ஆத்மாவில் அத்தியாசம் ஏற்படுவதால் இரண்டு விதமான தோற்றமின்று.

ஆகையினால் ஒரே ஆத்மாவிற்கு உபாதி பேதத்தினால் பிரமாதா முதலிய வியவஸ்தை பொருந்துகின்றமையின் சௌகதமதப் பிரவேசம் நேரிடாது; அல்லது விரோதமுமின்றாம்.

மற்றைய வியவஸ்தைகளெல்லாம் மேல் நிரூபிக்கப்படும். ஆகையால், ஞானரூபமான ஆத்மா சுஷுப்தியில் வியபிசாரத்தை யடையாமையாலும் தேகேந்திரியாதிகள் வியபிசாரத்தை யடைவதாலும் கிரியமாயிருப்பதாலும் தேகேந்திரிய முதலியவற்றில் அந்தந்த வாதிகளுக்கு ஆத்மாவென்னும் புத்தி தோன்றுவது பிராந்தியாம். ஆதலின் வேதாந்தமதமே *55. பிராமாணிகமென்று சித்திக்கின்றது.

(ஆ) ஆத்மா நிர்தர்மகமென்றும், பிரமாதா முதலிய வியவகாரங்கள் அத்தியாசமூலமென்றும் ஒப்புக்கொண்டால் "பிராமணன் யாகம்பண்ணவேண்டும்" (என்று கூறும்) இது முதலிய *56. சாஸ்திரங்கட்கு அப்பிராமாண்யம் நேரிடும்.

ஆத்மா அகர்த்தாவாகவும் அபோக்தாவாகவுமிருப்பதால் (கர்மத்தில்) எங்ஙனம் அதற்குப் பிரவிர்த்தியுண்டாகும்? வேதத்தை அப்பிராமாண்யமென்று சொல்லும் பக்ஷத்தில் பிரஹ்மசித்தி எங்ஙனமுண்டாகும்?

---

*55. பிராமாணிகம்—பிரமாணத்தால் சித்தித்தது.

*56. சுருதி ஸ்மிருதி புராணமிதிகாச முதலிய யாவும் சாஸ்திரமெனப்படும்.

சாஸயதி இதிசாஸ்திரம்—சாசனம் பண்ணுவதால் (கட்டளையிடுவதால்) சாஸ்திரமெனப்படும்.



1. அந்தப் பிரஹ்மம் சாஸ்திரத்தால் மாத்திரம் அறியக்கூடியதாகையால்,

"சாஸ்திரயோனித்வாத்—சாஸ்திரத்தால் அறியக்கூடியதாகையால்" என்று பிரஹ்மசூத்திரத்தில் கூறியிருப்பதால்.

ஆதலின் வேதத்திற்குப் பிராமாணியம் சித்திக்கும் பொருட்டுப் பிரமாதா முதலிய வியவகாரங்கள் சத்தியமென்று ஒப்புக்கொள்ளல் வேண்டும்.

(ச) தத்துவஞான முண்டாவதற்குமுன் வேதத்திற்கு அப்பிராமாணியம் நேரிடுகின்றதென்று சொல்லுகின்றனையா? அல்லது தத்துவஞான முண்டானதற்குப் பின் உண்டாகின்றதென்று சொல்லுகின்றனையா?

அவற்றுள் 1. முதற்பக்ஷத்தில் சகலப் பிரமாணங்களும் அவித்தியாவா (ஜீவ) னையே ஆசிரயித்துக் கொண்டிருப்பதால் அவித்தியாகாலத்தில் அவற்றிற்குப் பாதம் நேரிடாமையின் பிராமாணியத்திற்கு விக்கினம் (தடை) உண்டாதலில்லை.

---

அ—கை.

2. இரண்டாவது பக்ஷத்தில் வேதம் அப்பிராமாணமாவது இஷ்டந்தானென்று கூறுகின்றார்.

நவர்ணா: நவர்ணாச்ரமாசார தர்மாநமே
தாரணாத்தியாந யோகாதயோபி
அநாத்மாஸ்ரயாஹம் மமாத்தியாஸ ஹாநாத்
ததேகோ வசிஷ்ட: சிவ: கேவலோஹம். (2)

(இ-ள்.) மே-எனக்கு,
வர்ணா: ந-பிராமணத்துவ முதலிய ஜாதிகளில்லை,
வர்ணாச்ரமாசாரதர்மா: ந-ஜாதி, பிரமசரியமுதலிய ஆச்ரமங்கள், ஸ்நானம் சௌச முதலிய ஆசாரங்கள் ஆகிய இவைகளில்லை,
அல்லது பிராமணத்துவமுதலிய ஜாதிதர்மங்களும் பிரமசரிய முதலிய ஆச்ரமதர்மங்களும் இல்லை.
தாரணாத்தியாநயோகாதய: அபி—பாஹ்ய விஷயத்தைவிட்டு ப்ரஹ்மத்தினிடத்து மனத்தை நிறுத்துவதாகிய தாரணையும் பரமாத்ம சிந்தனையாகிய தியானமும் சித்தநிரோதமாகிய யோகமும் ஆதியென்பதால் பெறப்படும் சிரவணாதிகளும்,
ந-இல்லை.

ஞானோதயமாயபிறகு இங்ஙனம் எல்லாமில்லையென்று கூறிய தன் காரணங்கூறப்படுகின்றது.

அநாத்மாஸ்ரயாஹம் மமாத்தியாஸஹாநாத்-அநாத்மாவை யாச்ரயித்துக்கொண்டிருக்கின்ற யானென்றும் எனதென்றும் அத்தியாசம் நிவிர்த்தியாவதால்,

அநாத்மாவாவது ஆத்மவிரோதியான அவித்தை. அதனையாச்ரயித்துக் கொண்டிருக்கிற [அஃதாவது அதனாலுண்டான] யான் எனதென்னும் அத்தியாசமும்



அதன் காரணமும் தத்துவஞானத்தால் நிவிர்த்தியாவதால் அவ்வத்தியாசத்தாலுண்டான வர்ணாச்ரமாதிகள் எனக்கில்லையென்பது அதன் பொருள்.

தத்-ஆகையால்,
ஏக:-ஒருவனும்,
அவசிஷ்ட:-பாதமடையாதவனும்,
சிவ:-பரமாநந்தஸ்வரூபனும்,
கேவல:-தர்ம மற்றவனும்,
அஹம்—நான் (இருக்கிறேன்).

———

அ—வது.

வர்ணாச்ரமாதி வியவகாரம் மித்தியாஞானமாத்திர ஜன்னியமாயிருப்பதால் அது மித்தையாமென்பதைத் திடப்படுத்துவதற்காக மித்தியாஞானமின்றிய சுழுப்தி காலத்தில் வியவகாரமின்றென்பதைக் கூறுகின்றார்.

நமாதா பிதாவா நதேவா நலோகா நவேதா
நயஜ்ஞா நதீர்த்தம் ப்ருவந்தி
ஸுஷுப்தௌ நிரஸ்தாதி சூந்யாத்ம கத்வாத்
ததேகோவசிஷ்ட: சிவ: கேவலோஹம். (3)

(இ-ள்.) மாதா—மாதாவும் இல்லை,
பிதாவா-பிதாவும் இல்லை,
தேவா:-ஆராதிக்கத்தக்க இந்திராதி தேவதைகளுமில்லை,

லோகா:-அவ்வாராதனைத்திற்குப் பலனான சொர்க்காதி லோகங்களும் இல்லை,

வேதா:-அலௌகிகமான ஹிதாஹித சாதனங்களைப் பிரதிபாதிப்பதாயும் பிரஹ்மத்தைப் பிரதிபாதிப்பதாயுமுள்ள பிரமாணவாக்கியங்களாய வேதமுமில்லை,

யஞ்ஞா:-சொர்க்காதி சாதனங்களான ஜோதிஷ்டோம முதலிய கர்ம யாகங்களுமில்லை,

தீர்த்தம்-யக்ஞியஞ்செய்வதற்கு யோக்கியமான குருக்ஷேத்திர முதலிய தேசங்களும்,

நபவந்தி - இல்லையென்று (பெரியோர்கள்) சொல்லுகின்றார்கள்,

*57. உபலக்ஷணத்தால் இங்ஙனமே பாவகர்மங்களும் அவற்றின்பயனு மில்லையென்று கொள்க.

மேற்கூறிய மாதா முதலியயாவும் தேகாபிமான ஜன்னியமா யிருத்தலின் அத்தேகாபிமான (தேகாத்மபுத்தி) மிராதபோது ஆன்மாவிற்குச் சுபாவத்தில் சம்பந்த மின்மையின் அதற்கு அவையில்லையென்பது பொருள்.

அத்ரபிதா அபிதாபவதி மாதா அமாதா
தேவா அதேவா வேதா அவேதா யஞ்ஞா அயஞ்ஞா
ஸ்தேனோ அஸ்தேனோபவதி
புருணஹா அப்புருணஹா சண்டாளோ. அசண்டாள:

*57. உபலக்ஷணமாவது ஒருசொல் ஒழிந்தநின்ற தன்னினங்களையுங் கொள்ளுதற்கு உரித்தாயிருப்பதாம்.



பௌல்கஸோ அபௌல்கஸ:
ஸ்ரமணோ அஸ்ஸ்ரமண: தாபஸோ அதாபஸ:
அநந்வாகதம் புண்யேந அநந்வாகதம் பாபேந
தீர்ணோ ஹிததாஸர்வாந் சோகாந்ஹ்ருதயஸ்ய பவதி.

(இ-ள்.) சுழுப்திகாலத்தில் பிதா பிதாவாகாது போகின்றான்; மாதா மாதாவாகாது போகின்றாள்; தேவன் தேவனாகாதுபோகின்றான்; வேதம் வேதமாகாது போகின்றது; யாகம் யாகமாகாது போகின்றது; திருடன் திருடனாகாது போகின்றான்; *58. கருச்சிதைப்போன் கருச்சிதைப்போனாகாது போகின்றான்; *59. சண்டாளன் சண்டாளனாகாது போகின்றான்; *60. பௌல்கசன் பௌல்கசனாகாது போகின்றான்; சந்நியாசி சந்நியாசியாகாது போகின்றான்; தபசி தபசியாகாது போகின்றான்; அச்சுழுப்தியில் புண்ணியசம்பந்த மற்றவனாயும், பாவசம்பந்தமற்றவனாயு மாய்விடுகின்றான்; மனதின்சம்பந்தமான சகலசோகங்களையுங் கடந்துவிடுகின்றான்.

என்றதற்றொடக்கத்துச் சுருதிகள் தேகாதிகளில் அபிமானமிராதகாலத்தில் சகல அனர்த்தங்களுமில்லையென்று அநுவதிக்கின்றன.

*58. கரு-கருப்பம்.

*59. சண்டாளன்-பிராமண ஸ்திரீக்குச் சூத்திரனின் சம்பந்தத்தாற்பிறந்தவன்.

*60. பௌல்கசன் —க்ஷத்திரிய ஸ்திரீக்குச் சூத்திரனின் சம்பந்தத்தாற்பிறந்தவன்.

சகலவியவகாரங்களுமில்லையென்று சொல்லுமிடத்து அவை சூன்யமாய்விடுமென்று மாட்சேபத்திற்குச் சமாதானங் கூறுகின்றார்.

ஸுஷுப்தௌ நிரஸ்தாதி சூன்யாத்மகத்வாத்-சுழுப்தியில் சூனியசொரூபத்தன்மை தள்ளப்பட்டிருப்பதால்,

சூன்யம் தள்ளப்பட்டிருத்தல் சுழுப்திக்குச் சாதனமாயிருத்தலால் திரும்பிவருவதற்கு அநுபபத்தி (பொருந்தாமை) யில்லாமையாலும்,

அவிநாசீவா அரே அயமாத்மா அநுச்சித்திதர்மா
மாத்ராஸம்ஸர்கஸ்த்வஸ்ய பவதி, யத்ரவைதந்
நபச்யதி பச்யன்வைதந்நபச்யதி நஹிதிர்ஷ்டுர் திருஷ்டே:
விபரி லோபோ வித்யதே அவிநாசித்வாத்
நதுதத் த்விதீயமஸ்திதத் தோந்யத்விபக்தம்
யத்பச்யேத்.

(இ-ள்.) அரே (அடா)! இந்த ஆத்மாநாசமற்றது; நாசமடையத்தக்க தர்மமற்றது; இந்தச் சுழுப்தியில் ஆத்மாவிற்கு ஸ்தூலகாரிய சம்பந்தமின்று; ஜாக்கிரகாலத்தில் எதைப்பார்த்துக் கொண்டு (எவன் சாட்சசஞானத்துடன்கூடிச் சித்ரூபமாய்விளங்கிக் கொண்டிருக்கிறானோ அவன்) சுழுப்திகாலத்தில் (அப்படிப்பட்ட) ஞானமற்றவனா யிருக்கிறான்; திருஷ்டாவான ஞானத்திற்கு லோப (நாச) மின்று; நாசத்தை யடையாமையின் சுழுப்திகாலத்தி லிரண்டாவதுவஸ்துவில்லை; (ஜாக்கிர காலத்தில்) அவனை விட எந்தவேறான வஸ்து பார்க்கப்படுகிறதோ அது சுழுப்தியி லில்லை.



என்றற் றொடக்கத்துச் சுருதிகளாலும், சுழுப்தி காலத்தில் சைதன்னிய மிருக்கின்றதென்பது பெறப்பட[illegible] சூனிய மின்றென்[illegible]பொருளாம். இதனால் சூன்யம் [illegible]ராகரிக்கப்பட்ட[illegible]ும் மீண்டும் *61. ஸ்தூணநிகந நியாயத்[illegible]ல் நிராகரி[illegible]கப்படுகின்றது.

அல்லது நிரஸ்தாதிசூன்யாத்மகத்வாத்—
நிரஸ்தமாயும்—தள்ளப்பட்டதாயும்,
அசநாவது பசிமுதலியவைகளற்றதாயும்,
அதிசூன்யம்—அதிசூன்யமா (சூன்ய மற்றதா)யும் அஃதாவது அத்விதீயமாயும்,
ஆத்மகத்வாத்—எந்தப் பிரஹ்மமிருக்கிறதோ அந்தப்பிரஹ்ம சொரூபமா யிருப்பதால் (என்பது மற்றோர்பொருள்.)

யதாவை புருஷ: ஸ்வபிதி நாமஸதாஸோம்ய
ததாஸம்பந்நோபவதி தத்யதாபிரியயாஸ்திரி
யாஸம்பரிஷ்வக்தோ நபாஹ்யம்கிஞ்சநவேதநாந்தரம்.

(இ-ள்.) எப்போது புருஷன் நித்திரை செய்கிறானோ அப்போது சத்ரூபமான ஆத்மாவுடன் ஏகமாய் விடுகிறான். அவன் பாஹ்யமாயுள்ள வொன்றையும் அந்தரமாயுள்ள வொன்றையும்

*61. ஸ்தூணை—கம்பம், நிகனம்—புதைத்தல், நியாயம்—திருஷ்டாந்தம். "கார்குழி பறித்து மெள்ள நாட்டிய நெடிய கம்பம், உரமுறக் குத்திக்குத்தி யுரப்பிக்கு முபாயம்போலப், பரமசிற் [illegible]ரூபத் தன்னிற் பற்றிய மனஞ்சலி குத்தி, நிகில செயற்ச சந்தேக[illegible] தெளி [illegible] மொழிகின் றேனே" என்று கைவல்லிய நவநீதங்கூறுவதறிக.

அறிகிறதில்லை. பிரியமுள்ள ஸ்திரீயுடன் சம்பந்தப் பட்டிருக்கிற புருஷன் சம்பந்தப் பட்டிருக்கிறபோது பாஹ்யாந்தர விஷயங்களி லொன்றையும் அறியான் [illegible].

என்னுஞ் சுருதி யிதற்கு ஆதாரமாம். ஜகத்காரண மாயும் சர்வஞ்ஞமாயும் சர்வசக்தியுள்ளதாயும் பூரணானந்த போதரூபமாயு மிருக்கிற பிரஹ்மத்துடன் சுழுப்திகாலத் தில் ஏகமாய் விட்டமையின் ஜீவன் அசம்சாரி யென்றே சித்தித்தது.

அத:- ஆகையால்,
ஏக:-அத்விதீயனும்,
அவசிஷ்ட:-சர்வத்திற்கும் பாத முண்டாங்காலத்தும் பாத
மற்றவனும்,
சிவ:-பூரணானந்தரூபனும்,
கேவல:-தர்மமற்றவனும்,
அஹம்-நான் (இவ்வாறிருக்கின்றேன்.)

இவ்வாறு மூன்று சுலோகங்களால் வாதியின் விவாதத்தை நிராகரிப்பதின் மூலமாகத் துவம்பதார்த்தம் நிச்சயிக்கப்பட்டது. இப்போது தத்பதார்த்தம் நிர்த்தாரணம் பண்ணத்தகுந்தது. நிராகரிக்கத் தக்க வாதியின் விவாதம் காட்டப்படுகின்றது.

துவம்பதார்த்த நிரூபணப் பிரகரணம்
முற்றிற்று.

---



# தத்பதார்த்த நிரூபணப் பிரகரணம்.

(ஆ) பிரஹ்மத்துடன் ஜீவனுக்கு ஐக்கியம் பொருந்தாது. அங்ஙனமன்றே, தத்சப்த வாச்சியமான (தத்பதப் பொருளான) ஜகத்காரணமான பிரஹ்மம்

"சதேவஸௌம்ய இதமக்ர ஆஸீத்—சிருஷ்டிக்கு முன்னர் இந்தவுலகம் சத்தாகவேயிருந்தது" என்றற்றொடக்கத்து வாக்கியங்களினால் பிரதிபாதிக்கப்பட்டிருக்கின்றது.

1. ஜகத்காரணமோ பிரதானம்; அஃதசேதனமென்று சாங்கியர்களும்,

2. பசுபதியே ஜகத்காரண மென்றும்; அவர் சேதனராயிருந்தாலும் ஜீவனைவிட வேறு; அவரே உபாசியரென்று பாசுபதர்களும்,

3. பகவானான வாசுதேவர் ஜகத்திற்குக் காரணம்; அவரே ஈசுவரன்; அவரிடத்தினின்றும் ஸங்கர்ஷணன் என்னும் பேருள்ள ஜீவனுண்டாகின்றான்; அந்த ஜீவனிடத்தினின்றும் பிரத்யும்னனென்னும் பேருள்ள மன முண்டாகின்றது; அதனிடத்தினின்றும் அனிருத்தனென்னும் பேருள்ள அகங்கார முண்டாகின்றது. ஜீவன் ஜன்னியனாகையால் ஜன்னியனான ஜீவனோடு வாசுதேவரான பிரஹ்மத்திற்கு மிகவும் பேதமிருக்கின்றதென்று பாஞ்சராத்திரிகளும்,

4. பரிணாமி, நித்தியன், சர்வஞ்ஞன், ஜீவனே தேகத்தோடும் பின்னனும் அபின்னனும் இருக்கின்றனென்று ஜைனர்களும், திகம்பரர்களும்,

5. சர்வஞ்ஞத்துவாதி குணங்களுடன் கூடினா பிரஹ்மமுமில்லை; (வேதம்பிரமாண மெனின்) ...திருக் கர்மத்தில் தாத்பரியமேயன்றிப் பிரஹ்மத்தில் தாத்பரியமில்லை; ஆனால் வாக்கைத் தேகமு (தார்க்கிகமத)...பொன்று கூடியதுபோல்ஜகத்காரணமான பரமாத்மாவையாவது அல்லது ஜீவனையாவது சர்வஞ்ஞத்துவ முதலிய குணங்களுடன் கூடினதாக உபாசிக்க வேண்டுமென்று மீமாம்சகர்களும்,

6. நித்தியஞான குணங்களுடன் கூடினவன் ஈசுரன்; அவன் சர்வஞ்ஞன்; பிருதிவி முதலிய காரியங்களினால் அநுமானிக்கத் தகுந்தவன்; அவன் ஜீவனைவிட் பின்னனே யென்று தார்க்கிகர்களும்,

7. சுகதன், சர்வஞ்ஞனென்று சௌகதர் (பௌத்தர்)களும்.

8. *62. கிலேச கர்ம *63. விபாக *64. ஆசயங்களால்

*62. கிலேசமென்றது பஞ்சக்கிலேசத்தை.
பஞ்சக்கிலேசம்-ஐவகைத்துக்கம். அவை: அவித்தை, அஸ்மிதை, இராகம், துவேஷம், அபினிவேசம் என்பனவாம்.—



ஸம்பந்தப்படாதவனாகவும், நித்தியஞான சொரூபனாகவும், பிரதான அம்சமாகிய சத்துவகுணத்தில் பிரதிபலித்திருப்பதால் சர்வஞ்ஞனாகவும் ஜீவனைவிட விலக்ஷணனாகவு மிருக்கின்றனென்று பாதஞ்சலி (யோகி)களும்,

9. அத்விதீயமான பரமானந்தமே பிரஹ்மம்; அந்தப் பிரஹ்மம் ஜீவனுடைய வாஸ்தவமான சொரூபம்; மாயையினால் சர்வஞ்ஞத்துவ முதலிய தர்மங்களுடன் கூடினது; ஜகத்திற்கு உபாதானமாயும் நிமித்தமாயு மிருக்கின்றதென்று வேதாந்திகளும் (கூறுவர்).

இவ்வாறு வாதிவிவாதங்களினால் சந்தேகத்தில்

அவித்தை-அஞ்ஞானம்; அஃதாவது விபரீதவுணர்ச்சி.
அஸ்மிதை-புத்தி ஆத்மாக்களின் ஒருமையுணர்ச்சி; இது சாமானிய அகங்கார மென்னும் சொல்லப்படும்.
இராகம்-அநுகூலபதார்த்த ஞானத்தாலுண்டாகும் புத்திவிர்த்தி.
துவேஷம்-பிரதிகூலபதார்த்தஞானத்தாலுண்டாகும் புத்திவிர்த்தி.
அபினிவேசம்-மரணபயத்தால் சரீரத்தைக் காப்பாற்றுதலி லுண்டாகும் ஆக்கிரகம் (பிடிவாதம்).
"காமம் வெகுளிமயக்க" மென்னுங்குறளின் விசேடவுரையில் பரிமேலழகர் "அநாதியாய அவிச்சையும், அதுபற்றி யானென மதிக்கும் அகங்காரமும், அதுபற்றி யெனக்கிது வேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட்கட்செல்லுமாசையும், அதுபற்றி அதன்மறுதலைக்கட் செல்லுங்கோபமுமென வடநூலார் குற்றமைந்தென்பர்" என்றுகூறுதலு மறிக.
*63. விபாகம்-கர்மபலம். *64. ஆசயம்-வாசனை.

சந்தேகம்வரும்போது வேதாந்தபக்ஷமே முடிவில் நிர்ண யம் பண்ணத் தகுந்ததென்று பகவான் சொல்லுகின் றனர்.

*65. நஸாங்க்யம்நசைவம் நதத்பாஞ்சராத்திரம்
நஜைநம் நமீமாம்ஸகாதேர்மதம் வா
விசிஷ்டாநுபூத்யா விசுத்தாத்மகத்வாத்
ததேகோவசிஷ்டா சிவ: கேவலோஹம். (4)

---

விசிஷ்டாநுபூத்யா-சவிகல்பக அநுபவத்தைக்காட்டிலும்வேறான தத்வமஸியாதி வாக்யஜன்னிய அகண்டாகார அநுபவத் தால்,
விசுத்தாத்மகத்வாத்-நிர்விகல்பக அத்விதீய சைதன்னியமாயிருப் பதால்,
•65. (இ-ள்) தத்-ஜகத்காரணமானது,
சாங்கியம்ந-சாங்கியமதத்திற் சொல்லிய பிரதானமுமன்று,
சைவம்ந-சைவமதத்திற்கூறிய பசுபதியுமன்று,
பாஞ்சராத்திரம்ந-பாஞ்சராத்திரத்திற் கூறியதுமன்று,
ஜைனம்ந-ஜைனமதத்திற் கூறியதுமன்று,
மீமாம்ஸகாதே: மதம்வாந-மீமாம்ஸகர்களுடைய மதத்திற்கூறியதுமன்று,
தத்-ஆகையால்,
அஹம்-நான்,
ஏக:-அத்விதீயனும்,
அவசிஷ்ட:-சர்வதுவைதத்திற்கும் பாதமிருப்பினு பாதமற்றவனும்,
கேவல:-நிர்தர்மகனும்,
சிவ:-பரமானந்த போதரூபனுமிருக்கின்றேன்.



ஆதியென்றதனால் கண்டுக்கூறாத மதங்களையுங் கிர கித்துக்கொள்ளல்வேண்டும். அசேதனமான பிரதானம் ஜகத்திற்கு உபாதானகாரணமாகமாட்டாது.

"தநைக்ஷதபஹுஸ்யாம் பிரஜாயேய—நான் வெகு பிரஜையாக வாகின்றேனென்று தத்காரணமானசத்து சங்கற்பித்தது" என்று சுக்ஷணமுடையதாகச் சிருஷ்டியைக் கூறுவதாலும்,

116957

"அநேநஜீவேநாத்மநாநுப்ரவிச்யநாமரூபேவியாகர வாணி—இந்தஜீவசொருபத்தால் அநுப்பிரவேசஞ்செய்து நாமருபங்களை விரிக்கின்றேன்" என்று ஜீவாத்துமத்து வங்கூறுவதாலும்,

"யஸ்மின்விக்ஞாதேஸர்வமிதம்விக்ஞாதம்பவதி—எதினை யறிந்தால் இவ்வெல்லா மறிந்ததாக வாய்விடுகின்றனவோ" என்று ஏகவிக்ஞானேன சர்வவிக்ஞான பிரதிக்ஞை (ஒன் றன் ஞானத்தினாலே பலவற்றின் ஞானமுண்டாமென்று மேற்கோள்) கூறியிருப்பதால் பிரதான (பிரகிருதி) ஞானத் தினால் அதனிலிருந்துண்டாகாத புருஷர்களையறிய முடியா மையாலும்,
"ஐததாத்மியமிதம்ஸர்வம்தத்ஸத்யம் ஸஆத்மாதத்த்வமஸி—இவ்வெல்லாம் ஆத்மசொருபமே; அக்காரணவஸ்து சத்யம்; அதுவே ஆத்மா; அதுதான் நீ." என்று காரண பேதத்தை (சுவேதகேதுவிற்கு) ஒன்பதுமுறை யுபதே சித்திருப்பதாலும்,

"தஸ்மாத்வா ஏதஸ்மாத் ஆத்மந ஆகாசஸ்ஸம்பூத:— இவ்வாத்மாவினின்று ஆகாசமுண்டாயிற்று" என்று சுருதியந்தரம் (வேறு சுருதி அல்லதாவது வாக்கியம்) கூறுவதாலும், அசேதனத்தை ஜகத்காரணமாக வங்கீகரிக்கின் அதனால் விசித்திர ரசனை (ஆச்சரியகரமான செய்கை) பொருந்தாமையாலும், *66. பிரதானம் மகத்முதலியவை யுண்டென்றதற்குப் பிரமாணமின்மையாலும் சாங்கியமதம் அங்கீகரிக்கத்தக்கதன்றாம்.

இங்ஙனமே பாசுபதமதமும், பாஞ்சராத்திரமதமும், ஜைனமதமும் அங்கீகரிக்கத்தக்கன வன்றாம்; ஏனெனின் அவை சுருதி யுக்தி பாதிதமாயிருத்தலாலென்க.

சுருதி (உபநிஷத்து வாக்கியங்கள்) விதிக்குச்சேஷ (அங்க) மாயிருப்பதால் பிரம்மத்தைப் பிரதிபாதிக்க மாட்டாதென்னும் மீமாம்சமதமும் யுக்திகொண்டதன்று விதிசேஷத்துவம் சித்திக்காமையின்.

*67. அர்த்தவாதஅதிகரணந்யாயத்தால்விதிசேஷத்

*66. சாங்கியன் கூறுகின்றபடி பிரதானம் மகத்துவம் முதலியவையுண்டென்பதற்குச் சுருதிப்பிரமாண மின்றென்க.

*67. ஒன்றைப்புகழ்ந்தாவது இகழ்ந்தாவது கூறும் வாக்கியம் அர்த்தவாதம்.

அதிகரணம்—நூலின்பிரிவிலோர்பகுதி.

ந்யாயம்—திருஷ்டாந்தம்.

அர்த்தவாதஅதிகரணமாவது இந்த அதிகரணத்திற்கு



துவம் வரலாமே யென்பதும் பொருந்தாது; வேறுபாடிருப்பதால்.

இப்பாகமே பயனற்ற அர்த்தத்தைப் பிரதிபாதிக்காமலிருக்கின்ற "வாயுர்வைக்ஷேபிஷ்டாதேவதா வாயுவேந மாய்ச்சந்தரிக்குந் தேவதை" என்றதொடக்கத்து அர்த்தவாதவாக்கியங்கள் *68. அத்தியயனவிதிக்கு வேறாவதையா அப்பொருந்தாவ தின்மையால் பிரயோஜனமுடைய அர்த்

"வாயுர்வை க்ஷேபிஷ்டா தேவதா" என்றதொடக்கத்து வாக்கியங்கள் விஷயங்கள். இத்தகையவாக்கியங்கள் தர்மத்தின் விஷயத்தில் பிரமாணமா அன்று என்று சந்தேக முண்டாமிடத்துப் பூர்வபட்சி இவ்வாக்கியங்கள் சத்தியினாலாவது லட்சணையினாலாவது விதிசேஷதங்களைக் கூறாமையின் அப்பிரமாண மென்பன். சித்தாந்தி அவை விதிசேஷதங்களைக் கூறாவிட்டாலும் விதிசேஷத வாக்கியங்கள் கூறிய திரவியம் தேவதை முதலியவற்றைத் தோத்திர நிந்தைகளைச் செய்வதன் மூலமாய் விதிவாக்கியத்துடன் சேர்ந்து ஒரே அர்த்தத்தைப் போதிக்கின்றன வென்பன்.

*68. பிரயோஜனமுள்ள அர்த்தஞானமுண்டாதற் பொருட்டு அத்தியயனவிதி யேற்பட்டிருக்கிறது. அர்த்தவாத வாக்கியங்களும் அத்தியயனவிதியால் சொல்லப்பட்டமையின் அவைகளும் பிரயோஜனமுள்ள அர்த்தத்தைக் கூறுகின்றனவென்றே கொள்ளல்வேண்டும். பிரயோஜனமுள்ள அர்த்தமாவது விதிசேஷத வாக்கியங்களால் கூறப்பட்ட அர்த்தத்தைத் தோத்திரஞ் செய்வது மூலமாயும் நிந்தை செய்வது மூலமாயும் பிரவிர்த்தி நிவிர்த்திகளை யுண்டுபண்ணுவதே பிரயோஜனமாம்.

தத்தைக்கூறுகின்றனவென்றவற்றிற்குக் கற்பித்தல் வேண்டும். அங்ஙனம் கற்பிக்கும்போது *69. சப்தபாவனையின் *70. இதிகர்த்தவ்யதாம்சத்தை யபேட்சித்துக்கொண்டிருக்கின்ற விதிக்குத் தேவதாதி ஸ்துதிவாயிலாக அச் சப்தபாவனையின் இதிகர்த்தவ்யதாம்சத்தை (அர்த்தவாதம்) பூர்த்தி செய்வதால் *71. நஷ்டாசுவதக்தரத நியாயத்தால் இரண்டுவாக்கியங்களு *72 மொருவாக்கியமாய் விடுகின்றன வென்று அர்த்தவாத அதிகரணத்தில் நிர்ணயஞ் செய்யப்பட்டிருக்கின்றது.

வேதாந்தவாக்கிய ஜன்னிய ஞானத்தினால் சாட்சாத்தாகவேபரமாநந்தப்பிராப்தியும் *73. நிசேஷ(மிச்சமின்றிய)

*69. சப்தபாவனை-பிரேரணை, அஃதாவது ஏவுதல்.

*70. இதிகர்த்தவ்யதா—சாதனத்தின் சாதனம்.
இங்ஙனங் கூறுதல் மீமாஞ்சகரதுபரிபாஷை.

*71. நஷ்டாசுவதக்தரதநியாயமாவது - போர்முகத்தில்குதிரையிழந்ததேராளி தனது இரதத்திற்குத் தேரிழந்த தேராளியின் குதிரையைப் பூட்டிக்கொள்ளுவதுபோன்ற திருஷ்டாந்தமாம்.
குதிரையிழந்த தேராளியின் தேரும் தேரிழந்த தேராளியின் குதிரையும் ஒன்றையொன்று அவாவி (விரும்பி)க் கொண்டிருத்தல்போன்று விதிவாக்கியம் அர்த்தவாத வாக்கியத்தையும் அர்த்தவாத வாக்கியம் விதிவாக்கியத்தையும் அவாவிக்கொண்டிருக்கின்றன வென்பதாம்.

*72. ஒருவாக்கியமாய் விடுகின்றன—ஒரே அர்த்தத்தைப் போதிக்கின்றன.

*73. நிசேஷம்—முற்றும்.



துக்கநிவிர்த்தியுமான புருஷார்த்த லாபமுண்டாகின்றது; ஆகையால், வேதாந்தவாக்கியங்களுக்கு மேற்கூறிய அபேட்சையின்மையின் *74. அன்னியசேஷ சம்பாவனையே சம்பவிக்கின்றதில்லை.

மேற்கூறியதற்கு மாறாக விதிவாக்கியங்களே அந்தக்கரணசுத்தி வாயிலாக வேதாந்தவாக்கியங்களுக்குச் சேஷ (அங்க) மாகின்றன. ஆகையால் பயனுடையதாயும் பாதிக்கப்படாததாயும் அறியப்படாததாயுமான அர்த்தத்தைப் போதிப்பதால் வேதாந்தங்கள் ஸ்வதஸ்வ (தாமே) பிரமாணமாம். ஆகையால் பிரஹ்மம் இருக்கின்றதென்பது பெறப்பட்டது. ஆதலால் மீமாம்சமதம் சித்திக்காதாயிற்று.

தார்க்கிகர்முதலியோரது மதங்களும் "தத்துவமஸி," "அஹம்பிரமாஸ்மி", "அயமாத்மாப்பிரஹ்மம்", "சத்தியம் ஞானமனந்தம் பிரஹ்ம" என்றற்றொடக்கத்துச் சுருதிகளால் பாதிக்கப்பட்டன; "ஏகமேவாத்துவிதீயம்பிரஹ்ம," "நேஹநாநாஸ்திகிஞ்சந" என்றற்றொடக்கத்துச் சுருதிகளாலும் பாதிக்கப்பட்டன.

(பிரஹ்மத்திற்கும் பிரபஞ்சத்திற்கும்) பேதாபேதமும் (பிரஹ்மத்திற்கு) க்ஷணிகத்துவமும் (க்ஷணப்போதிருப்பதும்) "ஆகாசவத் ஸர்வகதச்ச நித்திய:— ஆகாசம்

*74. அன்னியசேஷசம்பாவனை—வேறுவாக்கியங்களுக் கங்கமாகச் சம்பவித்தல்.

போல எங்கும் வியாபகமாயும் நித்தியமாயு மிருக்கிறது என்றற்றொடக்கத்துச் சுருதிகளால் பாதிக்கப்பட்டன.

இவ்விடத்துமல்லாமதங்களும் பிரஹ்மத்தைப்பிரதிபா திக்கவில்லை என்று பிரதிஞ்ஞைசெய்ததில் 'விசுத்தாத்மகத் வாத்' என்பதுஹேது. அதன்பொருள் நிர்விகற்பமாயும்அத் விதீயமாயுமுள்ள சைதன்ய வடிவமாயிருத்தலால் என்பது.

'விசுத்தாத்மகத்வாத்' என்பதில் 'விசிஷ்டானுபூத்யா' என்பது ஹேது. அதன்பொருள் சவிகற்பமானஅனுபவத்தி னும் வேறுபட்ட "தத்துவமசி' முதலிய வாக்கியங்களா லுண்டான அகண்டானுபவத்தால் என்பது.

இதனால் சர்வவியாபகமாயும் அத்விதீயமாயும் பரமா னந்தபோத வடிவமாயும் பிரஹ்மமிருக்கின்ற தென்பது சித்தித்தது.

---

## அ—கை.

"ஸயவஷோணியா—இதுமிகவும் சூக்குமமானது"
"அணோரணீயாந்—அணுவுக்கணுவா யிருப்பது"

என்றற்றொடக்கத்துச் சுருதிகளால் பிரஹ்மம் அணு வென்று கூறப்படுவதாலும்

"அங்குஷ்டமாத்திர: புருஷ:— அங்குஷ்ட (பெரு விரல்) பரிமாணமுள்ள புருஷன்"



"ஆராக்ரமாத்ரோஹ்யவரோபிதிருஷ்ட:— தாற்றுக்கோல் முனையின் பரிமாணமுள்ளவனும் அவர (கீராபேட்சிகவியாபக) னுயும் காணப்படுகிறான்."

என்றற்றொடக்கத்துச் சுருதிகளால் கூறப்பட்ட அணுவான ஜீவனோடு அபின்னமா யிருப்பதாலும் பிரஹ் மத்திற்குச் சர்வவியாபகத்தன்மை சம்பவிக்கமாட்டா தென்றாட்சேபித்து,

i. பிர்ம்மைவேதம் அமிருதம் புரஸ்தாத்
பிரஹ்மபச்சாத் பிர்ஹ்மதக்ஷிணதச் சோத்தரேண
அதச்சோர்த்துவம்ச பிரஸிருதம் பிர்ஹ்மைவேதம்
விச்வமிதம் வரிஷ்டம்.

(இ-ள்.) முன்னே காணப்படுவன வெல்லாம் அமிர்தவடிவப் பிரஹ்மமே; பின்னும் பிரஹ்மமே; வலப்பாகமும் இடப்பாக மும் பிரஹ்மமே; மேலும்கீழும் பிறவியுள்ள எல்லா வுலகமும் சிரேஷ்டமான பிரஹ்மமே.

ii. ததேதத் பிர்ஹமாபூர்வம்
அநபரம் அநந்தரம் அபாஹியம்.

(இ-ள்.) அந்தப்பிரஹ்மம் காரணமற்றது, காரியமற்றது, உள் வெளியற்றது.

என்றற்றொடக்கத்துச் சுருதிகள் பிரஹ்மத்தை நிர் விசேஷமென்றே பிரதிபாதிப்பதால் மேற் (நான்காவது) சுலோகத்திற் கூறிய அர்த்தத்தையே உறுதிப்படுத்திக் கூறுகின்றார்.

*75. நசோர்த்துவம் நசாதோ நசாந்தர்
நபாஹ்யம் நமத்தியம் நதிர்யங் நபூர்வாபராதிக்
வியத்வியாபகத்வா தகண்டைகரூபஸ்
ததேகோவசிஷ்ட: சிவ: கேவலோஹம். (5.)

'வியத் வியாபகத்வாத்' என்பதற்கு

"ஆகாசவத்சர்வகதச்சநித்திய—ஆகாசம்போல் வியாபகமாயிருப்பதால்" என்னுஞ் சுருதியால், அல்லது

---

*75. (இ-ள்.) தத்-ஜகத்காரணமான பிரஹ்மம்,
ஊர்த்துவஞ்ச ந-உயரவிருக்கின்றதுமன்று,
அதஃச ந-கீழேயிருக்கின்றதுமன்று,
அந்தஃச ந-உள்ளேயிருக்கின்றதுமன்று,
பாஹ்யம் ந-வெளியிலிருக்கின்றதுமன்று,
மத்தியம் ந-இடையிலிருக்கின்றதுமன்று,
திரியக் ந-குறுக்கேயிருக்கின்றதுமன்று,
பூர்வாபராதிக் ந-கிழக்குமேற்கான திக்குமன்று,
வியத்வியாபகத்வாத்-ஆகாசம்போல் வியாபகமாயிருப்பதால்,
அல்லது! ஆகாசத்தைவிட,
அஹம்-நான் (வியாபகமாயிருப்பதால்),
அகண்டைகரூப: -அகண்டமாயு மேகரூபனு மிருக்கின்றவனும்,
ஏக:-அத்விதீயனும்,
அவசிஷ்ட:-சர்வதுவைதத்திற்கும் பாதமிருப்பினும் பாதமற்றவனும்,
கேவல:-நிர்த்தர்மகனும்,
சிவ:-பரமானந்தபோதரூபனுமிருக்கின்றேன்,



"ஜ்யாயாந் ஆகாசாத் மஹதோமஹீயாந்— ஆகாயத்திலும் பெரிதாகவும் மகத்திலும் மகத்தாகவு மிருக்கிறது" என்னுஞ் சுருதியால்

ஆகாசத்தைப் பார்க்கிலும் வியாபகமா யிருத்தலால் என்பது பொருள்.

சகல சரீரவியாபியான சைதன்யத்தின் உபலப்தியா. (பிரத்தியட்சத்தா) ல் ஜீவனுக்கும் வியாபகத்தன்மையிருந் தாலும் உபாதி தர்மாத்தியாசத்தால்......

"ஆராக்கிர மாத்திரத்துவம்—தாற்றுக்கோலின் முனை போலிருக்குந்தன்மை" என்று மேற்கூறிய சுருதியால் சொல்லப்பட்டது. "புத்தேர்குணேனாத்ம குணேனசை வஹி ஆராக்கிர மாத்திரோஹ்யவரோபி திருஷ்ட:" என்னும் சுருதியால் சூட்சுமமென்னும் அபிப்பிராயத்தினாலே பிரஹ்மம் அணு வென்று சொல்லப்பட்டது.

மற்றவற்றின்பொருள் வெளிப்படை.

அ—கை.

அங்ஙனமாயின், பிரஹ்மத்துக்கு உபாதானகாரண மாயிருப்பதால் உபாதான உபாதேயங்களுக்கு அபேத

யிருக்கின்றது; அபேதமிருப்பதால் விசித்திரமான (பல்வேறுவகைத்தாய) ஜகத்திற்கும் பிரஹ்மத்திற்கும் அபேதமிருக்கின்றது; அபேதமிருப்பதால் பிரஹ்மம் துக்கவடிவமாய் விடுகின்றது. ஆகவே, ஜீவன்பிரஹ்மத்தினுடன் அபின்னமாய் விடுவதால் ஜீவனுக்குப் புருஷார்த்தப்பிராப்தியின்றென்றுட்சேபித்துப், பிரஹ்மம் சொப்பிரகாச பரமானந்த வடிவமாயிருப்பதாலும் சகல ஜகத்பிராந்திக்கு அதிஷ்டானமாயிருப்பதால் காரணமென்று சொல்லப்படுவதாலும், அத்தியஸ்தத்தோடு சம்பந்தமிராமையாலும் பிரஹ்மத்தின்கண் அநர்த்தம் (துக்கம்) லேசம் (சிறிது) கூட இன்றென்று கூறுகின்றார்.

*76. நசுக்லம் நகிருஷ்ணம் நரக்தம் நபீதம்
நகுப்ஜம் நபீநம் நஹ்ருஸ்வம் நதீர்க்கம்
அரூபம் ததாஜ்யோதி ராகாரகத்வாத்
ததேகோவசிஷ்ட: சிவ: கேவலோஹம், (6.)

---

*76. (இ-ள்.) தத்-அந்தப்பிரஹ்மம்,
சுக்லம்ந-வெண்ணிறமுமன்று,
கிருஷ்ணம்ந-கருப்புநிறமுமன்று,
ரக்தம்ந-சிவப்புநிறமுமன்று,
பீதம்ந-மஞ்சள்நிறமுமன்று,
குப்ஜம்ந-அணுவுமன்று,
பீநம்ந-மகத்துமன்று,
ஹ்ருஸ்வம்ந-குறுகினதுமன்று,
தீர்க்கம்ந-நீண்டதுமன்று,



குப்ஜம்-அணு, பீநம் மகத்து, ஹ்ருஸ்வம்-குறுமை, தீர்க்கம்-நீட்சி இந்நால்வகைத்தாய பரிமாணங்களை நிஷேதித்தபடியால் (பிரஹ்மம்) திரவியமுமன்றென்று நிஷேதிக்கப்பட்டதாயிற்று.

யாது சித்தினாலே விளங்குகின்றதோ அது ரூபமெனப்படும். அஃதாவது பிரமேய மெனப்படும். (பிரஹ்மம்) அரூபம்; அஃதாவது பிரமேயமன்று. இதனால் அவ்வவ்வாதிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள திரவியகுண கர்மமுதலிய பதார்த்தங்களியாவும் நிஷேதிக்கப்பட்டன.

" அஸ்தூலமனணு அஹ்ருஸ்வம் அதீர்க்கமலோஹிதம்—

ஸ்தூலமுமன்று, அணுவுமன்று, குறுமையுமன்று, நீட்சியுமன்று, இரக்தமுமன்று."

"அசப்தமஸ்பர்சமரூப மவ்யயம் ததாரஸம் நித்திய மகந்தவச்சயத்—

---

ததா-அப்படியே,
அரூபம்-பிரமேயமுமன்று,
ஜ்யோதிராகாரகத்வாத்-சொப்பிரகாசஞானரூபமாயிருப்பதால்,
அஹம்-நான்,
ஏக:-ஒருவனும்,
அவசிஷ்ட:-சகல துவைதத்திற்கும் பாதமிருப்பினும் பாதமற்றவனும்,
கேவல:-நிர்க்குணனும்,
சிவ:-பரமானந்தபோத ரூபனுமாயிருக்கின்றேன்.

சப்தமற்றது, பரிசமற்றது, ரூபமற்றது, நாசமற்றது, ஆநந்தமாயிருப்பது, நித்தியமாயிருப்பது, கந்தமன்றியிருப்பது, இவ்வனம்யாதிருக்கின்றதோ (அது பிரஹ்மம்)."

என்றதற்றொடக்கத்துச் சுருதிகள் சர்வாநர்த்தமற்ற பரமாத்ம சொரூபத்தைப் பிரதிபாதிக்கின்றன.

சுருதிகளால் சித்திக்கப்பட்ட அர்த்தத்தை நியாயத்தால் நிர்ணயம் செய்யும்பொருட்டுக் காரணம் கூறுகின்றார்.

'ஜோதிராகாரகத்வாத்—சொப்பிரகாச ஞானாகாரமாயிருப்பதால்' (பிரஹ்மம்) அப்பிரமேயமாம். பிரமேயமாயிருப்பின் (பிரஹ்மத்திற்கு) கடாதிகள் போன்று ஜடத்தன்மை சம்பவிக்கும்;

"ஏததப்பிரமேயம்த்ருவம்--இந்தப்பிரஹ்மம் அப்பிரமேயம், சாசுவதம்"

என்றதற்றொடக்கத்துச்சுருதிகளிருப்பதால்.

---

## அ—கை.

(ஆ.) அங்ஙனமாயின், பிரஹ்மபாவம் யாருக்கு உபதேசிக்கப்படுகின்றது? 1. பிரஹ்மத்திற்கா? 2. அப்பிரஹ்மத்திற்கா?



இரண்டாவதுபட்சம்பொருந்தாது; அப்பிரஹ்மம் (பிரஹ்மமின்னனம்) ஜடமாயும் அசத்தாயுமிருப்பதால்.

முதலாவது பட்சமும் பொருந்தாது; (1) உபதேசம் வியர்த்தமாய் விடுகின்றபடியால், (2) பிரஹ்மபாவம் சுயமாகவே சித்தித்திருக்கின்றபடியால்.

ஜீவன் சுயமாகவேபிரஹ்மமாயிருந்தாலும் அவித்தியாவியவதானம் (அவித்தையாகிய மறைவு) (அவனுக்கு) இருக்கின்றது. அது ஞானத்தால் நிவிர்த்தியாகின்ற தென்பதும் பொருந்தாது.

அவித்தியாநிவர்த்தி ஆத்மபின்னமாயின் சத்தியமான ஆத்மாவைக்காட்டிலும் வேறொன்றிருப்பதாகச் சித்திக்கும்; (அங்ஙனஞ் சித்திப்பதால்) அத்விதீயப்பிரஹ்மம் சித்திக்காமற்போம்.

அவ்வியாவிர்த்தா நநுகதம்வஸ்து
பிரஹ்மமேதி பண்ணியதே
பிரஹ்மார்த்தோ துர்லபோத்திரஸ்யாத்
அவிதீயே ஸதிவஸ்துநி.

(இ-ள்.) எல்லாவற்றையும் அநுசரித்த தர்மியன்றியும் தர்மமன்றியும் மாறுபாடடைதலின்றியுமிருக்கின்றவஸ்து பிரஹ்மமென்று சொல்லப்படுகின்றது. இரண்டாவது வஸ்துவிருக்கும் பக்ஷத்தில் அந்தப் பிரஹ்மரூபமான அர்த்தம் துர்லபமாம் (பெறப்படமாட்டாது).

என்று வார்த்திகத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது.

அபின்னமென்று கூறப்பட்டதில் உபக்கிரமத்திலிருந்து மாமென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

(சு.) சப்தம் உண்மையில் பலவிதமென்று அறியப்படுகின்றனவா? அல்லது தோற்றத்திலேயேயென்று அபிப்பிராயப் படுகின்றனவா?

முதலாவது பக்ஷத்தைச் சொல்லி பரிகரிக்கின்றார்:

*77. நசாஸ்தா நசாஸ்திரம் நசிஷ்யோ நசிக்ஷா
நசத்வம் நசாஹம் நசாயம் பிரபஞ்ச:
ஸ்வரூபாவபோதோ விகல்பாஸஹிஷ்ணு:
ததேகோவசிஷ்ட: சிவ: கேவலோஹம். (7.)

---

*77. (இ-ள்.) சாஸ்தா-உபதேசகர்த்தாவான குரு,
சாஸ்திரம்-உபதேச சாதனமான நூல்,
சிஷ்ய:-உபதேசகர்மா (உபதேசம்பண்ணத் தகுந்தவன்),
சிக்ஷா-உபதேசக்கிரியை,
த்வம்-ச்ரோதா (கேட்கிறவனாகியநீ),
அஹம்-வக்தா (சொல்லுகிறவன்).
ந-சாஸ்தா-உபதேசகர்த்தாவில்லை,
ந-சாஸ்திரம்-உபதேசசாதனமான சாஸ்திரமுமின்று,
ந-சிஷ்ய:-உபதேசிக்கத்தகுந்த சிஷ்யனுமில்லை,
ந-சிக்ஷா-உபதேசமாகிய கிரியையுமின்று,
ந-த்வம்-ச்ரோதாவான நீயுமில்லை,
ந-அஹம்-வக்தாவான நானுமில்லை,



அயம்பிரபஞ்ச:-என்பதற்குப் பிரத்தியக்ஷாதிப் பிரமாணங்கட்கு விஷயமான இந்த அனாத்மமான தேகாதிப் பிரபஞ்சமுமில்லை இவையெல்லாம் பாரமார்த்திகத்திலில்லை யென்பது பொருள்.

ஸ்வரூபாவபோதோவிகல்பாஸஹிஷ்ணு: —

சொரூபஞானமானது விகற்பத்தைச் சகியாது (விகற்பமில்லாதிருக்கும்)

என்னும் வாக்கியத்தால் இரண்டாவது பக்ஷத்தை நிராகரிக்கின்றார்.

அவித்யா நிவிர்த்தியானது ஆத்மாவா? அநாத்மாவா? என்னும் விகற்பத்தில் ஒருபிரயோஜனமும் நிருபிக்க முடியாது. ஆயினும் பிரகாசமாணந்தருபமானது அனுபவிக்கப்படுகின்றது. இஃதெப்படி யென்று விகற்பிக்கக்கூடாது. சகலத்துவைதமும் நிவிருத்தியாய் விடுவதால் விகற்பத்திற் கிடமில்லை.

---

அயம்பிரபஞ்ச:-தேகேந்திரியமுதலிய இந்தப்பிரபஞ்சமும்
விகல்பாஸஹிஷ்ணு:-விகல்பத்தைச்சகியாத, [யின்று,
ஸ்வரூபாவபோத:-சொரூபஞானம் அனுபவிக்கப்படுகின்றது,
தத்-ஆகையினால்,
அஹம்-நான்,
ஏக:-அத்விதீயனாகவும்,
அவசிஷ்ட:-சர்வத்துவைதத்திற்கும் பாதமிருப்பினும் பாதமற்றவனாயும்,
கேவல:-நிர்த்தர்மகனாயும்,
சிவ:-பரமானந்தபோதரூபனாயுமிருக்கின்றேன்.

*78. பிரத்தியட்சமாகச் சித்தித்துள்ள விஷயத்தில் (அஞ்ஞானநிவிர்த்தி) அநுபபத்தி (பொருந்தாமை) யின்று.

நநிரோதோநசோத்பத்திர் நபத்தோநசஸாதக:
நமுமுக்ஷுர் நவைமுக்த: இத்யேஷாபரமார்த்ததா.

(இ-ள்.) (பிரபஞ்சத்திற்கு) நாசமில்லை, உற்பத்தியில்லை, தத்வ ஞானி யில்லை, சிரவணாதி சாதனமுள்ளவனு மில்லை, முமுட்சுவு மில்லை, முத்தனு மில்லை.

பிர்ம்மவா இதமக்ர ஆஸீத்ததாத்மாநமேவாவேத்
அஹம்பிர்ம்மாஸ்மீ திதஸ்மாத்தத்ஸர்வமபவத்.

(இ-ள்.) (சிருஷ்டிக்கு) முந்தியிந்தப்பிரபஞ்சமான துபிரஹ்மமாகவேயிருந்தது. அப்போது அது நான்பிரஹ்மமா யிருக்கிறே னென்று தன்னையறிந்தது. ஆகையால் எல்லாம் பிரஹ்மமாய் விட்டன.

என்றுற்றொடக்கத்துச்சுருதிகள் முந்தியும் பிரஹ்ம சொரூபமாயிருக்கிற ஜீவனுக்கே ஞானத்தினல் பிரஹ்ம பாவத்தைக் காட்டுகின்றன; சகலத் துவைதத்தையும் நிவிர்த்தி செய்கின்றன.

தத்பதார்த்த நிருபணப் பிரகரணம்
முற்றிற்று.

*78. சுத்திஞானத்தினல் சுத்தியஞ்ஞானம் (சிப்பியென்றறியாமை) நிவிர்த்தியானல் பிரத்தியட்சமாகச் சித்தித்திருக்கும்போது பிரஹ்மஞானத்தினல் அதனஞ்ஞானம் (பிரஹ்மத்தையறியாமை) எங்ஙனம் நிவிர்த்தியா மென்னும் அநுபபத்தி சம்பவிக்கிறதின்று) இங்ஙனமிருத்தல் பரமார்த்தமாம்.



## திருக்பதார்த்த நிருபணப் பிரகரணம்.

ஆ—கை.

அஞ்ஞானமாயின், சொப்பிரகாச சைதன்னிய ரூபமான ஆத்மா எப்போதும் பிரகாசித்துக் கொண்டிருப்பதால் ஜாக்கிர சொப்பன சுழுப்தியாதி யவஸ்தைகள் ஆத்மாவிற்கு எங்ஙனம் சம்பவிக்கும்? பிராந்தியால் அவ்வவஸ்தைகள் சம்பவிக்குமென்பதுங்கூடா. அப்படியானல் எல்லாம் சொப்பனமாய் விடும் என்று சங்கிப்பது தகுதியன்று. இலட்சணைத்தினல் ஜாக்கிராதி மூன்றும் சொப்பனமா யிருந்தாலும் வியவகாரத்தில் அவித்தையினல் கற்பிக்கப்பட்ட விசேஷம் (பேதம்) சம்பவிப்பதாலும் சதசத்விலட்சணமா யிருப்பதாலும் விசேஷத்தோடு கூடியிருக்கின்றன. ஆகையால் ஜாக்கிராதி வியவஸ்தை (வேறுபாடு) பொருந்துகின்றது. உண்மையிலொரு வியவஸ்தையு மில்லையென்று கூறுகின்றார்.

*79. நஜாக்ரந் நமேஸ்வப்நகோவா ஸுஷுப்தி:
நவிச்வோநவாதைஜஸ: பிராஞ்ஞகோவா
அவித்யாத்மகத்வாத் திரயாணாம் துரீயஸ்
ததேககோவசிஷ்ட: சிவ: கேவலோஹம். (8.)

*79. (இ-ள்.) மே-எனக்கு,
ஜாக்கிரத்-ஜாக்கிராவஸ்தையு மின்று,

இவ்விடத்தில் வ்யுத்க்ரமமாகப் பூர்வாபர்யம் (முன் பின்) சொல்லப்பட்டது. அங்ஙனமன்றே, இம்மதத்தில் பதார்த்தம் திருக்கு திருசிய மென்றிருவகைத்தாம். வாதிகளினாற் கற்பிக்கப்பட்ட மற்றைய பதார்த்தங்கள் இவற்றிலடங்கிவிட்டன.

அவற்றுள் திருக்குப்பதார்த்தம் ஆத்மா; அது பாரமார்த்திகம். அதுவும் ஒன்றாம்.

அஃதெப்போதும் ஒருவடிவினதாயிருப்பினும் உபாதி பேதத்தால் ஈசுவரன், ஜீவன், சாக்ஷி யென்று மூன்று வகைத்தாம்.

---

ஸ்வப்ந:ந-சொப்பனாவஸ்தையு மின்று,
சுஷுப்தி:ந-சுழுப்தியவஸ்தையு மின்று,
விச்வ:ந-விசுவனு மில்லை,
தைஜஸ:ந-தைஜஸனு மில்லை,
ப்ராஜ்ஞ:ந-பிராக்கியனு மில்லை,
த்ரயாணாம்-இம்மூவர்க்கும்,
அவித்யாத் மகத்வாத்-அவித்தியா ரூபத்தன்மை யிருப்[பதால்
தத்-ஆகையால்,
அஹம்-நான்,
துரீய:-நான்காவதாயு
ஏக:-அத்விதீயனாயும்,
அவசிஷ்ட:-சர்வத்தைத் தீர்க்கும் பாதமிருப்பினும் பாத[மற்றவனாயும்,
கேவல:-தர்மமற்றவனாயும்,
சிவ:-பரமானந்த போதரூபனாயும் இருக்கிறேன்,



1. அவற்றுள் காரணமான அஞ்ஞானத்தை உபாதியாகவுடையவன் ஈசுவரன்.

2. அந்தக்காரணம், அதன்சம்ஸ்காரம் ஆகிய இவற்றுடன்கூடிய அஞ்ஞானத்தை யுபாதியாகவுடையவன் ஜீவன்.

இவ்விரண்டன்றன்மை மேலே விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

3. (1.) அவித்தியாப் பிரதிபிம்பன் ஈசுவரனென்னும் பக்ஷத்தில் பிம்பசைதன்னியம் சாக்ஷியாம்.

(2.) பிம்பசைதன்னியம் ஈசுவரனென்னும் பக்ஷத்திலோ, பிம்பப்பிரதிபிம்பமுகத்தை யநுசரித்த மூகசொரூபம்போல் ஜீவேசுரர்களை அநுசரித்துச் சர்வத்தையும் ஸ்மரிக்கிற சைதன்னியம் சாக்ஷி யென்று சொல்லப்படுகின்றது.

(3.) வார்த்திககாரர் மதத்திலோ, ஈசுவரனே சாக்ஷியாகையால் ஜீவன் ஈசுவர னெனத் திருக்பதார்த்த மிருவகைத்தாம்.

அவற்றுள் ஈசுவரனும், தனக்குபாதியாகிய அவித்தையின் குணபேதத்தால் விஷ்ணு, பிரமா, ருத்திரனென மூவகையாவன்.

(a) காரணமான சத்துவகுணவச் சின்னன் விஷ்ணு; பாலன கர்த்தா.

(b) காரணமான ரஜோகுணவச்சின்னன் பிரம்மா; சிருஷ்டி கர்த்தா.

இரண்யகர்ப்பரோ மகாபூதங்களைக் குறித்துக் காரணமாயிராமையால் பிரம்மாவன்று; ஆயினும், (அவர்) ஸ்தூல பூதங்களைச் சிருஷ்டிப்பதால் சிலவிடங்களில் பிரம்மாவென்று உபசாரமாகச் சொல்லப்படுகின்றார்.

(c) காரணமான தமோகுணவச் சின்னன் ருத்ரன்; சம்ஹார கர்த்தா.

இவ்வாறு ஒருவரே பிரம்மா, விஷ்ணு, ருத்திரர்களாகிய புருஷாகாரமாகவும்; சரஸ்வதி, லக்ஷ்மி, பவானி முதலிய ஸ்திரீரூபமாகவு மிருக்கின்றார்.

மச்சகூர்மாதிகளான அநேக அவதாரங்களும் பக்தர்களுக்கு அநுக்கிரஹம் பண்ணும்பொருட்டு *80. லீலையால் ஆவிர்ப்பாவத்தை (வெளிப்படுதலை) யடைகின்றன வென்றறியவேண்டும்.

சின்மயமாயும் அத்விதீயமாயும் நிரவயவமாயும் சரீரமற்றதாயும் இருக்கின்ற பிரஹ்மத்திற்கு ரூபகற்பனையானது உபாசகனது அநுக்கிரஹத்தின் பொருட்டாம்.

*80. லீலை—தனக்குப் பிரயோஜனத்தைக் கருதாமற் செய்யுங் காரியம்.



ஜீவனும் தன்னுடைய உபாதியின் அவாந்தரபேதத்தால் விசுவன் தைசசன், பிராஞ்ஞன் என மூவகையாவன். அவற்றுள்:—

(a) அவித்தை, அந்தக்கரணம், ஸ்தூல சரீரம் இவற்றுடன் கூடியுள்ள ஜாக்கிரதாவஸ்தாபிமானி விசுவன்.

(b) அவனே ஸ்தூலசரீர அபிமானமற்று மற்ற இரண்டு உபாதியோடு கூடியிருப்பின் சொப்பனாபிமானியான தைசசன்.

(c) சரீரம் அந்தக்கரணமென்னு மிரண்டுபாதியற்றவனும் அந்தக்கரண சம்ஸ்காரத்துடன் கூடின அவித்தியா மாத்திர வுபாதியுற்றவனுமுள்ள சுழுப்தி அபிமானி பிராஞ்ஞன்.

இவர்கட்குச் சுதந்திரமான உபாதிபேத மிராமையால், சுதந்திரமான பேதமில்லாவிடினும் அவாந்தரமான உபாதிக்குப் பேதமிருப்பதால் அவாந்தரமான பேதம் சொல்லப்படுகின்றது.

சாக்ஷியோ எல்லாவற்றிலும் சம்பந்தப்பட்டவனும், சர்வத்தையும் அநுசந்தானம் பண்ணுகிற (ஸ்மரிக்கிற) வனும், துரியனென்னும் பேருள்ளவனுமாம்; அவன் ஒருவனே. உபாதிபேதத்தால் அவனுக்கு ஓரிடத்திலும் பேதமின்றாம்; அவனுடைய உபாதி ஏகரூபமாகையால்.

திருக்பதார்த்த நிரூபணப்பிரகரணம்

முற்றிற்று.

## கிரியபதார்த்த நிரூபணப்பிரகரணம்.

அவித்தை, அதன்சம்பந்தம், அதன்காரியம் ஆகிய பிரபஞ்சம் கிரியபதார்த்தமாம். அம்மூன்றும் அபாரமார்த்திகமா (மித்தையா) யிருப்பினும் (அதற்கு) வியாவகாரிகசத்தை யங்கீகரித்துள்ளபடியால் ஸ்வாப்னிக (சொப்பன) பதார்த்த நிரூபணம்போல் இக்கிரிய பதார்த்த நிரூபணம் வியர்த்தமானதன்று; உபாசனாதிகளில் உபயோகமா யிருப்பதால்.

அக்கிரியபதார்த்தம் (1) அவ்வியாகிருதம், (2) மூர்த்தம், (3) அமூர்த்தமென மூவகைத்தாம்.

அவற்றுள் (1) *81. அவ்வியாகிருதமாவது *82. சித்தாதாத்மியத்தையடைந்த அவித்தை.

அது மூர்த்தா மூர்த்தப் பிரபஞ்சத்திற்குப் பீஜசக்தி வடிவமாயிருக்கிறது.

அவித்தியாசித்சம்பந்தம், ஜீவேசுவரவிபாகம் (பிரிவு) சித்தாதாத்மியம் ஆகியவிவை அவித்தியாஜன்னியமா யிராவிடினும், அவித்தை நிவிர்த்தியாகும்போது நிவிர்த்தியாவனவாயிருப்பதால் அவித்தியாவியாப்பியமென்று சொல்லப்படுகின்றன.

---

*81. அவ்வியாகிருதம்-பிரிக்கப்படாதது.
*82. தாதாத்மியம்-ஒன்றுபடுதல்.



இவ்வவித்தையானது சித்சம்பந்த முதலிய மூன்றுடனே அநாதியாயிருப்பதால் அவ்வியாகிருதமென்றுசொல்லப்படுகின்றது.

இவ்வவ்வியாகிருத பதார்த்தம் ஈசுவரோபாதி.

அவ்வீசுவரோபாதியான அவித்தையும் சுயமே (தானாகவே) ஜடமாயிருப்பினும் அதுடனுள்ள ஈசுவரனால் பிரகாசத்தன்மையடைந்தும் பூர்வபூர்வ சம்ஸ்காரம் ஜீவனதருமம் இவற்றுடன் கூடிக்கொண்டும் சப்த ஸ்பரிச ரூப ரச கந்த வடிவ ஆகாசம் வாயு தேயு அப்பு பிருதிவி என்னும் பேருள்ள பஞ்சமகா பூதங்களையுண்டுபண்ணுகின்றது.

அம்மகாபூதங்களுள் பூர்வ பூர்வ (முன்முன்னுள்ள) பூதபாவத்தை (பூதத்தன்மையை) யடைந்த அவித்தையானது உத்தரோத்தர (பின்பின்னுள்ள) பூதத்தைக் குறித்துக்காரணமாயிருப்பதால் பூர்வ பூர்வ பூதங்களின் குணங்கள் உத்தரோத்தரமான பூதங்களில் பிரவேசித்திருக்கின்றன.

இங்ஙனம் அவித்தையினாலேயே அந்தகாரமு (இருட்டு)ம் உண்டாகின்றது. அது (இருள்) பாவவடிவமே, ஆவரணவடிவம், சாட்சிஞானத்திற்கு விரோதி, பிரகாசத்தால்நாசத்தையடைவது, மின்னல்முதலியவைபோன்று விரைவிற்றோன்றி யழியுந்தன்மையது என்பதுசித்தாந்தம். அந்தகாரம் சம்சார காரணமான தேகத்தைக் குறித்து, உபாதான காரணமாகா திருத்தலால் சிருஷ்டிப்பிரகரணத்தில் அதுபற்றிச் சுருதிகள் யாதுங்கூறவில்லை. ஆதலால் யாதும் விரோதமின்று.

திக்கும் காலமுமோ (உண்டென்பதற்குப்) பிரமாண மின்மையால் (அவற்றைப்பற்றியும் சிருஷ்டிப் பிரகரணத்தில்) கூறப்படவில்லை. (ஏனெனின்) ஆகாசமே திக்கென்னும் வியவகாரத்திற்குக் காரணமாகச் சம்பவிப்பதாலும், "திசஃ ச்ரோத்ரம்—திக்குக்களே சுரோத்திரேந்திரியம் (ஆகாசம்)" என்று சுருதி கூறுவதாலு மென்க.

காலமோ அவித்தையே; அதுவே சர்வத்திற்கும் ஆதாரமா யிருப்பதால்.

(3) அந்தச்சூட்சுமமான அபஞ்சீகிருதபஞ்சமகாபூதங்கள் அபூர்த்த மென்னும் பேருடையன; காரணத்தோ (அவித்தையோ) டைக்கியமா யிருப்பதால் சத்துவ ரஜஸ் தமோகுண வடிவமா யிருக்கின்றன. பிரதானமான சத்வாம்சத்தினால் ஞானசக்தி கிரியாசக்திசொரூபமானசொச்ச திரவியத்தைப் பலவுருவங்கள் ஒருங்குகூடிச் சித்திர ரூபத்தை யுண்டுபண்ணுவதுபோலத் தாமொருங்குகூடி யுண்டுபண்ணின.

அந்தச்சொச்சத் திரவியத்தின் ஞானசக்திப் பிரதான அம்சம் அந்தக்கரணம். அவ்வந்தக்கரணம் புத்தி மனமென இருவகைத்தாகச் சொல்லப்படுகின்றது.

கிரியாசக்திப் பிரதான அம்சம் (பாகம்) பிராணன். அந்தப்பிராணன்: பிராணன், அபானன், வியானன், உதானன், சமானனென்றைவகைத்தாம். இங்ஙனமே ஒவ்வொரு பூதங்களினின்றும் ஞானசக்தி கிரியாசக்தி பேதத்தால் தனித்தனியே ஞானேந்திரியம் கர்மேந்திரிய மென்று இரண்டும் உண்டாயின,



ஆகாசத்தினின்று சுரோத்திரேந்திரியமும் வாக்கிந்திரியமும், வாயுவினின்று தொக்கிந்திரியமும் பாணீந்திரியமும், தேஜஸினின்று சட்சுரிந்திரியமும் பாதேந்திரியமும், அப்புவினின்று ரசநேந்திரியமும் பாயு (குத) விந்திரியமும், பிருதிவியினின்று கிராணேந்திரியமும் உபஸ்தேந்திரியமும் உண்டாயின.

சண்டுத் "தேஜோமயீவாக்—வாக்கிந்திரியம் தேஜஸிலிருந்துண்டாயிற்று"

என்னும் சுருதியால் வாக்கிந்திரியம் தேஜஸிலிருந்துண்டான தென்றும், பாதேந்திரியம் ஆகாசத்திலிருந்துண்டான தென்றும் சிலர் கூறுகின்றனர்.

வாக்கிந்திரியமானது சப்தவியஞ்சக (சப்தத்தைப் பிரகாசிக்கச் செய்யும்) இந்திரியமாதலால் சுரோத்திரேந்திரியம்போன்று ஆகாசத்தினின்றுண்டாயிற்று. *83. பாத சிகிச்சையி (வைத்தியத்தி) னாலும் கண்ணிற்குச் சௌக்கிய முண்டாதலைக் கண்டிருத்தலால் சட்சுசு போன்று பாதமும் தேஜோந்திரிய (தேஜஸிலிருந்துண்டான இந்திரிய) மென்று நன்றாக அறிகின்றனம்.

"தேஜோமயீவாக்—வாக்கிந்திரியம் தேஜோமயம்" என்னும் சுருதியோ மனம் பஞ்சபூதகாரியமாயிருப்பினும்

---

•33. பாதத்தில் எண்ணெயிட்டுத்தேய்த்தலால் கண்ணிற்குக் குளிர்ச்சி யுண்டாதல் பிரசித்தம்.

"அன்னமயம் ஹி ஸோம்யமந—ஆபோமயீ" மனம் அன்னமயம்" என்று சொன்ன சுருதி மனதிற்கு அன்னம் உபகாரம் பண்ணும் நிமித்தத்தால் "அன்னமயம்" மன" என்று சொன்னதுபோல், தேஜஸ் வாகிந்திரியத்திற்கு உபகாரம் பண்ணுவதால் "தேஜோமயீவாக்" என்று உபசாரமாகக் கூறிற்று.

மனது பஞ்சபூதத்தின் குணத்தைக் கிரஹிப்பதால் பஞ்சபூதகுணத்துடன் கூடியதென்று நிச்சயிக்கப்படுகின்றது; ஆகையால், பஞ்சபூதாத்மக (பஞ்சபூதவடிவ) மென்றறியவேண்டும் *34. வேறன்று.

இவைகட்கு அதிஷ்டானமானதேவதைகளும் ஞான சக்திக் கிரியாசக்திப் பிரதானர்களாம். சுரோத்திரத்திற்குத் திக்கும், வாக்கிற்கு அக்கினியும், தொக்கிற்கு வாயுவும்,

*34. நேத்திரேந்திரியம் தேஜஸை யுபாதானமாகவுடையது; உருவாதிகளுக்குள் உருவத்தையே பிரகாசஞ்செய்வதால்; தீபை (ஒளிப்பொருள்) முதலியவைபோல என்னும் அனுமானத்தினால் நேத்திரேந்திரிய முதலியவற்றிற்குத் தேஜஸ் மாத்திரம் உபாதான மென்பது சித்திப்பதுபோல்

மனது பஞ்சபூதங்களை யுபாதானமாகவுடையது; பஞ்சபூத குணங்களைக் கிரஹிப்பதால்; என்னும் அனுமானத்தால் மனது பாஞ்சபௌதிக (பஞ்சபூதகாரிய) மென்று சித்திக்கின்றது. தார்க்கிகர்முதலியோரது மதத்திலோ மனம் அணுவானதால் பஞ்சபூதஜன்னியமன்று; ஆகவே அவர்கள் மதத்தில் இவ்வனுமானம் பிரசித்திக்கமாட்டாதென்பதே கருத்தென்பது 'வேறன்று' என்பதன்பொருள்.



பாணிக்கு இந்திரனும், சட்சுக்கு ஆதித்தனும், பாதத்திற்கு விஷ்ணுவும், ரசனைக்கு வருணனும், பாயுக்கு மித்திரனும், கிராணத்திற்கு அசுவனியும், உபஸ்தத்திற்குப் பிரஜாபதியும் அதிதேவதைகளாம்.

அவற்றுள், ஞானசக்தியின்சமஷ்டி அந்தக்கரணம்.

2. கிரியாசக்தியின்சமஷ்டி பிராணன்.

சுரோத்ரம், தொக்கு, சக்ஷுஸ், ரஸனை, கிராணம் இவைகளைந்தும் ஞானேந்திரியங்களாம்.

அவற்றுள், சுரோத்திரேந்திரியம் சப்தத்தையும், தொக்கு ஸ்பரிசத்தையும், சக்ஷுஸ் ரூபத்தையும், ரஸனை ரஸத்தையும், கிராணம் கந்தத்தையும் கிரஹிக்கின்றன.

[illegible]ந்தும் சக்ஷுஸ்ஸும் தத்தம்மால் கிரஹிக்கக்கூடிய குணத்தி[illegible] ஆசிரயமான திரவியத்தையும் கிரஹிக்கின்ற[illegible]

[illegible]ரோத்திரமும் சக்ஷுஸ்போல் விஷயதேசத்தை ய[illegible] விஷயத்தைக் கிரஹிக்கின்றது.

வாக்கு, பாணி, பாதம் பாயு, உபஸ்த மென்னும் பேருள்ள இவ்வைந்தும் கர்மேந்திரியங்களாம்.

அவற்றுள், வாக்கு வசனத்தையும், பாணி இடுதலேற்றலையும், பாதம் கமனத்தையும், பாயு மலவிசர்க்கத்தையும், உபஸ்தம் ஆனந்தத்தையு முண்டுபண்ணுகின்றன.

இவையாவும் கூடின பதினேழும் லிங்கசரீரமாம். இது (லிங்கசரீரம்) ஞானசக்திப் பிரதானமாயிருந்தால் இரண்ணியகருப்பனென்றும், கிரியாசக்திப் பிரதானமா

இவ்விஷயத்தில் "திரிவிர்தம் திரிவிர்தம் ஏகைகாங் கரவாணி—ஒவ்வொன்றையும் மூன்று மூன்றாகச்செய்கின் றேன்" என்னும்சுருதியினாலும், "திரிவிர்த் குர்வத: உப தேசாத்—திரிவிர்த் கரணம் பண்ணினவரது காரி யம் இதுவென்று உபதேசம் பண்ணி யிருப்பதால்" என் னும்பிரஹ்ம சூத்திரத்தினாலும், மூன்றற்கே சேர்க்கை தெரிவதாலும் திரிவிர்த்கரணமே தவிரப் பஞ்சீகரணமின் றென்று சொல்லுகின்றனர் சிலர். அவர் பக்ஷம் *85. வியத திகரண நியாயத்தால் தள்ளப்பட்டது. அங்ஙனமன்றோ, தைத்திரீயத்தில்

"தஸ்மாத்வா ஏதஸ்மா தாத்மந ஆகாசஸம்பூத: ஆகா ஸாத்—இந்த ஆத்மாவினின்றும் ஆகாசமுண்டா யிற்று; ஆகாசத்தினின்றும் வாயுவுண்டாயிற்று" என்று கூறப்பட்டிருத்தலின், சாந்தோக்கியத்தில் தேயு, அப்பு, பிருதிவி இவைகளுக்குச் சிருஷ்டி சொல்லப்பட்டிருப் பினும், அங்கு ஆகாசவாயுக்களையுஞ் சேர்த்துக்கொள்ள வேண்டும்;

தேஜஸ்பதார்த்தத்தி லிருக்கும் பிராதம்மியமா (தலைமையா)ன தர்மங்களைப் பார்க்கிலும் ஆகாசவாயு பதார்த்தங்கள் பிரபலமாகையாலும்,

---

*85. சாரீரகமீமாம்சை 2-வது அத்தியாயம் மூன்றாவது பாதம் முதலாவது அதிகரணம் வியததிகரணநியாயமாம். அஃதாவது ஆகாசாதிகரண நியாயம் (ஆகாசத்திற்கு உற்பத்தியுண்டா வில்லையா வென்கிற நியாயம்).



யிருத்தால் ருத்திரான்மா வென்றுஞ் சொல்லப்படு கின்றது.

இந்த அமூர்த்தபதார்த்தம் ஜன்மியமா யிருப்பதால் வியஷ்டியா யிருக்குங்காலத்தும் சமஷ்டியாயிருக்குங் காலத்தும் ஜீவவுபாதியே.

அபஞ்சீகிருதமான இப்பஞ்சபூதங்கள் போகாயதன (போகத்திற்கிட)மான சரீரமும், போக்கியமான விஷயமுமின்றிப் போகத்தை யுண்டுபண்ண அசமர்த்தங் களாம்,

ஜீவனுடைய கர்மானுசாரமாக ஸ்தூலமாம் பொருட் டுப் பஞ்சீகரணம் பண்ணப்பட்டது.

அவற்றுள் பஞ்சமகாபூதங்கள் இரண்டா

பட்டன.

அவற்றுள் ஒவ்வொன்றும் நான்காகப் பி

டது.

அந்த நான்கு பாகங்களும் தத்தம் அர்த்தாம் பாதிபாகம் விட்டு இதர பூதங்களின் பாதிபாகங்க கூட்டப்பட்டன.

இங்ஙனங்கூட்டத் தத்தம் அர்த்த பாகத்தினாலும் இதர பூதங்களின் அஷ்டாம்சத்தினாலும் பஞ்சீகரணம் பண்ணுவதினா லொன்றாகச்சேர்ந்து ஒவ்வொரு பூதங்களி லும் அதிகாம்சமிருப்பதால் ஆகாசமுதலிய வியவகாரங்க ளேற்படுகின்றன.

சாந்தோக்கியத்திலும் “ஏகவிஞ்ஞானேன ஸர்வவிஞ்ஞானப்ரதிஜ்ஞை” கூறியிருப்பதாலும்,

அசேதனமான ஆகாசவாயுக்களிரண்டும் பிரஹ்மத்தினின்று முண்டாயின வென்று அவசியம் ஒப்புக்கொள்ள வேண்டியதாகுமென்க.

அவ்விடத்தில் (சாந்தோக்யத்தில்) ஐந்துமே சேர்ந்திருப்பினும் அவற்றுள் மூன்றை அனுவதித்திருப்பதால் திரிவிர்த்கரணம் பொருந்துகின்றது.

திரிவிர்த்கரணந்தானிருக்கின்றதென்று மதபேதங் கற்பிக்கின் வாக்யபேதம் (சாந்தோக்யத்திற்கும் தைத்திரீயத்திற்கும் அர்த்தம் வெவ்வேறாக) ஏற்படும்.

“திரிவிர்த்குர்வத: உபதேசாத்” என்னும் பிரஹ்ம ஸூத்திரமோ அநுவாதமாகையால் நியாயஸித்தமான பஞ்சீகரணத்தைப் பாதிக்கமாட்டாது.

சரீராதிகளில் பிருதிவியாதிகள் சேர்ந்திருக்கின்றன வென்னும் ஞானம் (பிருதிவியாதி) ஐந்திற்கும் துல்ய (சமான)த்தான்.

“பஞ்சீகிருதபஞ்சமகா பூதங்கள் சரீரம்” என்னும் பாஷ்யகாரர் வசனமும் பிரமாணமாம்.

ஆகையால், அநாத்மாவைப் பற்றி விசாரித்தது போதும்.



(2) அந்தப்பஞ்சீகரணம் பண்ணப்பட்ட பஞ்சமகா பூதங்கள் மூர்த்தமென்னும் பேருள்ளன. அவைசேர்ந்து இந்திரியங்கட்கு இருப்பிடமாயும் போகாயதனமாயும் உள்ள ஒருகாரியத்தை யுண்டுபண்ணுகின்றன. அதுவே சரீரமென்று சொல்லப்படும்.

அதில் சத்துவப்பிரதானம் தேவசரீரம்; ரஜஸ்பிரதானம் மனுஷசரீரம்; தமப்பிரதானம் திரியக் முதலிய ஸ்தாவர பரியந்தமுள்ள சரீரம்.

அந்தச்சரீரம் பாஞ்சபௌதிகமாயிருப்பினும் அதற்குச் சித்திரரூபத்தைப் போன்று சிலவிடங்களில் (பூதங்களின்) ஏற்றத்தாழ்விருக்கலாம். அதில் விரோதமின்று.

இங்ஙனமே விஷயங்களும் பஞ்சீகரணம் பண்ணப்பட்ட ஒவ்வொரு பூதங்களினின்று முண்டாய்ச் சதுர்த்தச புவனமென்னும் பேருள்ளனவாகவும், ஊர்த்துவ மத்திய, அதோபாகமாகவுமிருந்து சத்துவ, ரஜஸ் தமோ அம்சப் பிரதானங்களாக விருக்கின்றன.

இவை பிரம்மாண்டமென்றும், விராட்டென்றும், மூர்த்தமென்றும் சொல்லப்படுகின்றன.

இதுதான் உபநிஷத்திற் கூறிய சிருஷ்டிக் கிரமமாம்.

கிரியப்பிரகரண நிருபணம் முற்றிற்று.

## லயக்கிரமம்.

இதற்கு (சிருஷ்டிக்கு) விபரீதக்கிரமம் லயக்கிரமமாம்.

### (1) தினப்பிரளயம்.

பஞ்சீகிருத பஞ்சமகாபூதமும் அவற்றின்காரியமாகிய விராட்டென்னும் பேருடைய மூர்த்தமும் ஒவ்வொருதினமும் லயமடைந்து அமூர்த்தமென்னும் அபஞ்சீகிருதமான பஞ்சமகாபூதமாகிய இரணியகர்ப்ப னென்னும் பேருள்ள தமது காரணத்தில் லயமாகின்றன.

இதற்குத் தினப்பிரளயமென்று பெயர்.

### (2) பிராகிருதப்பிரளயம்.

அமூர்த்தம் பரமேசுவரனுக்கு உபாதியாகிய அவ்வியாகிருதத்தில் லயமாம். அவ்வியாகிருதம் அநாதியாகையால் அதற்குக்காரணமின்றாம்; காரணமின்மையால் லயமுமின்றாம்.

தன்னுடைய காரணத்தில் சூக்ஷ்மரூபமாயிருப்பதே லயமென்று லயத்திற்கு லக்ஷணம் சொல்லப்படுகின்றது.

இதற்குப்பிராகிருதப் பிரளயமென்று பெயர்.

### (3) ஆத்யந்திகப்பிரளயம்.

பிரஹ்மஞானத்தினால் உண்டாகின்ற ஆத்யந்திக (முற்று) நாசமே ஆத்யந்திகப் பிரளய மென்று சொல்லப்படும்.



அதுவும் காரணக்கிரமத்தால் உண்டாகின்றது; காரணநாசத்தினாற்றான் காரியநாச முண்டாகின்றமையின்.

சிருஷ்டிப் பிரளயாதிகளெல்லாம் சொப்பனத்திலுண்டான சிருஷ்டிப்பிரளயங்களைப்போல் அபாரமார்த்திகமாயிருப்பினும் வாசனாதிடத்தினால் வியவகாரத்திற்கு யோக்கியமாக விருக்கின்றன; ஆகையினால் *86. மாயிகமாயிருப்பினும் (சசவிஷாணம்-முயற்கொம்பு போலத்) துச்சமாகமாட்டா. இவ்விஷயம் *87. ஆகரத்தில் ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. நிற்க;

ஜாக்கிர[illegible]யவஸ்தை சொல்லப்படுகின்றது.

### (1) ஜாக்கிராவஸ்தை.

இந்திரியவிருத்தியுண்டாகுங்காலத்திலிருக்கின்ற அர்த்த ஞானம் ஜாக்கிராவஸ்தையாம். அதினும் விராட்டென்னும் பேருள்ள மூர்த்தம் (ஸ்தூலப்பிரபஞ்சம்) போக்கியமாம்.

அது பிரத்தியக்ஷ முதலிய ஆறுபிரமாணங்களால் வியவகரிக்கப்படுதலால் வியாவகாரிகமாம்.

அது விசுவனென்னும் பேருள்ள ஜீவனால் புசிக்கப்படுகின்றது.

*86. மாயிகம்—மாயையாலுண்டானது.

*87. ஆகரம்—பாஷியமுதலிய கிரந்தங்கள். ஆகரம்—இரத்தின முதலியவையுண்டாகும் கனி.

அவன் தேகேந்திரியாதிகளில் பிரவேசித்திருப்பதினாலாவது வியாபித்திருப்பதினாலாவது விசுவனென்று சொல்லப்படுகின்றான்.

"விப்பிரவேசநே விச்லு வியாப்தௌ:—",

விசு என்னும் பகுதிக்குப் பிரவேசமென்பது பொருள்; விச்லு என்னும் பகுதிக்கு வியாப்தியென்பது பொருள்."

[இவ்விரு பகுதியினின்றும் விசுவனென்னும் பதம் உண்டாயினமையின் அதற்கு இருவகைப்பொருள் கூறப்பட்டது.]

இங்கு விசுவனாலே அமூர்த்தமும் அவ்யாவிருதமும் ஆதமாருதிகளாலே அநுபவிக்கப்படுகின்றன. ஆதலினும் வியாவகாரிகமியாவும் விசுவனாலேயே அறியப்படுகின்றன வென்னும் நியமத்தாலும், ஸ்தூலசரீரவியாதியையபிமானித்திருப்பதாலும், அவனுக்கு அவஸ்தாந்தரத்தை (மற்றோர் அவஸ்தையை) வியாபிக்குந்தன்மையின்று.

சுக்திரஜதாதி (கிளிஞ்சில் வெள்ளி முதலிய) ஞானங்கள் அப்பிராமாணிகமாயிருத்தலின் அவற்றின் விஷயமான சுக்திரஜதாதிகள் வியாவகாரிகபதார்த்தங்களல்ல; அங்ஙனமாயினும் அந்த ஞானங்கள் இந்திரிய வியாபாரகாலத்திருப்பதால் அவற்றிற்குச் ஜாகரணத் (ஜாக்கிராவஸ்தையிலிருக்குந்) தன்மை பொருந்துகின்றது. ஞானோற்பத்தியாதிப்பிரக்கிரியை (ஞானமுண்டாதல் முதலியவழி) யுங் கீழ் (முதலாவது சுலோகத்திறுரையிற்) கூறப்பட்டது.



## சொப்பனாவஸ்தை.

இங்ஙனம் (மேற்கூறியபடி) ஜாக்கிரபோகத்தை யுண்டாக்கும் கர்மநாச முண்டாகும் போதும், சொப்பன போகத்தையுண்டாக்கும் கர்மம் வெளிப்படும்போதும், நித்திரையென்னும் பேருள்ள தமோகுண விருத்தியினால் ஸ்தூலசரீராபிமானம் நீங்குகின்றது. அப்போது சர்வேந்திரியங்கட்கும் அதிஷ்டானதேவதாநுக்கிரஹமில்லாமையின் அவ்விந்திரியங்கள் வியாபாரமின்றி யடங்கியிருக்கின்றன. அப்போது விசுவனும் அடங்கியிருக்கிறானென்று சொல்லப்படுகின்றது. இங்ஙனமிருப்பதுதான் சொப்பனாவஸ்தை.

அச்சொப்பனாவஸ்தையிலும் அந்தக்கரணத்தின் வாசனையினா லுண்டானதாயும் இந்திரிய விருத்தியிராத காலத்திலிருக்கிறதுமான அர்த்தஞானம் சொப்பனமாம்.

சொப்பனத்தில் மனமே யானை குதிரைமுதலிய பொருள்வடிவமாகப் பரிணமிக்கின்றது.

(1) சொப்பன பதார்த்தம் அவித்தியாவிருத்தியாலு மறியப்படுகின்றதென்று சிலரும்,

(2) அவித்தையே சுக்திரஜதாதிபோல் சொப்பன பதார்த்தாகாரமாகப் பரிணமிக்கிறது. அப்பதார்த்தம் அவித்தியாவிருத்தியினாலேயே அறியப்படுகின்றதென்று சிலரும் கூறுவர். இவ்விரு பக்ஷத்துள் யாதுசிரேஷ்டமெனின், இரண்டாவது பக்ஷமே சிரேஷ்டமாம். அவித்

தையே யாண்டும் அர்த்தாத்தியாசத்திற்கும் ஞானாத்தியாசத்திற்கும் உபாதான காரணமாமென்பது நியமமாயிருப்பினும் சொப்பனாவஸ்தைக்கு மனோகத (அந்தக்கரணத்திலுள்ள) வாசனை நிமித்தகாரணமா யிருப்பதுபற்றிச் சிலவிடத்து அது மனதின் பரிணாமமென்று கூறப்பட்டது.

(ஆ) சொப்பனத்தில் மனது திருசியாகாரமாகப் பரிணமிக்கிறதென் றங்கீகரியாவிடின் அதற்குத் திருஷ்டிருத்தன்மை (அறியுந்தன்மை) சம்பவிப்பதால் ஆத்மா *88. சுயஞ்சோதியென்பது சித்தியாது.

(ச) சொப்பனத்தில் பகி (வெளி) இந்திரிய ஜன்னிய விருத்தியிராமையால் மனதிற்கு விஷயத்தைக் கிரஹிக்குந் தன்மையின்று. இந்திரியத்தின் சகாயத்தினாலேயே மனதிற்கு விஷயங்களைக் கிரஹிக்குந் தன்மை யுண்டென்பது நியமம்.

விருத்திசகித அந்தக்கரணாவச்சின்ன சைதன்னியமே பிரமாதாவென்பது நியமம்.

*88. சொப்பனகாலத்தில் சூரியன் முதல் மனோவிருத்தி பரியந்தமான சோதிகளிராமையின் ஆத்மாசுயமேவ (தானே) தனது வியவகாரத்திற்குச்சாதன வடிவசோதியாயிருக்கின்றது. மனது இந்திரியமாய்ப் பரிணமிக்கிறதென் றங்கீகரியாவிடத்து மனதிற்குச் இந்திரியத்தைப் பிரகாசிப்பிக்குந் தன்மை சம்பவிக்கின்றது. சம்பவிப்பதால் ஆத்மாவிற்குச் சோதிவடிவத்தன்மை சம்பவிக்காது. சொப்பனத்தில் மனது இந்திரியமாய்ப் பரிணமிக்கிற தென் றங்கீகரித்தால் ஆத்மாவிற்குத் திருஷ்டிருத்தன்மை சம்பவிக்குமென்பது கருத்து.



(1) ஆகையால் *89. சொப்பனத்தில் அந்தக்கரணமிருந்தாலும் பிரமாதாவில்லை.

வினா:-சொப்பனாத்தியாசத்திற்கு அதிஷ்டானம் யாது?

விடை:—மனோவச்சின்ன ஜீவசைதன்னிய மென்று சிலரும், மூலாஞ்ஞானாவச்சின்ன பிரஹ்ம சைதன்னிய மென்று சிலரும் கூறுவர்.

வினா:—இவ்விரண்டனுள் யாது சிரேஷ்டம்?

விடை:—மதபேதத்தால் இரண்டும் சிரேஷ்டமே.

அங்ஙனமன்றே, ஜாக்கிரஞானத்தினால் சொப்பனப் பிராந்தி நிவிர்த்தியாகின்றதென் றங்கீகரித்துள்ளபடியாலும், அதிஷ்டான ஞானத்தினாலேயே பிராந்தி நிவிர்த்தியாகின்ற தென்பது நியமமாயிருத்தலாலும், பிரஹ்ம சைதன்யம் அதிஷ்டானமா யிருந்தால் சம்சார காலத்தில் பிரஹ்ம ஞானமிருக்கவேண்டும்; அங்ஙனமோ இல்லை. இருப்பதாகக் கூறின் சர்வத்துவைதமும் நிவிர்த்தியாவதால் ஜாக்கிரஞானத்தினாலே சொப்பன நிவிர்த்தி உண்டாக மாட்டாது.

"ஸஹிகர்த்தா—அவன்கர்த்தா"

*89. பிரமைக்கநுகூலமான வியாபாரத்தோடு கூடினவன் பிரமாதாவாம். சொப்பனத்தில் அந்தக்கரணவிருத்தி யின்மையின் பிரமாதாவில்லையென்பது பொருள்.

என்று ஜீவனைச் சொப்பனகர்த்தாவாகச் சுருதி கூறி யிருப்பதாலும், ஆகாசாதிப் பிரபஞ்சம்போல் *90. சர்வ சாதாரணமாய்ச் சம்பவிப்பதாலும், மூலாஞ்ஞானாவச் சின்ன பிரம்ம சைதன்யம் அதிஷ்டானமாக மாட்டாது.

(ஆ) ஜீவசைதன்யம் அநாவிருதமா (மறைபடாததா) யிருப்பதால் எப்போதும் பிரகாசித்துக் கொண்டிருக்கின் றது. ஆதலால் அஃதெங்ஙன மதிஷ்டானமாகும்?

(ச) நீ கூறியதுண்மையே. அதிலும் (ஜீவசைதன் யத்தை யதிஷ்டானமாகக் கூறலினும்) சொப்பனத்தியா சத்திற்கநுகூலமாயும் வியாவகாரிக சங்காத (தேகாதி களின்) பான (விளக்க) த்திற்கு விரோதியாயு மிருக்கிற *91. அவஸ்தாஞ்ஞானத்தை யங்கீகரித்துள்ள படியால் சொப்பன தசையிலும் யான் மனிதனென்றற்றொடக்கத் துப் பிராதிதிகமான (பிரதீதியினாற் பெறப்பட்டதான) வேறுசரீரத்தின் பானம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது; ஒப்புக்கொள்ளப் பட்டிருப்பதால், அது சொப்பனத்தில் "சயனத்தி லுறங்குகின்றேன்" என்று வேறு சயனத்தின் தோற்றமுண்டாவது போலும். ஆதலால் ஜீவசைதன்னி யத்தை அதிஷ்டானமாகச் சொல்லுவதில் யாதொரு தோஷமுமின்றாம்.

*90. சர்வசாதாரணமாய்ச் சம்பவித்தல்—சொப்பன பதார்த் தம் சர்வஜீவர்களுக்கும் சாதாரணப் பிரத்தியக்ஷமாயமைதல்.

*91. சுக்திரஜதாதிப் பிராந்திக்குக் காரணமாயிருக்கும் அஞ் ஞானம் அவஸ்தாஞ்ஞானமெனப்படும்.



(இரண்டிடத்தும்) பான (தோற்ற) த்தின் *92. சாமக் கிரி (காரணம்) யின்மை துல்லியமே (சமானமே).

(ஆ) யான் மனிதனென்றற் றொடக்கத்து வியாவ காரிக சங்காத (சரீர) ஞானம் பிரமாண ஜன்னியமன்றி யிருக்கின்றமையின் எங்ஙனம் அஞ்ஞானத்தை நிவர்த் திக்கும்?

அவஸ்தாந்தரத்திற்கு வேறு விதமான பொருத்த மின்மையின் அஞ்ஞான நிவர்த்தகத் தன்மை கற்பிக்கும் பக்ஷத்தில் சுழுப்தியிலும் சொப்பன பாதக ஞானமுண்டாக வேண்டும்?

அதுவும் ஒப்புக்கொள்ளப்படுவதன்றாம். அங்ஙனும் ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் (சுழுப்திக்கும்) ஜாக்கிரத் தன்மையுண்டாகும்.

(ச) நன்று கூறினாய். அந்தக்கரணலய சகிதமான சொப்பனவஸ்தாஞ்ஞானமே சுழுப்திரூபமாகையால் சுழுப் தியில் சொப்பனத்திற்குப் பாதமின்றாம். ஜாகரணத்திலோ சொப்பனம் மித்தையாகவே தோன்றிற்றென்னும் அநு பவத்தினால் யானென்னும் ஞானம் பிரமாண அஜன்னிய மாயிருப்பினும் யதார்த்தமாயிருக்கின்றது.

*92. வியாவகாரிகத்தை விஷயமாகவுடைய பிரத்தியக்ஷ காரண இந்திரிய சம்பந்தமுதலியவை பிராதிதிகமான சொப்பன சயனத்தி லிராமைபோல் பிராதிதிகமான வேறுசரீரத் தோற்றத் திலுமில்லை.

சரீராதிஞானமும் பிரமாண ஜன்யமா யிருப்பதால் அவஸ்தாஞ்ஞானத்திற்கு விரோதியா யிருப்பது அநுபவ ஸித்தமாம்.

விசேஷ அஞ்ஞானமோ பிரமாண ஜன்னிய விருத்தி யன்றி நிவர்த்தியாகமாட்டாது.

சாக்ஷிக்கும் அவித்தியா நிவர்த்தகத்தன்மை யின்றென்பது அஞ்ஞானசாதகமான *93. தர்மிக்கிராஹகப்பிரமாணத்தினால் ஸித்தமாம். ஆகையின் இதில் யாதொரு தோஷமு மின்றாம்.

எவ்வளவு ஞானமோ அவ்வளவு அஞ்ஞான மென்றங்கீகரித்திருப்பதால் சுத்தி (கிளிஞ்சல்) ஞானத்தினால் ரஜத (வெள்ளி)ப் பிராந்தி நிவர்த்தியாய்க் காலாந்தரத்தில் இரஜதப்பிராந்தி உண்டாவதுபோல் வியாவகாரிக ...ரஞானத்தினால் (சொப்பன) அஞ்ஞானம் நிவர்த்தியா...லும் மீண்டும் சொப்பனாத்தியாசம் உண்டாவதில் ...ரொ ராபபத்தி (பொருத்தமின்மை)யு மின்றாம். ...வின் ஜீவசைதன்னியத்தை அதிஷ்டானமாகக் கூறும் ...த்தில் யாதொரு தோஷமு மின்றாம்.

*93. நானஞ்ஞானியென்பது தர்மிக்கிராஹகப்பிரமாணம். [அஞ்ஞானம்—தர்மம், நான்—தர்மி, கிராஹகம்—கிரகித்தல்; அஃதாவது அறி...] இத்தப்பிரமாணத்தினாலேயே சாக்ஷி அவித்தையை நிவர்த்தி...மாட்டா தென்பது ஸித்தமாம்.



எப்போது பிரஹ்ம ஞானத்தினாலேயே அஞ்ஞான நிவர்த்தியை யங்கீகரிக்கின்றோமோ அப்போது இரச்சுவில் கண்டப்பிராந்தி யுண்டாகுங் காலத்துச் சர்ப்பப் பிராந்தி யந்தர்க்கதமா யிருந்தல் போன்று அதிஷ்டான ஞானமில்லாமலிருக்கும் போதும் ஜாக்கிரப்பிராந்தியினாலே சொப்பனப்பிராந்தி யந்தர்க்கதமாயிருத்தல் பொருந்துகின்றபடியால் பிரஹ்மசைதன்யமே சொப்பனாத்தியாசத்திற்கு அதிஷ்டான மென்னும் பக்ஷத்திலும் யாதொரு தோஷமுமின்றாம்.

ஒவ்வொரு ஜீவனுக்கும் சொப்பனாத்தியாசம் வெவ்வேறாயிருத்தல் மனோகதவாசனையின் பேதத்தாலேயாம். மனோவச்சின்ன பிரஹ்மசைதன்யமே (சொப்பனாத்தியாசத்திற்கு) அதிஷ்டானமாம். இந்தப்பட்சத்திலும் அவஸ்தாஞ்ஞானத்தை *94. ஆவாரகமாயங்கீகரித்துள்ளபடியால் யாதோரனுபபத்தியு (பொருத்தாமையு) மின்று. ஆனை யாவாரகமாயொப்புக் யாற்றான் (அவஸ்தாஞ்ஞானத்தை யாவாரகமாயொப்புக் கொண்டபடியாற்றான்) சாஸ்திரங்களிற் சிற்சிலவிடத்து மனோவச்சின்ன பிரஹ்மசைதன்யமே அதிஷ்டானமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

(ஆ) 1. மனோவச்சின்ன சைதன்யம் (சொப்பனாத்தியாசத்திற்கு) அதிஷ்டான மென்று சொல்லும் பக்ஷத்தில்

*94. ஆவாரகம்—ஆவரணத்தைச் செய்யுங் கர்த்தா; ஆவரணம்—மறைப்பு; ஆவிருதம்—மறைக்கப்பட்டவஸ்து; ஆவரணீயம்—மறைக்கத்தக்கது.

இஃதிரஜதம் (வெள்ளி) என்று சத்திசாமானாதிகரணமாய் இரஜதப்பிரதீதி (ஞானம்) உண்டாவது போன்று நான்கஜம் (யானை) என்று அகங்கார *95. சமானாதிகரண ஞானமுண்டாதல் வேண்டுமேயன்றி இது கஜமென்னும் ஞானமுண்டாதல் கூடாது.

(2) பிரஹ்ம சைதன்யத்தை யதிஷ்டானமென்று சொல்லும் பக்ஷத்திலும் கஜமென்னும் ஞானமுண்டாதல் வேண்டுமேயன்றி இது கஜமென்னும் ஞானமுண்டாதல் கூடாது; (ஏனெனின்) சொப்பனத்திலும் இதமாகார விர்த்திக் (இதுவெனுமம்வடிவ ஞானத்திற்) கு விஷயமான பாஹியார்த்தத்தின் (ஜாக்கிரபதார்த்தத்தின்) அபாவம் சமானமாயிருக்கின்றமையின்.

(ச) i. முதலாவது பக்ஷத்தில் இரஜதப் பிராந்திக்கு அதிஷ்டானமாகிய சைதன்னியத்திற்குச் சுத்தியவச்சேதகமா (வரைந்துகொள்வதா) யிருப்பது போன்று அகங்காரம் சொப்பனப் பிராந்திக்கு அதிஷ்டானமாகிய சைதன்னியத்திற்கு அவச்சேதகமா யிராமையின் சுத்தியில் இஃது இரஜதம் என்னும் பிராந்தியுண்டாவதுபோல் நான் கஜமென்னும் பிராந்தி ஞானமுண்டாதற்குப் பிரசக்தி (சம்பந்தம்) இன்று; நான் என்னும் ஞானம் இது சுத்தியென்னும்

*95. சமானாதிகரணம்—ஒருநிலைக்களத் திருத்தல். இங்கு நான் கஜமென்புழி நானென்பதற்கும் கஜமென்பதற்கும் பொருள் ஒன்றாயிருத்தல் வேண்டுமென்பது.



ஞானம்போல் பிராந்திக்கு விரோதியா யிருத்தலானும் பிராந்திக்கு விரோதமாயா திருக்கின்ற இதுவென்னும் அம்சமே பிராந்தியிற் றோன்றுவதாக வங்கீகரிக்கத்தள்ளப்படு பாதுமென்க.

(ii.) சொப்பனத்திலே கஜாகாரம் (யானைவடிவம்) கற்பிதமாயிருத்தல் போன்று அயமாகாரமும் (இஃதென்னும் வடிவமும்) கற்பிதமே.

*96. உபயாகாரமும் *97. பாதமாயினும் அதிஷ்டான சைதன்யத்திற்குப் பாதமிராமையின், சூன்யவாதப் பிரசங்கம் உண்டாகாது. ஜாக்கிராவஸ்தையிலும் சுத்தியிதமாகார விர்த்திக்கு (இது சுத்தியென்னும் ஞானத்திற்கு) விலட்சணப் பிராதிதிகமா (தோற்றமுடையதா)ன இரஜத இதமாகார விர்த்தியே தோன்றுவதாக வங்கீகரித்துள்ள படியாலும், பிராந்தி ஞானத்தில் அந்நியஸ்தமே விஷயமாகத் தோன்றுமென்னும் நியாயமிருப்பதாலும், சுத்தியின் இதுவெனுமம்சம் தோன்றுகின்றதென்னும் பக்ஷத்திலும் இதுவெனுமம்சம் சத்தியமா யிருப்பது அத்தியாசத்திற்கு வியாபக (காரண) மாகமாட்டாது. ஆனால், அதிஷ்டான சத்தியத்துவம் (காரணமாம்). இதுரஜத-மென்னுமிடத்தில் அஞ்ஞாதமாய (அறியப்படாததாய) சுத்தியவச்சின்ன சேதனம் அதிஷ்டானமா யிருப்பதுபோல் சுவப்

*96. கஜாகாரம் அயமாகாரம் என்னுமிரண்டாகாரமும்.

*97. பாதம்-பொய்யென்னும் நிச்சயம்.

(சொப்பனத்திலும்) அஞ்ஞானமாய சாக்ஷிசைதன்யம அதிஷ்டானமாயிருக்கின்றதென்று கீழ்ச்சொல்லப்பட்டது. ஆகலால் இரண்டு பக்ஷத்திலும் யாதோரனுபபத்தியுமில்லை.

சொப்பன பதார்த்தத்தை யனுபவிக்கிறவன் தைஜஸனென்று சொல்லப்படுகிறான்; பித்தமென்னும் பேருடைய தேஜசு பிரதானமா யிருத்தலால்; அல்லது சூரியன் முதலிய ஜோதிப்பொருள்களில்லாமலும் பிரகாசிக்கின்றபடியால்.

இங்ஙனமே ஜாக்கிர சொப்பனபோகங்களால் சிரமத்தை யடைந்த ஜீவனது அவ்விரண்டவஸ்தைகளுக்கேதுவான கர்மாசமுண்டாக ஞானசக்தியுடனும் வாசனையுடனும் கூடின அந்தக்கரணம் காரணவடிவமாயிருக்கும் போது சிரமத்தை நிவர்த்திக்கும் ஸ்தானம் சுழுப்தியவஸ்தையாம்.

நானொன்றையு மறியவில்லையென்று (விழித்தபிறகு ஸ்மிருதி) ஞானமுண்டாவதால் காரணமாத்திரத்தின் ஞானம் சுழுப்தியாம்.

சுழுப்தியில் ஜாக்கிர சொப்பன *98. போக்கியபதார்த்தங்களின் ஞானமின்றியும் (1) சாக்ஷியாகாரமாகவும்

*98. போக்கியம்—அனுபவிக்கத்தக்க பதார்த்தம்; போகம்—அனுபவம்; போக்தா—அனுபவிப்பவன்.



(2) சுகாகாரமாகவும் (3) அவஸ்தாஞ்ஞானாகாரமாகவும் மூன்றவித்தியாவிருத்திகளுளவென் றொப்புக்கொள்ளப்பட்டுளது.

சுழுப்தியில் அஞ்ஞான முதலியவற்றுடன் கூடிய ஒரேவிருத்தியுண்டென்றங்கீகரித்தலின்று; *99. அகங்காரமின்மையால். (சுழுப்தியில் விசிட்டவிருத்தியுண்டென்றங்கீகரிக்கின்) சுழுப்தியுண்டாகாதுபோம்.

விருத்திரூபஞான மிராமையாலே பிரளயத்தில் அதிவியாப்தியின்று.

பிரளயத்தில் விருத்தியைக் கற்பிப்பதற்குக் காரணமின்று. இவ்விடத்தி (சுழுப்தியி) லோ உறங்கியெழுந்தவனுக்குச் சுகமாகவுறங்கினேன், நானொன்றையுமறியவில்லையென்று ஸ்மரணமுண்டாவதால் (மேற்கூறியமூன்றுவிருத்

*99. நான்கஷ்டத்தையறிகின்றேனென்னும் விசிட்ட (சம்பந்த விஷய) ஞானத்தில் அகங்காரம் காரணமாயிருக்கிறது. இவ்வகங்காரம் சுழுப்தியிலின்மையின் அங்கு விசிட்ட (கூடிய) ஞானமுண்டாகின்றதின்று.

அகங்காரமுள்ளவிடத்து ஜாக்கிர சொப்பனமா யிருப்பதால் அவ்வவஸ்தைகளில் நான்சுகி, நானஞ்ஞானி என்றற்றொடக்கத்து விசிட்டஞானமுண்டாகின்றது. சுழுப்தியில் இவ்வாறு விசிட்ட ஞானமுண்டாதற்கேதுவாய அகங்காரமின்மையின் ஆண்டு விசிட்டஞான முண்டென்பது ஒவ்வாது; ஆகவே, சுழுப்தியில் சாக்ஷியாகாரமுதலிய மூன்றவித்தியாவிருத்திகள் தனித்தனியே அவசியமா யங்கீகரிக்கத்தக்கனவாம்.

திகள் கற்பிக்கவேண்டும்). சுழுப்தியில் சுகாதிகளின் அநுபவத்தை யொப்புக்கொள்ளாத பக்ஷத்தில் (உறங்கி விழித்தவனுக்கு) ஸ்மரணம் வராமற் போய்விடும்.

மேலும், அந்தக்கரண ஸம்பந்தத்துடன் கூடியகாலத்தி லிருக்கின்ற அநுபவஜந்நிய மன்றியிருப்பதால், அந்தந் தத்தேசகாலங்கள் தோன்றுகிறதும் ஸ்மரணத்திற்கு அநுபபத்தி (பொருந்தாமை) யில்லை. ஸ்மரணத்தில் அந்தந்த தேசகாலங்கள் தோன்றவேண்டுமென்னும் நியமமின்மையாலும், ஜாக்ரதசையில் தூங்கினேனென்னும் அநுபவம் பொருந்தாதாகையாலும், *100. இலிங்கம் (ஏது) இராமையால் ஆச்ரயாஸித்தி தோஷம் வருகின்றமையாலும், அநுமானம் ஸம்பவிக்கமாட்டாது.

---

*100. சொப்பன ஜாக்கிரங்களின் மத்தியகாலம், சுழுப்தியுடன்கூடியது;

(1) ஞான சாமானிய அபாவமிருப்பதால், அல்லது (2) ஜன்னிய ஞானமின்மையால் என்று தார்க்கிகர் கூறும் அநுமானம் இங்குச் சம்பவிக்கமாட்டாது.

முதலாவது ஏதுவாகமாட்டாது; ஞானசாமானிய அபாவம் சித்திக்காமையாலும் பக்ஷத்தில் இவ்வேதுவை யறிய முடியாமையாலும். ஆகையால் இரண்டாவதும் ஏதுவாகமாட்டாது; ஏனெனின், சுழுப்தியில் மூன்று விருத்தியிருப்பதால். ஆகையால் இலிங்கம் (ஏது) இல்லை. அந்தக்காலமும் ஸ்மரணத்திற்கு விஷயமாயிராமையால் பக்ஷம் சித்திக்கவில்லை. அந்தக்காலமென்றது ஜாக்கிர சொப்பனங்களின் மத்தியகாலத்தை.



அஹங்காரமோ உறங்கியிருந்த சமயத்திலேயே அநுபவிக்கப்படுகின்றது; சுழுப்தியில் அடங்கி யிருப்பதால் அதன் அநுபவமின்று. ஆகையினால் அதன் ஸ்மரணம் பொருந்தாது.

முகப் பிரதிபிம்பத்திற்கு ஆச்ரயமான தர்ப்பணத்தில் செவ்வரத்தம் புஷ்பத்தின் ஸாந்நித்திய (சிகப்புநிற) அத்தியாசத்தால் முகம் இரக்தமாயிருக்கின்றதென்னும் ஞானம் வருவதுபோல் சாக்ஷிசைதந்நியம் அகங்காரத்திற்கு ஆச்ரயமாயிருப்பதால் ஸ்மரணத்திற்கு ஆச்ரயமாயிருக்கின்றது. ஆகையால் நான் உறங்கினேனென்றுண்டாகின்றஞானம் சமாநாதிகரணப் பிரதீதியேதவிர நான் சுகியென்பதுபோல் அகங்காரம் ஸ்மரணத்திற்கு ஆச்ரயமான பிரதீதியன்று;

ஸ்மிருதி, ஸம்சயம், விபர்யயம் ஆகிய இவை சாக்ஷிசைதந்நியத்தை ஆச்ரயித்துக் கொண்டிருக்கின்றனவென்னும் நியமத்தாலும், அஹங்காரம் பிரமாண ஜந்நியஞானத்திற்கு ஆச்ரயமாயிருக்கின்றதென்னும் நியமத்தாலும், பிரமைகளெல்லாம் அஹங்காரத்தின் கார்யமாயிருப்பதாலும், அப்பிரமைகளெல்லாம் அவித்தியாஜந்நிய மாகையாலுமென்க. ஆகையினாற்றான் அநாப்த வாக்கியாதிகளாலுண்டான பரோக்ஷப் பிராந்தியும் அவித்தியா விருத்தியேயென்பது வேதாந்திகளின் கொள்கையாம்.

அவ்விடத்தி (சுழுப்தியி)ல் அந்தக்கரண விருத்தியை யுண்டுபண்ணக்கூடிய சாமக்கிரி சம்பவித்தாலும் பிர

மாத்மவாபாவ (பிரமாத்மன்மையினபாவ) மாகியபிரதிபக்தகமிருப்பதால் அந்தக்கரணத்திற்குச் சாமர்த்தியமின்றும்.

*101. நாமாதிகளில் பிரஹ்மாத்திபாசமோ இச்சாதீனமாகையால் காமாதிகள்போல் பிராந்திப்பிரமை இவற்றிற்கு வேறான மனோவிர்த்தியே. ஆகையினாற்றான் நாமாதிகளில் பிரஹ்மபுத்தியுண்டாவது சாஸ்திரஜன்னியமாதலால் மானசிகமான கிரியையேயன்றி ஞானமன்றென்று (சங்கரபாஷியத்தில்) சொல்லப்பட்டிருக்கின்றது.

இதனால் தர்க்கமும் மனோவிர்த்தி யென்பது பெறப்பட்டது.

வியாப்பியாரோபத்தினால் வியாபகாரோபமாகிய தர்க்கம் இச்சாதீனமாயிருப்பதால் பிராந்திப் பிரமை இவற்றினும் வேறாயிருக்கின்றது.

தர்க்கமானது பிராந்திப்பிரமைகளினும் வேறாயிருப்பதினாற்றான் மனன நிதித்தியாசனத்தோடு கூடிய சிரவணமென்னும் பேருள்ள வேதாந்த வாக்கியவிசாரத்தில், *102. "ச்ரோதவ்ய: மந்தவ்ய: நிதித்யாஸிதவ்ய:" என்றற்

---

*101. நாமாதிகளில் - ருக்வேதாதி நாமங்களில். ருக்காதி நாமங்களைப் பிரஹ்மமாக உபாசிக்க வேண்டுமென்னும் விதியிருப்பதிங் கறியவேண்டும்.

*102. (ஆத்மா) சிரவணம் பண்ணத்தக்கது, மனனம் பண்ணத்தக்கது, நிதித்தியாசனம் பண்ணத்தக்கதென்பதிதன் பொருள்.



றொடக்கத்து விதிகளும் பொருந்துகின்றன.

அந்தச் சிரவணம் நால்வகைத்தாய அன்வய வியதிரேகமுதலிய தர்க்க வடிவமாயிருக்கின்றது.

*103. (1) திருக்திரிசியான்வயவியதிரேகம்.

---

*103. (1) திருக்திரிசியான்வயவியதிரேகம்.
திருக்குவின்கண் திரிசியத்திற்குத் தாதாத்மியம்—அன்வயம்.
அதன் வியதிரேகம்—அபாவம்.
சொப்பிரகாசமான திருக்குவின் தாதாத்மியத்தினாலேறப்பட்ட ஜடம் சத்தியமாயின், அப்போது அது சொப்பிரகாசதிருக்குவைக்காட்டிலும் வேறாக மாட்டாதென்பது தர்க்கம்.

(2) சாக்ஷிசாக்ஷியான்வயவியதிரேகம்.
சாக்ஷியின்கண் சாக்ஷியத்தின் தாதாத்மியம்—அன்வயம்.
அதன் வியதிரேகம்—அபாவம்.
நிர்விகாரமான சாக்ஷியின் தாதாத்மியத்தினால் சித்தமான சாக்ஷியமாகிய ஜடம் சத்தியமாயின், அப்போது அது விகாரமுடையதாகாதென்பது தர்க்கம்.

(3) ஆகமாபாயி (வருதலும் போதலுமுடைய உலகத்தின்) அவதி (எல்லை) அன்வயவியதிரேகம்.
ஆகமாபாயிகளின் அவதி—ஆத்மா.
அவற்றின் தாதாத்மியம்—அன்வயம்.
அவற்றின் வியதிரேகம்—அபாவம்.
உற்பத்திவிநாசரஹித ஆத்மதாதாத்மியத்தினால் சித்தமான திரிசியம் சத்தியமாயின், அப்போது அஃது உற்பத்திவிநாசரஹிதமாகவேண்டுமென்பது தருக்கம்.

(2) சாக்ஷி சாக்ஷ்யான்வயவ்யதிரேகம்.
(3) ஆகமாபாயியவதி அன்வயவ்யதிரேகம்.
(4) துக்கிப்பரமப்பிரேமாஸ்பத அன்வயவ்யதிரேகம் என்று

(i) சமன்வயாத்தியாயம்
(ii) அவிரோதாத்தியாயம்
(iii) சாதனாத்தியாயம்
(iv) பலாத்தியாயம்

நான்கு அத்தியாயங்களுள.

(முதலிய வென்பதனால்) அநுவிர்த்த வியாவிர்த்த அன்வய வியதிரேகமுங் கொள்க.

---

(4) துக்கிப் பரமப்பிரேமாஸ்பத அன்வயவியதிரேகம்.

துக்கியா (துக்கத்துடன் கூடியதா)ன அகங்காராதிகளுக்குப் பரமப்பிரீதிக்காஸ்பத (இட)மான ஆத்மாவின் தாதாத்மியம்—அன்வயம்.

அதன் வியதிரேகம்—அபாவம்.

பரம (மிருந்த) பிரீதிக்கு ஆசிரயமான ஆத்மாவின் தாதாத்மியத்தினால் தோன்றுகிற அகங்காராதிகள் சத்தியமாயின், அப்போது அவை துக்கசாதனமாக மாட்டாவென்பது தருக்கம்.

(5) அநுவிர்த்த வியாவிர்த்த அன்வயவியதிரேகம்.

அநுவிர்த்தம்—(சத்ரூபத்தினால் யாவற்றினுந் தொடர்ந்திருப்பது) ஆத்மா.

வியாவிர்த்தம்—வேறுபட்டிருப்பதான இதியம்.

அவ்வாத்மாவின் தாதாத்மியம்—அன்வயம்.

அதன் வியதிரேகம்—அபாவம்.



நான்கு அத்தியாயமுள்ள வேதாந்த மீமாம்சை (ஆராய்ச்சி)யினாற் கூறப்பட்ட வேதாந்தத்திற்கு அநுகூலமான தர்க்கத்துடன் இதனையும் உபலட்சணத்தால் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று பெரியோர்கள் சொல்லுகின்றனர்.

இதுபற்றி விஸ்தாரமா யறியவேண்டின் வேதாந்த கல்பலதிகையில் அறிந்து கொள்க.

இவ்வாறு சுழுப்தியவஸ்தையில் ஆனந்தாநுபவமிருக்கின்றது. அதனை அநுபவிக்கின்றவன் சுழுப்தியபிமானியான பிராஜ்ஞனென்று சொல்லப்படுகின்றான்.

*104. விசேஷமா யறியாமையினாலும், விசேஷன்

---

அநுவிர்த்தமான ஆத்மதாதாத்மியத்தினாற் சித்தமான வியாவிர்த்தமான பிரபஞ்சம் சத்தியமாயின், அப்போது அது வியாவிர்த்தமாக மாட்டாதென்பது தருக்கம்.

வியாவிர்த்தமான எதனிடத்தில் எது தாதாத்மியத்துடன் சேர்ந்திருக்கின்றதோ அஃது அதனிடத்தில் கற்பிதமாயிருக்கிறது; ரஜ்ஜுவினிடத்தில் மாலை, சர்ப்பம், தண்டமுதலியவை கற்பிதமாயிருப்பதுபோல; அல்லது ஜாதியில் வியக்திபோல.

*104. சுழுப்தியில் மூலாஞ்ஞானம் அவஸ்தாஞ்ஞானமென்னுமிரண்டு மிருக்கின்றன. மிகவும் அஞ்ஞானியா யிருத்தலால் பிராக்ஞனென்று சொல்லப்படுகிறான். அல்லது சுழுப்தியில் துக்கசாதனமான விஷயங்களின்மையின் அவ்விஷயமற்றிருக்கிற ஞானம் மிகவும் உத்கிருஷ்டமாயிருக்கின்றது. அந்த ஞானத்தோடு கூடினவன் பிரக்ஞன். அவனே பிராக்ஞன். ஞன்-ஞானத்தோடு கூடினவன், பிராக்ஞன்-உத்கிருஷ்ட (மேலான) ஞானத்தோடு கூடினவன்,

மாகிய பதார்த்தங்களில்லாமையால் சுத்தஞான மிருப்பதாலும், பிராஞ்ஞனென்று சொல்லப்படுகின்றான்.

அப்போது அந்தக்கரணத்திற்கு லயமிருந்தாலும் ஜீவன் அதன் (அந்தக்கரணத்தின்) சம்ஸ்காரத்துடன் கூடியிருப்பதால் ஜீவபாவம் கெடமாட்டாது.

சர்வஞ்ஞத்தன்மையும் கெடமாட்டாது. ஆனால் (சுழுப்தியில்) ஈசுவரனோடு ஜீவன் அபேதமென்று பிரதிபாதித்தது ஜீவர்களுக்குச் சரீர முதலியவற்றில் அபிமானமின்மையின் ஔபசாரிகமாம். (ஸ்மிருதிக்கு) அதன் (அந்தக்கரணத்தின்) சம்ஸ்காரம் நிமித்தகாரணமாகையால் சாக்ஷியை ஆசிரயித்துக் கொண்டிருக்கிற காரியத்தின் (ஸ்மிருதியின்) உபாதான கோடியில் (பக்ஷத்தில்) பிரவேசமின்மையின் அந்தச் சம்ஸ்காரத்திற்குப் பேதமிருப்பினும் சாக்ஷி பேதமில்லை.

ஜாகரணத்திலோ அந்தக்கரணத்திற்குப் பிரமாதாவை யாசிரயித்துக் கொண்டிருக்கிற காரியத்தின் (ஸ்மிருதியின்) *105. உபாதானகோடியில் பிரவேசமிருப்பதால், அந்தக் கரண பேதத்தால் பிரமாதாவிற்கும் பேதமே.

*106. அதிக வுபாதியுடன் கூடிய சாக்ஷியே பிரமாதாவாகையால் ஸ்மரணத்திற்கு அநுபபத்தியில்லை.

*105. உபாதானமென்றது சாபாச அந்தக்கரணத்தை.

*106. அவித்தியோபாதியையன்றி அந்தக்கரணமும் உபாதியாயிருத்தல் அதிகவுபாதி.



மாதிருமானபிரபேதேபி பிரதிதேஹம்ப்ரமித்தியதே,
ஸாக்ஷிபாவிஹியார்த்தவத் யஸ்மாத் ஸைக்யமேதிபுச்சிய
தேதத: வியபிசாரோபிதோயத்வத் பிரமாத்தி
ராதேஃ, ஸ்வஸாக்ஷிகஃ ஸர்வமாத்ராத்தியபா
வார்த்த ஸாக்ஷித்வாத்கதாத்மநஃ.

(இ-ள்.) தேகந்தோறும் மாதா (பிரமாதா) மானம்(பிரமாணம்) முதலியவைகட்குப்பேதமிருப்பினும், சாக்ஷிக்குப்பேதமில்லை; ஆகாசாதிப்பிரபஞ்சம் போலும். ஆகையினால் சுருதியில் யாவற்றிலும் ஆத்மாவொன்றாயிருக்கிறதென்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆத்ம *107. சாக்ஷிகமானபேதம் ஒன்றற்கொன்று இருப்பதுபோல் சர்வப்பிரமாதா முதலிய அபாவங்கட்குஞ் சாக்ஷியாயிருப்பதால் ஆத்மாவிற்கு வியபிசாரமின்றாம்.

என்றுவார்த்திககாரரால் வியவகாரதசையிலுஞ்சாக்ஷி பேதத்தை நிராகரித்திருப்பதால் சுழுப்தியில் சாக்ஷிபேதத்தைச் சிலர் கற்பிப்பது மோகத்தினாலாம்.

(ஆ) ஒருவருக்கொருசமயத்தில் சுகமாய்த்தூங்கினேனென்று ஸ்மரணமிருப்பதால் சுழுப்தியில் சுகாநுபவமிருக்கின்றது.

(ச) (1) சுழுப்திகாலத்தில் துக்காபக்கிரியின்மையின், துக்கமின்று; அதனின் நீ சொன்னது கூடாது.

*107. சாக்ஷிகம் — சாக்ஷிக்கு விஷயமாயிருப்பது.

(2) சுகமென்பது ஆத்மசொரூபமாகையால் நித்தியமா யிருக்கின்றது.

சயன முதலியவை நன்றாயிராமையால் துக்கமாய்த் தூங்கினேனென்பது உபசாரமாம். ஆகையால் துக்கமாய்த் தூங்கினேனென்னும் பிரத்தியயம் (ஸ்மரணம்) பொருந்தும்.

(3) அல்லது அவஸ்தாத்திரயத்தை பொய்யாக்கொள்ளும் பக்ஷத்தில் சுழுப்தியிலும் துக்கம் பொருந்தும்.

(A). (1.) அங்ஙனமன்றே, பிரமா (யதார்த்த) ஞானம் *108. ஜாக்கிர ஜாக்கிரமாம்.

(2.) சுக்திரஜதாதிப்பிராந்தி ஜாக்கிரசொப்பனமாம்.

(3.) சிரமமுதலியவற்றால் ஸ்தப்தீபாவம் (ஒன்றுந் தோன்றாமலிருப்பது) ஜாக்கிரசுழுப்தியாம்.

---

*108. ஜாக்கிரம்:—

1. வர்த்தமான ஜாக்கிரத்திலுண்டாகுஞ் சொரூப சாக்ஷாத்காரம் ஜாக்கிர ஜாக்கிரம்.

2. ஜாக்கிரத்திலுண்டாகுஞ் சென்ற அல்லது இனிவரும் விஷயங்களைச் சிந்தித்தலாகிய மனோராஜ்ஜியம் ஜாக்கிரசொப்பனம்.

3. ஜாக்கிரத்திற் பிராந்தியிறுதியிலுண்டாகும் ஜடசொரூபமாகிய விருத்தி ஜாக்கிர சுழுப்தி.



(B). (1.) இவ்வாறு சொப்பனத்தில் மந்திராதிப்பிராப்தி *109. சொப்பன ஜாக்கிரமாம்.

(2.) சொப்பனத்திலும், நான்சொப்பனங்கண்டேனென்னும் ஞானமுண்டாவது சொப்பன சொப்பனமாம். இதனை ஜாக்கிரத்திற் சொல்லல்முடியாது.

(3.) சொப்பனாவஸ்தையில் ஏதாவதொன் [illegible] ளியுமா யநுபவிக்கப்படுமிடத்து அது சொப்பன சுழுப்தியாம்.

(C). (1.) சுழுப்தியவஸ்தையிலும் சுகாகாரமான சாத்விகவிர்த்தி எதுவோ அது *110. சுழுப்தி ஜாக்கிரமாம்.

---

*109. சொப்பனம்:—

1. யதார்த்தமாகிய பொருளைச் சொப்பனத்திற் காணுதல் சொப்பன ஜாக்கிரம்.

2. சொப்பனத்தில் ரஜ்ஜுசர்ப்பமுதலிய பிராந்திகளைக் காணுதல் சொப்பன சொப்பனம்.

3. கண்ட சொப்பனத்தின் மறதி சொப்பன சுழுப்தி.

*110. சுழுப்தி:—

1. சாத்விகவிருத்தி பூர்வகமாகிய சுக சுழுப்தி சுழுப்தி ஜாக்கிரம்.

2. ராஜஸவிருத்தி பூர்வகமாகிய துக்க சுழுப்தி சுழுப்தி சொப்பனம்.

அதன் பிறகு சுகமாகத் தூங்கினேனென்று பராமரிசம் (ஸ்மிருதி) உண்டாகின்றது.

(2.) அந்தச் சுழுப்தியிலேயே ராஜசமான விருத்தி யெதுவோ அது சுழுப்தி சொப்பனமாம். பிறகு அச்சுழுப்தி தூங்கினேனென்று ஸ்மரணம் பொருந்துகின்றது.

(3.) சுழுப்தியில் ஏது தாமசவிருத்தியோ அது சுழுப்தி சுழுப்தியாம். பிறகு நான் மிகவும் மூடனாகத் தூங்கினேனென்று பராமரிசமுண்டாகின்றது.

இவ்வுள்ளவாறு வசிட்டராமாயணத்திலும் வார்த்திகாதீத முதலிய சாஸ்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

1. அத்யாத்மம்-விசுவன்-ஜாக்கிரம்.
   அதிபூதம்-விராட்-சத்துவகுணம்.
   அதிதெய்வம்-விஷ்ணு-பாலனம்.

2. அத்யாத்மம்-தைசஸன்-சொப்பனம்.
   அதிபூதம்-இரண்ணியகர்ப்பன்-இரஜோகுணம்.
   அதிதெய்வம்-பிரஹ்மா-சிருஷ்டி.

3. அத்யாத்மம்-பிராக்ஞன்-சுழுப்தி.
   அதிபூதம்-அவ்வியாகிர்தம்-தமோகுணம்.
   அதிதெய்வம்-ருத்திரன்-பிரளயம்.

---

3. தாமசவிருத்தி பூர்வகமாகிய காட (ஆழ்ந்த) சுழுப்தி சுழுப்தி.



இவ்வாறு அத்யாத்மம், அதிபூதம், அதிதெய்வ மூன்று மொன்றாயிருத்தலால், 'பிரணவத்தின் மூன்று *111. அவயவங்களுடன்' கூடினவர்களாயும் உபாதியுடன்கூடினவர்களாயுமிருக்கும் இவர்களை' *112. ஏகமாக உபாசிக்கின்,

---

111. [illegible] அவயவங்கள் - அகார, உகார, மகாரங்கள்.

112. "பிரணவத்தை [illegible]ப்ரஹ்மவடிவப்பிரஹ்மமாகச் சிந்தித்தல்." பிரணவவுபாசனையாம். பிரணவாக[illegible] ப்ரஹ்ம சொரூபம். அந்தப் பிரணவ சொரூபப் பிரஹ்மம் நானென்[illegible] தன் புத்தி விருத்தியை நிறுத்துவது தான் இங்குச் சிந்தித்தலென்பது. பிரணவமானது அகாரம், உகாரம், மகாரம், அமாத்திரையென நான்கு மாத்திரைகளுடையதாம். இம்மாத்திரைகள் பாதங்களென்றுஞ் சொல்லப்படும். இங்ஙனமேபிரஹ்மத்திற்கும் ஆத்மாவிற்கும்நான்கு பாதங்களுண்டு. விராட்டு, இரணியகருப்பன், ஈசுவரன், தத்பத லக்ஷியமான ஈசுவரசாக்ஷி இந்நான்கும் பிரஹ்மத்தின் பாதங்களாம். விசுவன், தைசதன், பிராக்ஞன், துவம்பதலக்ஷியமான ஜீவசாக்ஷி இந்நான்கும் ஆத்மாவின் பாதங்களாம். பிரணவத்தை உபாசிக்கு மிடத்து (1) பிரணவத்தின் முதற்பாதமாகிய அகாரத்தையும், ஆத்மாவின் முதற்பாதமாகிய விசுவனையும், பிரஹ்மத்தின் முதற்பாதமாகிய விராட்டையும், (2) பிரணவத்தின் இரண்டாம்பாதமாகிய உகாரத்தையும், ஆத்மாவின் இரண்டாம் பாதமாகிய தைசதனையும், பிரஹ்மத்தின் இரண்டாம்பாதமாகிய இரண்ணியகருப்பனையும், (3) பிரணவத்தின் மூன்றாம்பாதமாகிய மகாரத்தையும், ஆத்மாவின் மூன்றாம்பாதமாகிய பிராக்ஞனையும், பிரஹ்மத்தின் மூன்றாம்பாதமாகிய ஈசுவரனையும், (4) பிரணவத்தின் நான்காம்பாதமாகிய அமாத்திரையையும், ஆத்மாவின்நான்காம்பாதமாகிய துவம்பதலக்ஷியமான

ஹிரண்யகர்ப்பலோகப்பிராப்தியும் அதற்கான சுத்தி வாயிலாகக் கிரமமுக்தியு முண்டாகின்றன.

இந்த உபாதிகளை நிராகரணஞ் செய்வதானுலன்றோ ருந் சாக்ஷிசைதன்யமாத்திர ஞானத்தினுல் சாக்ஷாத் தாகவே மோக்ஷமுண்டாகின்றது.

ஆகையால், அவஸ்தாத்திரய சம்பந்த (கூடிய) விசுவ, தைசத, பிராக்ஞர்களாகிய மூவரும் அநித்திய சொரூப ராகையால் திரிசியமாகவிருக்கின்றனர்; திரிசியமாகையால் மித்தையாம்; ஆனதினுல், அநுபகித (உபாதியற்றவ)னுயும், கேவலனுயும், துரியனென்னும் பேருள்ளவனுயு முள்ள சுத்தசாக்ஷியே நானுயிருக்கிறேன்.

இவ்வாறு வியவகாரத்தில் சர்வ வியவஸ்தையும் பொருந்துமாகையால், பரமார்த்தத்தில் யாதொரு வியவஸ்

---

ஜீவசாக்ஷியையும், பிரஹ்மத்தின் நான்காம்பாதமாகிய தத்பத லக்ஷியமான ஈசுவரசாக்ஷியையும், அபேதமாகச் சிந்தித்தல் வேண்டும். இப்படிச் சிந்தனைசெய்கிறவன் சித்த சாந்தியை யடைவதேயன்றி, மறுமையிற் பிரமலோகத்தையடைந்து பிரமனுக்குச் சமானமாகப் போகத்தை யனுபவிப்பன். பிரமலோகத்திற் றமோகுண ரஜோ குணங்கள் சிறிதுமின்றிச் சத்துவகுணமே பிரதானமாயிருப்பதால் அந்த லோகத்திற்சென்ற பிரணவவுபாசகன் குருபதேசஞ் சிரவணங்களின்றியே தத்துவஞானமுதிக்கப்பெற்றுப் பிரமதேவனோடு மோக்ஷமுமடைவன்." இவ்வாறு மோட்சசாதனவிளக்கங் கூறு கின்றது.



ஸ்தையுமிராமையினுல், யாதோர் அநுபபத்தியுமின்றும். இவ் விஷயம் வேதாந்த கல்பலதையில் நம்மால் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருப்பதால் இங்கு விரிவஞ்சிச் சுருக்கிக் கூறினம்.

---

## அவதாரிகை.

ஜாக்கிர, சொப்பன, சுஷுப்தியென்னு மூன்றவஸ்தைக ளோடும் கூடிய அவ்வபிமானிகளான மூவரும் மித்தி யாகையால் அவர்களின் சாக்ஷியும் மித்தையாகவேண்டும்; விசேஷமிராமையினென்றுசங்கித்து விசேஷம் (பேதம்) கூறுவதால் சாக்ஷி சத்தியமென்று சொல்லுகின்றார்.

*113. அபிவியாபகத்வாத் ஹிதத்வப்ரயோகாத்
ஸ்வதஸ்ஸித்தபாவாதநந்யாசிரயத்வாத்
ஜகத்துச்சமேதத்ஸமஸ்தம் ததந்யத்
ததேகோவசிஷ்ட: சிவ: கேவலோஹம். (9)

---

*113. வியாபகத்வாத் அபி—வியாபகமா யிருப்பதாலும்,
ஹிதத்வப்ரயோகாத்—இதமாய புருஷார்த்தத்தை யுபதேசித் திருப்பதாலும்,
ஸ்வதஸ்ஸித்தபாவாத்—சுவப்பிரகாச ஞானரூபமா யிருப்ப தாலும்,
அநந்யாசிரயத்வாத்—வேறு ஆசிரயமின்மையாலும்,
ததந்யத்—அந்தப்பிரஹ்மத்திலும் வேறான,
சமஸ்தம்—சமஸ்தமான,

'நதிர்ஷ்டே: திருஷ்டாரம் பஶ்யே:' என்று சாக்ஷியைப் பிரகிருதமாக வைத்துக்கொண்டு "அதோன்யதார்த்தம்—இந்தச் சாக்ஷியைவிட மற்றவையெல்லாம் நாசமுள்ளவை" என்று சுருதியிற் கூறியிருப்பதால் சாக்ஷியைவிட மற்ற சாக்ஷியங்களான ஜகத்தெல்லாம் துச்சம்; சாக்ஷியோ அங்ஙனமன்றும். (ஏனெனின்) *114. பாதத்திற்கு அவதியாயிருப்பதாலும், பிராந்திக்கு அதிஷ்டானமாயிருப்பதால் அந்நியதமா யிருப்பதாலும், அதன் பாதத்தைத் தெரிகின்ற தெறவாகியதாலும் என்றுந் தொடக்கத்து அநுமானாதிகள் 'அபி' சப்தத்தின் அர்த்தமாம்.

"அதயத் அல்பம் தத்மர்த்தியம்—சிறியதாயது நாசமுடையது"

---

ஏதத்—இந்த,
ஜகத்—உலகம்,
துச்சம்—மித்தை,
தத்—ஆகையால்,
ஏக:—அத்விதீயனும்,
அவஶிஷ்ட:—சர்வதுவைதத்திற்கும் பாதமிருப்பினும் பாதமற்றவனும்,
கேவல:—நிர்த்தர்மகனும்,
ஶிவ:—பரமாநந்தபோத ரூபனும்,
அஹம்—நான் (இருக்கிறேன்).

*114. பாதத்திற்கு அவதியா யிருப்பதாலும்—சேதனப் பிரபஞ்சத்தின் பாதத்திற்கு அவதி (எல்லை) யாயிருப்பதாலும்.



என்னும் சுருதியால் பரிச்சின்னத் தன்மையும் துச்சத் தன்மையும், சமவியாப்தமா யிருப்பதால், *115. பரிச்சின்னத்துவம் நிவிர்த்தியாகும்போது துச்சத்துவம் நிவிர்த்தியாகின்றதென்று 'வியாபகத்வாத்' என்னும் பதத்தாற் சொல்லுகின்றார்.

"சர்வம் கல்விதம் ப்ரஹ்ம—இவையாவும் பிரஹ்மமே" என்று (பிரஹ்மத்திற்குச்) சர்வாத்மத்தன்மை யுபதேசித்திருப்பதால் அது தேசகால அபரிச்சின்னமா யிருக்கின்றது.

ஆகாசாதிகளோ, தேச கால பரிச்சின்னமா யிருப்பினும் *116. ஆபேட்சிகமகத்துவமாயிருப்பதால் வியாபகத்துவம் ஔபசாரிகம்.

---

*115. யாண்டுப் பிருதிவி ஆண்டுக் கந்தம், யாண்டுக் கந்தம் ஆண்டுப் பிருதிவி யென்னும் வியாப்திபோல் பரிச்சின்னத் தன்மையுந் துச்சத்தன்மையும் சமவியாப்தியுடையன.

*116. மகத்துவம் (வியாபகத்தன்மை) - ஆபேட்சிகம், நிராபேட்சிகம் என இருவகைத்து.

1. எந்த வஸ்து எந்தப்பதார்த்தத்தை யபேட்சித்து மகத்துவமாகவிருக்கின்றதோ, அதையபேட்சித்து மகத்துவமாக வில்லையோ அஃது ஆபேட்சிக மகத்துவமுடையதாம். எங்ஙனம்? பிருதிவியாதிகளை அபேட்சித்து மாயை மகத்துவமா யிருக்கின்றது; சேதனத்தை அபேட்சித்து அங்ஙனமில்லை, ஆகையால் மாயை ஆபேட்சிக மகத்துவ முடையதாம்.

(ஆ) ஆத்மா சர்வவியாபகமாயிருப்பதால் நித்தியமாயிருக்கின்றது.

நித்தியமாயிருப்பதாலும் பாவரூபமாகையாலும் துக்கநிவிர்த்தி (அபாவ) ரூபமன்றாம். சுகமும் அநித்தியமாகையால் அதற்கு நித்தியமான ஆத்மசொரூபத்துடன் பொருந்தாது; ஆகையால் சுகரூபமுமன்றாம். ஆத்மசொரூபமான மோக்ஷம் புருஷார்த்தமேயன்று.

(ச) இதற்குச் சமாதானம் 'ஹிதத்வபிரயோகாத்' என்னும் பதத்தால் கூறுகின்றார். ஹிதத்வம்-புருஷார்த்தம்.

(1) "ததேதத்ப்ரேய: புத்ராத்ப்ரேயோ வித்தாத் ப்ரேயோ அன்யஸ்மாத்ஸர்வஸ்மாத் அந்தரதரம்யதயமாத்மா—தனத்தைவிடப் புத்திரன்பிரியம், புத்திரனைவிடச் சரீரம்பிரியம் யாவற்றினும் அந்தரமான ஆத்மா பிரியம்."

(2) "யோவைபூமாதத்ஸுகம்—எது பூமாவோ (வியாபகமோ) அது சுகம்."

---

ii. எந்தவஸ்து எல்லாவற்றையும் அபேக்ஷித்து மகத்துவமாகவிருக்கின்றதோ அது நிராபேக்ஷிக மகத்துவமுடையதாம். எங்ஙனம்? பிருதிவியாதி யாவற்றையும் அபேக்ஷித்துச் சேதனம் (பிரஹ்மம்) மகத்தாயிருக்கிறது. ஆகையால் அது நிராபேக்ஷிக மகத்துவமுடையதாம்.

சேதனத்திற்குச் சமானமாகவாவது அதிகமாகவாவது வேறு எதுவும் மகத்துவமாக இன்மையின், அதுவே எல்லாவற்றினும் மகத்துவமுடையதாமென்பதிங் கறியத்தக்கது.



(3) "ஏஷ அஸ்ய பரமானந்த:—இதுவே பரமானந்தம்."

(4) "விஞ்ஞானமானந்தம் பிரஹ்ம—இந்தப் பிரஹ்மம் விஞ்ஞானமாயும் ஆனந்தமாயுமிருக்கின்றது."

என்றற்றொடக்கத்துச் சுருதிகளால் அந்த ஆத்மா பரமானந்த ரூபமென்று சொல்லப்பட்டிருப்பதால் நீ கூறிய ஆக்ஷேபம் பொருந்தாது.

அந்தச்சுகம் நித்தியமாயிருந்தாலும் உலகத்தில் கர்மத்தினாலுண்டான அந்தந்த அந்தக்கரண விருத்தியிற் பிரகாசித்திருப்பதால் அதற்கு உற்பத்தி விநாசம் ஔபசாரிகமாம். அது (சுகம்) அஞ்ஞானத்தினால் மறைபட்டிருப்பதால் அடையாதது அடைந்ததுபோல் ஞானமாத்திரத்தினால் அவித்தியா நிவிர்த்தியுண்டாக அஃது அடைந்தது போலாகின்றது. ஆனதினால் அதனை உத்தேசித்து முமுக்ஷுவுக்குப் பிரவிர்த்தி பொருந்தும்.

அத்தியஸ்தமாயும் துக்கரூபமாயுமிருக்கின்ற இப்பிரபஞ்சத்திற்கு (ஆத்மா) அதிஷ்டானமாயிருப்பதால் அதுவே அபாவரூபமாயிருக்கின்றது. அங்ஙனம் துக்காபாவரூபமாயிருப்பதாலும் அதுவே புருஷார்த்தமாம்.

(இ) மோக்ஷத்தில் சுகம் (1) அறியப்படுகின்றதா? (2) அன்றா?

(1) முதலாவது பக்ஷங்கூடாது; மோக்ஷகாலத்தில் சரீராதிகளின்மையின் அதனை (சுகத்தை)ப் பிரகாசிப்

பண்ணுவதற்குச் சாமக்கிரியின்றும். அங்ஙனம் பிரகாசிப்பிக்கச் சாமக்கிரி யில்லாவிடினும் அதன் ஞானத்தையொப்புக்கொள்ளும் பக்ஷத்தில் ஸம்சாரதசையிலும் அப்படியே நேரிடும்.

(2) இரண்டாவது பக்ஷமுங் கூடாது; ஏனெனின், அது (அறியப்படாத சுகம்) அபுருஷார்த்தமாயிடும். அறியப்படுஞ் சுகமே புருஷார்த்தமாம். சர்க்கரை தன்னைப் புசிக்கிறவனுக்குச் சுகத்தை யுண்டுபண்ணுவதுபோலும்.

(ச) விஷ்ணுபாவம் மோட்சமன்று; விஷ்ணு சந்நிதியிலிருந்து விஷ்ணுவை யறிவதுவே மோட்சமென்பது சில வைஷ்ணவர்களுடைய கொள்கை.

இதற்குச் 'சுதீர்த்தபாவாத்' என்னும் பதத்தாற் சமாதானங்கூறுகின்றார்.

சொப்பிரகாச ஞானசொரூபமா யிருப்பதால் நீசொன்னது பொருந்தாது.

சம்சாரதசையில் ஆத்மாவினுடைய சொரூபம் அவித்தையினால் மறைபட்டிருப்பதால் பரமானந்த வடிவமாகப் பிரகாசிக்கவில்லை. ஆயினும், தத்துவ வித்தையால் அவித்தியாநிவிர்த்தியுண்டாகச் சொப்பிரகாசமா யிருப்பதால் சுயமே பரமானந்தரூபமாகப் பிரகாசிக்கின்றது. அதற்குப் பிரகாசகாபேக்ஷையின்று.



(ங) சுகம் சொப்பிரகாசஞான சொரூபமா யிருந்தாலும் ஆத்மசொரூபமன்று. ஞானமென்பது * தாது (பகுதி) அர்த்தரூபமாகையால் கிரியாரூபமா யிருக்கின்றது; கிரியாரூபமாயிருப்பதால் ஆசிரயத்தோடு கூடியிருக்கின்றது. நான் அறிகின்றேனென்னும் பிரதீதியுண்டாவதாலும் நான் ஞானமாயிருக்கின்றேனென்னும் பிரதீதி யுண்டாகாமையாலும் ஞானம் ஆத்மாவாதல் கூடுமோ?

*(ச) இதற்கு 'அநந்யாசிரயத்வாத்' என்னும் பதத்தாற் சமாதானங் கூறுகின்றார்.

"யத்ஸாக்ஷாத் அபரோக்ஷாத் பிரஹ்ம— எந்தப் பிரஹ்மம் பிரத்தியக்ஷமாயிருக்கிறதோ", "அயமாத்மா சர்வாந்தர:—இந்தவாத்மா சர்வத்திற்கு முள்ளாயிருக்கிறது", "ஸத்தியம் ஞானம் அநந்தம்பிரஹ்ம", "விஞ்ஞான மாநந்தம் பிரஹ்ம"

என்றத் தொடக்கத்துச் சுருதிகளால் சொப்பிரகாச ஞானாநந்த வடிவமே ஆத்மா என்பது பெறப்படும்.

அந்தக்கரண முதலிய உபாதியின் தாதாத்மியாத்தியாசத்தாலும் அதன் விருத்தியின் ஞானத்தியாசத்தாலும் நான் அறிகிறேனென்று ஞானத்திற்கு ஆசிரயமான பிரதீதி பொருந்தும். தாத்வர்த்தமாகிய கிரியாரூபத் தன்மையும், உற்பத்தி விநாசமும் அந்தக்கரண விருத்திக்கேயாம்.

ஞப்திரூபமான முக்கிய ஞானம் ஸர்வாதிஷ்டான மாகையால் அன்னியத்தை ஆசிரயித்துக் கொண்டிருப் பதன்று; ஆகலின் த்வைதம் ஸம்பவிக்கமாட்டாது.

இதனால் ஞானசொரூபமாயும் ஸுகசொரூபமாயுமிருக் கின்ற ஆத்மா ஸத்தியமென்றும், அதனினும் வேறானவை யெல்லாம் அஸத்தியமென்றுஞ் சித்தித்தன.

---

## அவதாரிகை.

ஸர்வஜகத்தும் அஸத்யமாயின், அதனை நிஷேதிப்பதால் ஆத்மதத்துவ ஞானமுண்டாக மாட்டாது; சசவிஷாணம் (முயற்கொம்பு) நிஷேதிக்கப்படுவதின்று, ஓரிடத்தில் அறி யப்பட்டவஸ்து மற்றோரிடத்தில் நிஷேதிக்கப்படுவது நியா யம். ஆகவே, நிஷேதத்திற்கு வேறுவிதமான பொருத்த மின்மையின், ஜகத்து அஸத்யமன்றென்னும் ஆக்ஷேபத் திற்குத்தரங் கூறுகின்றார்.

*117. நசைகம் ததந்யத்த்விதீயம் குத: ஸ்யாத்
நவா கேவலத்வம் நசாகேவலத்வம் நசூந்யம்,
நசாசூந்யமத்வைதகத்வாத் கதம்ஸர்வவேதாந்தஸித்தம்
ப்ரவீமி. (10)

117. ஏகஞ்சந—ஒன்றுமில்லை,
ததந்யத்—இவ்வொன்றினும் வேறாய,



ஏகத்துவமாகிய (ஒன்றென்றன்மை யென்னும்) என் ணிக்கையோடு கூடியது ஏகம்; அபேக்ஷாபுத்தி ஜன்னிய மான த்வித்வ ஸங்கியையோடு கூடியது த்விதீயம்.

ஆகையால் ஒன்றிராதபக்ஷத்தில் இரண்டாவதிருக் கின்றதென்பது எங்ஙனம் பொருந்தும்?

த்விதீயமென்பது மூன்று முதலியவைகட்கும் உப லக்ஷணமாம். "ஏகமேவாத்விதீயம்" என்னுஞ் சுருதியினால் ஏகத்துவம் பிரதிபாதிக்கப் படுகின்றதென்று ஆக்ஷேபிப் பதும் சரியன்றென்று 'நவாகேவலத்வம்' என்பதனாற் சொல்லுகின்றார்.

த்விதீயம்—இரண்டாவது,
குத:—எக்காரணத்தால்,
ஸ்யாத்—இருக்கும்,
கேவலத்வம்வாந—ஏகத்துவமுமில்லை,
அகேவலத்வஞ்சந—அநேகத்துவமுமில்லை,
சூந்யம்ந—சூந்யமுமன்று;
அசூந்யஞ்சந—அசூந்யமுமன்று,
(அஃதாவது ஸத்தியத்துவ ஞானத்துவமுதலிய தர்மங்களு டன் கூடியதுமன்று)
அத்வைதகத்வாத்—த்வைதமின்மையின்,
கதம்—எப்படி,
ஸர்வவேதாந்தஸித்தம்—எல்லாவுபநிஷத்துக்களாலும் ஸித்திக்கப்பட்டிருப்பதை,
ப்ரவீமி—சொல்லுவேன்

'கேவலத்துவாத்'—மாத்திரம் இன்று; அஃது அவித்தியா சூன்னியமாயிருப்பதால்.

சுருதியினுல் ஆத்மாவிற்கு ஏகத்வம் பிரதிபாதிக்கப்படாத பக்ஷத்தில் அப்பிரயோஜன பிரத்தியக்ஷாதிப் பிரமாணவாத்தால் அநேகத்வமே ஏற்படுமென் றாசங்கிப்பதும் உசிதமன்றென்று 'நாகேவலத்வம்' என்பதனுற் சொல்லுகின்றனர்.

"நேஹநாநாஸ்திகிஞ்சந", "ஏகமேவாத்விதீயம்",

"அதாத ஆதேசோ நேதிநேதி—பிரகிருதியையால், இதுவன்று இதுவுமன்றென்றுபதேசம்" என்றற்றொடக்கத்தனாய் சுருதிகளால், அகேவலத்துவமும் (அநேகத்துவமும்) இன்றாம். ஆனுல் எல்லாவற்றையும் நிஷேதித்திருப்பதால் சூனியமாகவேயிருக்கவேண்டுமென்றாசங்கிப்பதும் உசிதமன்றென்று 'நசூன்யம்' என்பதனுற் சொல்லுகின்றார்.

சூன்னியம்—சூனியமன்று,

"அசந்நேவஸபவதி அஸத்பிரஹ்மேதி வேதசேத். அஸ்திபிரஹ்மேதி சேத்வேதா ஸந்தமேனம் ததோவிது:—எவன் பிரஹ்மத்தை யசத்தென்றறிகிறானே அவன் அசத்தாய் விடுகிறான். பிரஹ்மமிருக்கிற தென்றறிந்தானுயின் அவனைச் சத்தென்றறிகின்றார்கள்." "சத்தியம் ஞானம் அநந்தம்பிரஹ்ம", "சதேவ சோம்ய இதம் அக்ர ஆஸீத்—இது சிருஷ்டிக்கு முன் சத்தாகவே இருந்தது" என்று



உபக்கிரமித்த(தொடங்கி) "ஐததாத்மியமிதம் ஸர்வம் தத்ஸத்தியம் ஸ ஆத்மா தத்துவமஸி—இவ்வுலகமெல்லாம் அதன் சொரூபமே, அந்தக்காரணவஸ்து சத்தியம், அது ஆத்மா, அது நீ."

என்றற் றொடக்கத்தனா சுருதிகளால் அது சத்தியமென்று கூறியிருப்பதாலும், சகலப்பிராந்திக்கும் அதிஷ்டானமாயிருப்பதாலும், சர்வபாதத்திற்கும் அவதியாயிருப்பதாலுஞ் சூனியமன்றாம்.

ஆனுல் சத்தியத்துவம், ஞானத்துவம் முதலிய தர்மங்களுடன் கூடியதாகுமேயென் றாசங்கிக்கக்கூடாதென்று 'நசாசூன்யம்' என்பதனுற் கூறுகின்றார்.

அசூன்னியம்—சூனியமன்று.

ஏகம், அத்விதீயமென்று இரண்டுபதங்களால் சர்வபேதங்களும் நிஷேதிக்கப்படுதலால் ச(வ)காரத்தினுல் தர்மதர்மியாவாதி பேதத்தை நிஷேதித்திருப்பதால் மேற்கூறிய யாவற்றிற்குங் காரணத்தை 'அத்வைதகத்வாத்' என்பதனுற் கூறுகின்றார்.

இரண்டாயிருக்கின்றது துவிதம்; அதன் பாவம் துவைதம்.

"இரண்டோடு கூடியது துவிதம், அதன்பாவம் துவைதம்" என்று வார்த்திகத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது.

அந்தத் துவைதமானது எவ்விடத்திலில்லையோ அஃது அத்வைதமென்பது 'அத்வைதகத்வாத்' என்பதன் அர்த்தமாம்.

"ஏதவிலயதோ நிருத்தா அத்வைதா — ஜலம்போல் சின்மலமாயும் ஏகமாயும் அத்வைதமாயும் இருக்கின்றது சாக்ஷி"

என்று சுருதி யிருப்பதால், அபாவஞானத்தில் பிரதியோகி ஞானங் காரணமென்று சொல்வது இலாகவமா (எளிதிற்கோடலா) மையாலும், அவைதத்தை அதிர்வதீய மென்றெடுப்புக்கொண்டிருப்பதாலும், அது பிரத்தியக்ஷாதிப் பிரமாணங்கட்கு வேத்தியமா (அறியப்பட்டதா) யிருக்கின்றது. ஆகலின் அதன் (அவைதத்தின்) நிஷேதப்பொருளது மென்பது 'அத்வைதசுத்வாத்' என்பதன் பொருள்.

ஆனால் இத்தன்மையான ஆத்மா அங்குலி நிர்த்தேசத்தால் (விரலினாற் சுட்டிக் காட்டுதலால்) பிரதிபாதிக்கத் தக்கதென் றுசங்கிக்கக்கூடாதென்று 'சுதர் பிரவிர்' என்பதனாற் கூறுகின்றனர்.

'கிம்'" என்னும்பதத்திற்கு ஆக்ஷேபமென்றர்த்தம்.

அத்வைதமா யிருப்பதால் வாக்கிற்கு விஷயமாதல் இல்லை.

"அவசநேநைவ ப்ரோவச — சொல்லாமற் சொன்னார்."

"யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸாஸஹ — எதினின்றும் மனதுடன் வாக்கும் அறியாமல் திரும்புகின்றதோ", "நாவிஜ்ஞாதோ விஜ்ஞாதாரம் விஜா



நீயாத் — ஞானத்திற்கு (மனோவிருத்திக்கு) ப் பிரகாசமான சாக்ஷி சொரூபத்தை யறிய முடியாது" என்றற் றொடக்கத்து அச்சுருதிகளால் எங்ஙனம் (பிரமத்தினாத்துவத்தைத்) தொல்லக்கூடும்?

வாக்கிற்கு விஷயமின்றிப் போனால் அதன் விஷயத்தில் வேதாந்தங்கள் எங்ஙனம் பிரமாணமாகக் கூடுமென்று ஆக்ஷேபிப்பையாயின், அது கூடாது.

ஆத்மா அவிஷயமா யிருந்தாலும் அதன் ஆதாரமான விர்த்திமாத்திரத்தினால் அதன் அவித்தியா நிவிர்த்தியுண்டாவதால் வேதாந்தங்கள் பிரமாணமாமென்று 'சர்வ வேதாந்த சித்தம்' என்பதனாற் கூறுகின்றார்.

"யஸ்யாமதம் தஸ்யமதம் மதம்யஸ்ய நவேதஸ: அவிஜ்ஞாதம் விஜாநதாம் விஜ்ஞாதம் அவிஜாநதாம் என மனஸா நமநுதே யேநாஹு ர்மநோமதம் ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி நேதம் யதிதமுபாஸதே."

(இ-ள்.) எவனுக்குப் பிரமம் நன்றாக அறியப் படவில்லையோ அவனால் பிரமம் அறியப்பட்டது; எவனுக்குப் பிரமம் அறியப் பட்டதாக எண்ணமோ அவன் அறியாதவனே. அறிந்தோமென் றெண்ணுவோர்கட் கறியப் படாததாகவும், பிரத்தியக்ஷாதிப் பிரமாணங்களால் அறியப்படமாட்டாதென்றும் எண்ணுவோர்கட் கறியப்பட்டதாகவும், எது மனதினால் அறியப்பட மாட்டாதோ, எதனால் மனது அறியப்படுகின்றதோ அதனையே பிரமமென்றறி. எது இது இது வென்று உபாசிக்கப் படுகின்றதோ அதனைப் பிரமமென்றறிதல் கூடாது.

என்றற்றொடக்கத்துச் சுருதிகள் ஆத்மா அவிஷய மென்று காட்டுகின்றன. ஆகையால் சர்வ வேதாந்த சித்த மான வஸ்துவை எங்ஙனஞ் சொல்லுவேன்.

இங்ஙனம் வேதாந்த வாக்கிய ஜன்னிய அகண்டாகார விருத்தியினால் அவித்தை, அவித்தையாற் கற்பிக்கப்பட்ட அனர்த்தம் இவை நிவிர்த்தியாகவே பரமானந்த ரூபமுக்திப் பிராப்தியு மாகின்றதென்பது சித்தித்தது.

கஸ்தௌமிதம் வியாஸ மசேஷமர்த்தம் ஸமக்ர ஸூத்ரைரபியோ பபந்த | விநாபிதைஃ ஸங்கிரஹிதாகிலார்த்தந் தஞ்சங்கரம் நௌமி ஸுரேச்வரஞ்ச.

(இ-ள்.) எந்த வியாசர் எல்லாச் சூத்திரங்களாலும் சமஸ்த அர்த்தங்களையும் சொல்லவில்லையோ அந்தவியாசரை ஸ்தோத்திரஞ் செய்கின்றேன். சூத்திரமன்றிச் சமஸ்த அர்த்தங்களையும் சங்கிரகித்த சங்கராசாரியரையும் சுரேசுவராசாரியரையும் நமஸ்காரஞ் செய்கின்றேன்.

லகுரபி பஹ்வர்த்தவஹ:
சிந்தாமணிரிவ நிபந்தோயம், மதுஸூதநேந
முநினா விஹிதோ குணிநாம் விநோதாய.

(இ-ள்.) இந்தக்கிரந்தம் சிறியதா யிருப்பினும் வெகு அர்த்தத்தைக் கொடுக்கக்கூடியது; சிந்தாமணி போலும். இது மதுசூதன ரென்னுஞ் சந்நியாசியால் குணவான்களின் சந்தோஷநிமித்தஞ் செய்யப்பட்டது.



யதத்ர ஸௌஷ்டவம்கிஞ்சித் தத்குரோரேவ
மேநஹி யதத்ராஸௌஷ்டவம்
கிஞ்சித் தன்மமைவ குரோர்நஹி.

(இ-ள்.) இக்கிரந்தத்திலுள்ள குணம் என்குருவின் பாலது; தோஷமோ என்பாலதன்றிக் குருவின்பாலதன்று. (3

பஹுயாசநயா மயாயமல்போ
பலபத்ரஸ்ய நிதேஸிதோ நிபந்த:
யதிதுஷ்ட மிஹாஸ்தி யத்ஸுதுஷ்டம்
ததுதாரா: ஸுதியோ விவேசயந்து.

(இ-ள்.) ஆசாரியர்கட்குச் சேவகரான பலபத்திர ரென்னும் பேருள்ள பிரஹ்மசாரி பெரியகிரந்தங்களில் (வாக்குப்)பிரவிருத்தி யுண்டாகாமையின், எளிதிற் றத்துவ மறியவேண்டு மென்று பல முறை எம்மை வேண்டிக்கொண்டமையின், அவர் பொருட்டு இச் சிறுகிரந்தம் (எம்மால்) செய்யப்பட்டது.

இக்கிரந்தத்தில் குணதோஷங்க ளிருக்கின்றனவா வென்று அசூயை முதலிய தோஷமற்ற வித்துவான்கள் விசாரித்துப் பார்ப்பாராக.

ஸ்ரீபரமஹம்ஸ பரிவிராஜகாசாரிய விசுவேசுவர சரஸ்வதீ ஸ்ரீபாதசிஷ்ய ஸ்ரீமதுசூதன சரஸ்வதி ஸ்வாமிகளால் அருளிச்செய்யப்பட்ட சித்தாந்தபிந்து வென்னும் கிரந்தம்

முற்றிற்று.

குருவே துணை.



ஓம்

தத்சத்

பராபரவஸ்துவே நம:

சகம்.

இருளெனுமில்லை பகலுமில்லை யொளிருத்தேசமில்லை காலமில்லை
புத்தியுமில்லை யிந்திரியமில்லை புகன்றவைகளின் றிரளுமில்லை
மெய்யுமேவிய சாரமேவி விராப்பதாலிச் சுழுத்தியின்
மீதியாயுள பூரணச் சோதியான சிவோகமே. (க)

சாதியுமில்லை யாதொரு ரூபமில்லை சத்தியாச்சிரம தருமமா
நீதியுமில்லை நாமமுமில்லை நித்தியாசன யோகமே
மாதியுமில்லை கற்பனையாம் வாதவாதிய மாதலாற்
சோதியாயதில் நின்ற பூரண சத்தரூப சிவோகமே. (௨)

இந்தசாயில் தேவருமில்லை தன்றுமேனைய கருவுமில்லை
சந்தேகங்கணுமில்லையாகங்கள் சகலதீர்த்தம் கருவுமில்லை
வெசர்க்கமற்ற சுழுத்தியிற்பெருட ராசக்குண வாண்மகா
வர்த்தபூரண சத்தியகேவல ஞானசித்த சிவோகமே. (௩)

யாதுமில்லை பாஞ்சராத்திர முமில்லை
பன்னுசாங்கிய சைவமுமில்லை புலனுணர்ந்த மதமில்லை
...றுசைவம் மாருசையுமில்லை சித்தமாய சொரூபமாய்ப்
...ஞானிகள் தபவம்பிர பிரமமென்ற சிவோகமே.
...மேயுற நின்ற பூரணப் (௪)

...வுன்னிப்பட்ட முமில்லை
குருமேவில்லை சீடனுமில்லை யாமிழுக்கில்லை மேற்கிலை
...கலமேமது விக்குமைக்கில்லை கண்டபிற் கனவேவளரூபமாய்ச்
கனமென்ன நிறைந்தகண்ட சிவோகமே.
சகளச்சக நாதபோத விநோதத்த (௫)

வெள்ளையுமில்லை கருமையுமில்லை வேறுமிக செம்மையில்லை
குள்ளமுமில்லை நெடியதுமில்லை குறைவெருக்க [illegible]
கள்ளமிகுந்த [illegible] ஞானமொழி சொருபர்
பள்ளமுறாத ஞானமிக்க பரம்பொருளே [illegible]. (க)

சாத்திரங்களாய் போதிப்பானில்லை சாத்திரம்படிப்பானில்லை
சாத்திரமில்லை படைப்புமில்லை சாத்திரமில்லை காணில்லை
சாத்திரமாதி சாத்திரங்களை [illegible] [illegible]
சாத்திரப்பொருளாயிருப்பவன் [illegible] போத [illegible]. (உ)

[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] ஞானமிக்க [illegible]
[illegible] [illegible] [illegible]. (ங)

அறிவிலாப்பவர் [illegible] [illegible] ஒன்றதாம்
[illegible] [illegible] வேதமென்றைத்தொட [illegible]
[illegible] [illegible] [illegible] [காம்
[illegible] [illegible] [illegible] [illegible]. (ச)

இல்லையென வொருஞ்சொல்லாது இரண்டென்றுசொல்லுமில்லை [illegible]
இல்லையெனல் [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] தோன்றவைப்பதுபோலவா. ()

இது இருவிடைமருதூர்ப் பிட்சாடனரிடின் ஸ்ரீ உலகநாத சுவாமிகளவர்களால் சம்ஸ்கிருதத்தினின்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.